இரண்டாம்பதிப்பு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 91 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 13, சனிக்கிழமை 25.02.2017

## கொழும்பு தனியார் வைத்தியசாலையில் விமல்ராஜ் அனுமதி

மட்டக்களப்பு, பெப்.25
இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை யொன்றுக்கு மாற் >> 24

## மக்கள் போராட்டத்தின் பயனாக

# விடுவிக்கப்பட்டது பரவிப்பாஞ்சான்

## காணிகளை விட்டு நேற்று வெளியேறியது இராணுவம்

கிளிநொச்சி, பெப்ரவரி 25
வடக்கில் நிலங்களை விடுவிக்குமாறு கோரி மக்கள் முன்னெடுத்துள்ள அறவழிப் போராட்டங்களுக்கு முதலாவது வெற்றி கிடைத்துள்ளது. கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் தாம் கையகப்படுத்தி வைத்திருந்த காணிகளை விட்டு நேற்று வெளியேறினர் இராணுவத்தினர்.
இதனையடுத்துப் பரவிப்பாஞ்சான் மக்களின் அறவழிப் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது. >> 24



## எம்மை நாமே ஆள அதிகாரம்வேண்டும்

அமெ. காங்கிரஸிடம் கூட்டமைப்பு வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், பெப். 25
நாங்களே எங்களை ஆளும் விதத்தில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். சரியான முறையில் அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு அரசுக்கு >> 22

## அரசியல் தேவைக்காக தமிழ் மக்கள் பேரவை

சிவில் சமூக உறுப்பினர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், பெப். 25
தமிழ் மக்கள் பேரவையை அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்த வேண்டாம் என்று, பேரவையிலுள்ள கட்சித் தலைவர்களுக்கு, பேரவையின் சிவில் தலைமைகளால் அறிவுறுத்தல் >> 24

## விமல்ராஜ் மீதான சூடு; நேற்றும் போராட்டம்

களுவாஞ்சிக்குடி, பெப்.25
காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து கிழக்கில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
நேற்றுக் காலை களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் சிலை முன்பாகப் பட்டிருப்புத் தொகுதி தமிழ்ச் சமூகம் எனும் அமைப்பினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (விரிவு: பக். 11)

## புதிய அரசமைப்பு: அரசு இன்னமும் தீர்மானமில்லை

கொழும்பு,பெப்.25
தேசியப் பிரச்சினைக்கான அரசியல்தீர்வை ஒற்றையாட்சியின் அடிப்படையில் தயாரிப்பதா அல்லது சமஷ்டி அடிப்படையில் தயாரிப்பதா என்று அரசு இன்னும் தீர்மானத்துக்கு வரவில்லை. ஆனால், அரசியல் வங்குரோத்து அடைந்தவர்கள் சமஷ்டி தான் என்று முடி[illegible]டுத்துவிட்டனர். அதன் அடிப்படையில் பரப்புரையையும் மேற்கொண்டு வருகின்றனர்.
—இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார். (விரிவு: பக். 11)

## விடு என்று கத்தினீர்கள் உடனடியாக கொட்டில் போடுங்கள்

பரவிப்பாஞ்சான் மக்களிடம் நேற்றுக் கூறினர் படையினர்

கிளிநொச்சி, பெப். 25
காணிகளை விடு விடு என்று கத்தினீர்கள். காணிகளை விடுவித்துள்ளோம். உடனடியாகக் கொட்டில் போட்டு இருங்கள்.
இவ்வாறு பரவிப்பாஞ்சான் மக்களிடம் தெரிவித்தனர் இராணுவத்தினர்.
பரவிப்பாஞ்சான் பகுதி மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறுகோரி கடந்த திங்கட்கிழமையிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுக் காணிகளை விடுவிப்பதாக அறிவித்துப் படையினர் வெளியேறத் தொடங்கினர். இதனை அடுத்து >> 24

## பரவிப்பாஞ்சான் விடுவிப்பு எமக்கு நம்பிக்கை தருகிறது

புதுக்குடியிருப்பில் போராடும் மக்கள் தெரிவிப்பு



முல்லைத்தீவு, பெப். 25
கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட்ட செய்தி கேட்டமை எமக்கு >> 24

## காது கேளாத மைத்திரி கண் தெரியாத ரணில்

காட்டமாகத் தெரிவித்தார் மனோ



கொழும்பு, பெப். 25
நாட்டின் நிதிச் சிக்கல் காரணமாகத் தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சுக்குப் போதுமானநிதிகிடைக்கவில்லை. போதிய நிதியை நாட்டின் அரச தலைவர் மைத்திரி பால >> 24

## காரில் கடத்திய கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், பெப் 25
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் காரில் கடத்தப்பட்ட [illegible] கிலோ கேரளக் கஞ்சாவை நேற்று அதிகாலை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதனைக் கடத்திய குற்றச்சாட்டில் வடமராட்சியைச் சேர்ந்த கார்ச்சாரதியும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டனர். (விரிவு: பக். 11)




ஜெனிவாவில் நல்ல பெயரெடுக்க அரசின் தந்திரோபாயம் பாருங்கோ...

## ஐங்கரநேசனிடம் நேரில் விசாரணை

மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்திய லிங்கநாதனும் நேற்று முன்னிலை

யாழ்ப்பாணம், பெப். 25
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேற்று அவரிடம் நேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனும் விசாரணைக் குழு முன்னிலையில் நேற்று முன்னிலையானார். >> 24

## தளராது போராடுகின்றனர் பிலக்குடியிருப்பு மக்கள்



முல்லைத்தீவு, பெப். 25
பிலக்குடியிருப்புப் பொதுமக்கள் முன்னெடுத்து வரும் தொடர் அறவழிப் போராட்டம் 25ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. அவர்களது போராட்ட >> 24



## பிலக்குடியிருப்பு மக்களுக்கு காத்தான்குடியிலும் ஆதரவு

காத்தான்குடி, பெப்.25
முல்லைத்தீவு - பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று மட்டக்களப்பு காத்தான்குடியில் ஜும்மா தொழுகைக்குப் பின்னர் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் பெற்றது. >> 22

## விமல்ராஜ் கொலை முயற்சி; 5 சிறப்புப் பொலிஸ் குழுக்கள் விசாரணை

மட்டக்களப்பு, பெப்.25
காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காகக் கொழும்பிலிருந்து 5 சிறப்புப் பொலிஸ் குழுக்கள் மட்டக்களப்புக்குச் சென்று விசாரணைகளில் ஈடுபட்டுள்ளன. இதுவரை குடும்ப உறுப்பினர்கள் உட்பட சுமார் 20 பேருக்கு மேற்பட்டோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. >> 24

## தகுதியான வேட்பாளரைப் புறக்கணித்து துணைவேந்தர் தேர்தலை நடத்தாதீர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைச் சமூகம் போர்க்கொடி

யாழ்ப்பாணம், பெப். 25
தகுதியான வேட்பாளரைப் புறக்கணித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்பதவிக்கானதேர்தலை நடத்தவேண்டாம் என்று யாழ்ப்பாணப் பல்கலைச் சமூகம் பல்கலைப் பேரவையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
துணைவேந்தர் தேர்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. தேர்தலில் போட்டியிடுபவர்கள் தமது திட்டங்கள் உள்ளிட்ட விடயங்களைப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் கூட்டத்தில் தனித்தனியே முன்வைப்பார்கள். அவர்கள் >> 24

## கஜேந்திரகுமாரை கடும் சொற்களால் விமர்சித்த சம்பந்தன்

யாழ்ப்பாணம், பெப். 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் காரசாரமாக-கடும் >> 22

# தலைக்கவசம் அணிவது தொடர்பில் புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு

## வர்த்தமானியில் அறிவித்தது போக்குவரத்து அமைச்சு

கொழும்பு, பெப். 25
மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலைக்கவசம் பயன்படுத்தும் முறை உட்பட 10 விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினமிரவு வெளியிடப்பட்டது.
2003ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளாக இவை குறிப்பிடப்பட்டுள்ளன என்று போக்குவரத்து துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
✦ இந்த ஒழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மோட்டார் வாகன (பாதுகாப்பான தலைக்கவசங்கள்) ஒழுங்குவிதிகள் என்று எடுத்துக்காட்டப்படலாம்.
✦ மோட்டார் சைக்கிளொன்றை ஓடுகின்ற அல்லது மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏற்றிச் செல்லப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் பாதுகாப்பான தலைக்கவசம் ஒன்றை அணிதல் வேண்டும்.
✦ பாதுகாப்பான தலைக்கவசம்
அ. அணிபவரின் தலைக்கு அளவானதாக இருத்தல் வேண்டும்
ஆ.நாடிப்பட்டியுடன் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்
இ.சுற்றுப்புறப் பார்வைக்கு முட்டுக்கட்டையாக இராத வகையில் முகத்தை காட்டி நிழற்சாயமிடப்பட்ட அல்லது நிழற்பூச்சிடப்பட்ட மூலப்பொருள் ஒன்றினால் ஆக்கப்படாத கவசமுகத்தகடு ஒன்றுடன் பொருத்தப்படுதல் வேண்டும்.
✦ பாதுகாப்பான தலைக்கவசம் ஒன்றை அணியும் போது, அதன் பாகம், நீட்சி அல்லது இணைப்பு எதுவும் அணிபவரின் முகத்தின் ஏதேனும் பாகத்தை தெளிவற்றதாக வைத்தலோ, மறைத்து வைத்தலோ அல்லது உருமாற்றுதலோ ஆகாது.
✦ பாதுகாப்பான தலைக்கவசமும் நாடிப்பட்டியும் அவற்றை சுற்றி கூரான விளிம்புகள், கூரான இடங்கள், பொருத்துகள், ஆணிகள் அல்லது செருகு ஊசி எவையும் இன்றி ஒரே ஒரு அலகில் இருத்தல் வேண்டும்
✦ பாதுகாப்பான தலைக்கவசத்தின் நிறம் அதனது வெளிமேற்பரப்பிலிருந்து ஏதேனும் ஒளித்தெறிப்பு எதுவும் இன்றி சுலபமாக பார்க்கக்கூடியதாக தொண்ணூறு சதவீதம் தனியொரு நிறத்தில் இருத்தல்வேண்டும்.
✦ மோட்டார் சைக்கிள் ஒன்றை ஓடுகின்ற ஆளொருவரினால் அணியப்படும் அல்லது பயன்படுத்தப்படும் பாதுகாப்பான தலைக்கவசம் ஒவ்வொன்றும் இலங்கைத் தராதரம் 517:1994 என்பதற்கு அல்லது காலத்துக்குக் காலம் பாதுகாப்பான தலைக்கவசங்களுக்கு ஏற்புடையதாக இருக்கக் கூடியதான அத்தகைய தராதரங்களுடன் இசைந்தொழுகுதல் வேண்டும்.
✦ அ. ஆள் எவரும் மோட்டார் சைக்கிள் பந்தய ஓட்டத்தில் மோட்டார் சைக்கிளை ஓடுவதைத்தவிர ஏதேனும் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை ஓடுகின்ற நோக்கத்துக்காக இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுடன் இசைந்தொழுகாத ஏதேனும் தலைக்கவசத்தை பயன்படுத்தலோ விற்பனை செய்தலோ அல்லது விற்பனை செய்வதற்கு முனைதலோ ஆகாது.
✦ மோட்டார் சைக்கிள் பந்தய ஓட்டம் ஒன்றுக்காக மோட்டார் சைக்கிளை ஓடுகின்ற ஆளொருவர் அவசியமான பாதுகாப்பான சக்கர இயக்க மாற்றுக்கருவி (கியர்) இன்றி ஓட்டத்தில் பங்குகொள்ளுதல் ஆகாது.
✦ ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றொராம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதிய 644/26 ஆம் இலக்க அதிசிறப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு தலைக்கவசங்கள்) ஒழுங்கு விதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.
✦ இந்த ஒழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி "நாடிப்பட்டி" என்பது அணிபவருடைய நாடிக்கு அல்லது கீழ் தாடைக்கு கீழ் செல்கின்றதும் மோதுதலில் அணிபவருடைய தலையில் தலைக்கவசத்தை வைத்திருப்பதற்கு உட்கருதப்படுகின்றதுமான 20 மி.மீ அகலத்துக்கு குறையாத ஒரு பட்டி என பொருள்படும்.
அத்துடன் "கவசமுகத்தகடு" என்பது கண்களுக்கு மேலே நீடிக்கின்றதும் அணிபவரின் முகத்தின் பாகத்தை அல்லது முகம் முழுவதையும் மூடுகின்றதுமான ஒரு ஒளிபுகவிடுகின்ற பாதுகாப்புத் திரை எனப் பொருள்படும் - என்றுள்ளது. (வ-4)

# வீரவன்ச மீது மகிந்தவுக்கு பெரியளவில் நம்பிக்கை

கொழும்பு, பெப். 25
'விமல் வீரவன்ச சுதந்திர முன்னணியில் இருந்து விலகினாலும் எங்களுடனேயே இருப்பார். ஒருபோதும் பிரிந்து செல்ல மாட்டார்'
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



நாரஹேன்பிட்ட அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
'தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகினாலும் கூட்டு எதிர்க் கட்சியுடன் தொடர்ந்தும் இருப்பார். இதே போன்றே இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும், தூய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவும் கூட்டணியிலிருந்து விலகி தற்போது கூட்டு எதிர்க் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள். தற்போது இவர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது' என்று மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.
(வ-10)

### ஸ்னோவ்டனுக்கு அடைக்கலம் கொடுத்த விவகாரம்

# இலங்கை அகதிகளை விசாரிக்க ஹொங்கொங் விரைந்தது சிஐடி

கொழும்பு, பெப். 24
அமெரிக்க புலனாய்வு இரகசியங்களை வெளியிட்ட எட்வேர்ட் ஸ்னோவ்டனுக்கு அடைக்கலம் வழங்கியதாகக்கூறப்படும் இலங்கை அகதிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கொழும்பு புலனாய்வு அதிகாரிகள் குழு ஹொங்கொங் நாட்டுக்குச் சென்றிருப்பதாக சீன ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
அமெரிக்காவின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான எட்வர்ட் ஸ்னோவ்டன், அமெரிக்க தேசிய பாதுகாப்புக் குறித்த தகவல்களை வெளியிட்டமைக்காக தேடப்பட்டு வந்தவராவார். 2013ஆம் ஆண்டு ஹொங்கொங்கில் இலங்கை அகதிகள் தங்கும் பகுதியில் எட்வர்ட் ஸ்னோவ்டன் தலைமறைவாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு அடைக்கலம் வழங்கிய இலங்கை அகதிகளை, அமெரிக்காவின் ஊடகங்கள் செவ்வி கண்டு செய்தி வெளியிட்டிருந்தன.
இலங்கை அகதிகளின் பாதுகாப்பில் இருந்த ஸ்னோவ்டன் பின்னர் அங்கிருந்து வேறொரு நாட்டுக்குத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து தமது அனுபவத்தைப் பகிர்ந்துள்ள ஸ்னோவ்டன், தாம் எதிர்நோக்கியுள்ள அபாயங்களை விட, இலங்கை அகதிகள் அதிக அபாயங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்திருந்தார்.
(வ-5)

# வடக்கு — கிழக்கிலிருந்து ராணுவம் வெளியேற்றப்படுவது கட்டாயம்

## ஐ.நா. நிபுணர் அறிக்கை

கொழும்பு, பெப். 24
வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவம் அகற்றப்படுவது - வெளியேற்றப்படுவது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமானது. அது மட்டுமன்றி ஒரு அடையாளத்துக்காகவும் செய்யப்படவேண்டும்.
இவ்வாறு சிறுபான்மை மக்கள் தொடர்பான விடயங்களை ஆராயும் ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் றீட்டா ஐசாக் நாடியா தெரிவித்தார்.
இலங்கைக்குக் கடந்த ஆண்டு பயணம் மேற்கொண்டிருந்த சிறப்பு அறிக்கையாளர், இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு முன்வைத்துள்ளார். அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்துவதை நியாயப்படுத்த முடியாத காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டும். எந்தவிதமான முறையான செயற்பாடும் இன்றியும் இழப்பீடு இன்றியும் அபகரிக்கப்பட்ட காணிகள் மீள் வழங்கப்பட வேண்டும் அல்லது இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவம் அகற்றப்படுகின்றமையானது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமானது மட்டுமன்றி ஒரு அடையாளத்துக்காகவும் செய்யப்பட வேண்டும்.
வடக்கில் படையினர் வசம் காணப்படுகின்ற பொதுமக்களின் 6 ஆயிரத்து 124 ஏக்கர் காணிகள் உடனடியாக முதன்மை அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும். கரையோரப் பிரதேசங்களில் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.
1990ஆம் ஆண்டு புலிகள் அமைப்பால் வெளியேற்றப்பட்ட மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். இதற்காக அரசும் பன்னாட்டுச் சமூகமும் தேவையான நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுக்க வேண்டும். இந்த விடயத்தில் ஐ.நா.வின் இடம்பெயர் மக்கள் தொடர்பான பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (வ-5)

# களுத்துறை படகு விபத்து; படகோட்டி நேற்றுக் கைது

கொழும்பு, பெப். 25
பேருவளைக் கடலில் நடந்த விபத்துத் தொடர்பாக படகைச் செலுத்திச் சென்ற படகோட்டி நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
பேருவளை புனித லாசர் தேவாலயத் திருவிழாவுக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை படகில் சென்று கொண்டிருந்தபோது, அந்தப் படகு கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இதன் போது, 16 பேர் உயிரிழந்திருந்தனர்.
இந்த விபத்துக்குள்ளாகிய படகைச் செலுத்திச் சென்ற படகோட்டியான பேருவளை, போகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய புஞ்சிஹேவாகே தினேஷ் ருவன் என்பவரே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# மோ. சைக்கிள் பேரணி நேற்று நடைபெறவில்லை

பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் தங்கள் வாழ்விடங்களை விடுவிக்கக் கோரி தொடர் அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களுக்கு ஆதரவாக நேற்றைய தினம் நடைபெற இருந்த மோட்டார் சைக்கிள் ஆதரவுப் பேரணி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.
வடக்கு முழுவதுமுள்ள இளையோரின் இன்றைய போராட்டத்தை முன்னிட்டே இந்தப்பேரணி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டள்ள மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் வட பகுதியில் இருந்து இளைஞர்கள் கறுப்புத் துணிகளைக் கட்டிய வண்ணம் 12 மணியளவில் பிலக்குடியிருப்புப் பகுதிகளில் ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்து. வடக்கு மாகாணத்தின் சகல இடங்களில் இருந்தும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஒன்றுகூடி மாபெரும் தொடர் அறவழிப்போராட்டத்தை இன்று முன்னெடுக்க இருப்பதனால் நேற்றைய தினம் நடைபெற இருந்த மோட்டார் சைக்கிள் பேரணி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# சப்ரகமுவ பல்கலை வேந்தர் உட்பட ஐவர் விபத்தில் காயம்

கொழும்பு - கண்டி முதன்மை வீதியில் கடுகண்ணாவப் பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் கும்புரகமுவே வஜிர தேரர் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர். வெவ்வேறு விபத்துக்களில் நேற்று 16 பேர் காயமடைந்தனர்.
பல்கலைக்கழகத் தரப்பினர் பயணித்த ஜீப் வண்டி பாதையை விட்டு விலகியதால் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
காயமடைந்தவர்கள் மாவனெல்ல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதேவேளை, மொனராகலை - பிபில பிரதான பாதையில் ஹுலங்தாவ பிரதேசத்தில் இடம்பெற்ற வான் விபத்தில் 11 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
வெல்லவாய திசை நோக்கிப் பயணித்த வான், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாதையைவிட்டு விலகி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் கூறினர். விபத்தில் 5 பெண்கள், 3 சிறிய குழந்தைகள், மற்றும் சாரதி உட்பட 3 ஆண்களும் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

# காணாமற்போனோரைத் தேடி வவுனியாவிலும் கவனவீர்ப்பு

## கிளிநொச்சியிலும் 5ஆம் நாளாக தொடர்கின்றது போராட்டம்

வவுனியா, பெப்.25

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது. அதே நேரத்தில் காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவிலும் நேற்று மீண்டும் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

காணாமற்போன தமது உறவுகளை தேடித் தருமாறு கோரிக்கை விடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உறவினர்கள் கடந்த திங்கட்கிழமை தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் மக்களுக்குத் தேவையான உணவுகளை வழங்கினர்.

நேற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்களின் பூசகர்கள் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதேவேளை, காணாமற்போன தமது உறவுகளைத் தேடித் தருமாறு கோரிக்கை விடுத்து வவுனியாவிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், உறவுகள் போராட்டத்தை ஆரம்பித்தனர். சிறப்பு பூசை வழிபாடுகளின் பின்னர் பேரணியாக மணிக்கூட்டுக் கோபுர வீதி ஊடாக வந்து தபால் நிலைய விடுதிக்கு முன்பாக அமர்ந்திருந்து உறவுகள் தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர்.






**பின்னணி**

வவுனியா மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தினர் கடந்த மாதம் 23ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். நான்கு நாள்கள் போராட்டம் தொடர்ந்தது. 4ஆவது நாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் வாக்குறுதியை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. இது தொடர்பாக கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலில் முடிவு ஏதும் எட்டப்படவில்லை. இந்த நிலையில் நேற்று இரண்டாம் கட்டமாகப் போராட்டம் ஆரம்பமானது. (து-21)



# யானைக் கொலைகள் வவுனியாவில் உயர்வு

## தந்தங்களைக் களவாடும் முயற்சி எனச் சந்தேகம்

வவுனியா, பெப்.27

வவுனியா மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் தொடர்ச்சியாக யானைகள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அவற்றின் தந்தங்களும் களவாடப்படுகின்றன.

நேற்றுமுன்தினமும் வவுனியா - குடாகச்சக்கொடிதுட்டுவ பொலிஸ் அரணுக்கு 100மீற்றருக்கு அப்பால் 5 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது வவுனியாவில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவமாகும். இதற்கு முன்னர் வவுனியா - நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒலுமடு காட்டுப் பகுதியில் கடந்த மாதம் யானை ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டு அதனுடைய தந்தங்கள் களவாடப்பட்டிருந்தன. அத்தோடு யானை எரியூட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக மக்கள் பிரதேச செயலாளருக்கு வழங்கிய தகவலை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கும், அனுராதபுரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் மற்றுமொரு யானை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது.

"யானையின் நெற்றியில் சுடப்பட்டுள்ளது. இரவு வேளை சுடப்பட்டிருக்கலாம். எனினும், யானை எதற்காகக் கொல்லப்பட்டது என்பது பற்றிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. யானையைப்பகுப்பாய்வுமேற்கொள்வதுக்கு வனவளத் திணைக்களத்தினர் அநுராதபுரத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்" எனப் பொலிஸார் தெரிவித்தனர். (து-21)

# கஞ்சா வைத்திருந்ததாக கைதானார் இளைஞர்

யாழ்ப்பாணம், பெப். 25

வல்வெட்டித்துறைப் பகுதியில் தனது உடமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் வல்வெட்டித்துறை உடுப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்றது.

ரோந்து நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர் ஒருவர் நடமாடுவதைப் பொலிஸார் அவதானித்தனர். அந்த நபரை உடனடியாகக் சோதனையிட்ட போது 250கிராம் கஞ்சா வைத்திருந்தமை தெரியவந்தது. அவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. கைது செய்யப்பட்ட நபர் உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

(து-10-26)

# கீரிமலையில் மாவா விற்றவர் கைதானார்

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயச் சூழலில் வைத்து மாவா பைக்கெற் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனக் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் தெல்லிப்பழையைச் சேர்ந்த 18 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்றுக் கீரிமலை நகுலேஸ்வரத்தில் தேர் உற்சவம் இடம்பெற்றது. உற்சவத்தின் போது மாவாபாக்கு பைக்கெற் விற்பனை செய்யப்படுவதாக சிறப்புப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து மாவா பைக்கெற்றுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனப் பொலிஸார் கூறினர். (து-10-26)

# கஞ்சாவுடன் கைதானோர் பொலிஸ் தடுப்பில்

யாழ்ப்பாணம், பெப். 25

பருத்தித்துறைக் கடற்பரப்பில் 158 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் முதல் இந்த வருடம் நேற்று வரை 700 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை வடக்குக் கடற்பரப்பில் கைப்பற்றியுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்தது.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்கு இடமாகக் காணப்பட்ட படகைக் கடற்படையினர் சோதனையிட்ட போது அதில் கஞ்சா போதைப்பொருள் இருந்தமை கண்டறியப்பட்டது.

படகில் பயணித்த 3 பேருடன் குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் 2 பேருமாக 5 பேர் கைது செய்யப்பட்டு விசாரணையில் உள்ளனர்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த செ.தவறஞ்சன், செ.செந்தூரன், செ.மோகனதாஸ், உ.கபிலன் ஆகியோருடன் மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்களுடன் பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா, படகு என்பன காங்கேசன் துறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (து-4-26)

# பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுக்க ஆணைக்குழு

## ஜெனிவா அமர்வுக்கு முன் கொழும்பின் அவசர ஏற்பாடு

கொழும்பு, பெப். 24

இலங்கையில் பரந்தளவில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மீது நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேசிய ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளதாக அரசு தெரிவித்தது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் இராணுவத்தினராலும், அரச அதிகாரிகளாலும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாக, எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து, அரசு இந்த அவசர அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகத்தின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். எனினும், இராணுவம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது அமர்வு திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த விவகாரம் அரசுக்கு நெருக்கடியாக அமையலாம் என்பதைக் கருத்தில் கொண்டே, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான தேசிய ஆணைக்குழுவை அமைக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

பெண்களுக்கு எதிராகக் குற்றமிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் என்றும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

# பன்னாட்டு முதலீடுகளின்போது பிராந்தியப் பாதுகாப்பில் கவனம்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் அரச தலைவர் மைத்திரி எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், பெப். 25
புவியியல் ரீதியில் இலங்கை முக்கிய அமைவிடத்திலுள்ளது. கப்பல் போக்குவரத்தில் மட்டுமன்றி இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பிலும் பங்களிப்புச் செய்ய முடியும். இலங்கை பெரிய பன்னாட்டு முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும்போது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் எடுக்கும்.

இவ்வாறு அரசு தலைவர் மைத்திரி பால சிறிசேன, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த இரண்டு ஆண்டுகளில் கூட்டு அரசின் பயணம் மற்றும் அதன் வெற்றியைப் பாராட்டிய காங்கிரஸ் உறுப்பினர்கள், தற்போது மேற்கொண்டு வரும் நல்லிணக்கச் செயற்பாடுகள், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளையும் பாராட்டினார்கள்.

ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துதல் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையின் புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அரச தலைவர் மைத்திரி தெரிவித்தார்.

நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்படுவதனைத் தவிர்த்து, நாட்டில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்திய அரச தலைவர், நாட்டில் நல்லிணக்கத்தைப் பலப்படுத்துதல், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதாரச் சுபீட்சத்தை ஏற்படுத்தி அனைத்து மக்களும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே தற்போதைய அரசின் குறிக்கோளாகுமெனவும் தெரிவித்தார்.

புவியியல் ரீதியில் இலங்கை முக்கிய அமைவிடத்திலுள்ளதனால் கப்பல் போக்குவரத்தில் மட்டுமன்றி இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பிலும் பங்களிப்புச் செய்யமுடியுமெனத் தெரிவித்த அரச தலைவர், இலங்கை பெரிய வெளிநாட்டு முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும்போது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் கவனமெடுப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கைப் படையினருக்காக ஐக்கிய அமெரிக்காவில் வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புக்கள் கடந்த காலத்தில் நிறுத்தப்பட்டிருந்தாலும் மீண்டும் அந்த வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில் நன்றி தெரிவித்த அரச தலைவர், கடற்படையினருக்கான பயிற்சிகளை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதிகளவிலான அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் நாட்டுக்கு வருகை தந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதுவொரு முக்கியமான சந்தர்ப்பமெனக் குறிப்பிட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள், அடுத்த அமெரிக்கப் பயணத்தின்போது காங்கிரஸ் பேரவைக்கும் வருகை தருமாறு அரச தலைவருக்கு அழைப்பு விடுத்தனர் - என்றுள்ளது.

(து-5)

# இலங்கைக்கு அவகாசம் வழங்கவே கூடாதென்று ஜெனிவாவில் கூறுவோம்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.பெப்.25
போர்க்குற்றங்களுக்குப் பன்னாட்டு நீதி விசாரணை தேவை. இந்த விடயத்தில் இலங்கைக்கு எந்தவிதமான அவகாசத்தையும் வழங்கக் கூடாது என்பதை நாமும் ஜெனிவாவில் உரைப்போம். இன்னும் இரண்டு வாரங்களில் இதை நாம் உரத்துக் கூறுவோம்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 69ஆவது பிறந்த தினத்தைச் சிவாஜிலிங்கம் தனது அலுவலகத்தில் நேற்றுக் கொண்டாடினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த காலங்களில் அவருக்கும் ஈழத் தமிழர்களுக்குமிடையில் சில முரண்பாடுகள், பிரச்சினைகள் இருந்தாலும் கூட அவர் எங்களுக்குப் பல நல்ல விடயங்களைச் செய்திருக்கிறார்.

இலங்கைப்போர் உச்சக் கட்டத்தை அடைந்தபோது அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் எவ்வாறு எமது போராட்டத்துக்குக் கோடான கோடி பணத்தைக் கொடுத்து உறுதுணையாக இருந்தாரோ அதுபோல் தான் அம்மாவும் இருந்துள்ளார்.

அதுமட்டுமல்ல அமெரிக்காவின் அயலுறவு அமைச்சராக இருந்த கிலாரி கிளின்டனை வீட்டுக்கு அழைத்து பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணை தேவை, பன்னாட்டு நீதி விசாரணை தேவை, பொது வாக்கெடுப்பு அவசியம் எனக் கூறியிருந்தார்.

உலகத் தமிழ் மக்களுக்கெல்லாம் அம்மாவாக இருந்த அம்மையாரின் பிறந்த தினத்தில் போரால் பாதிக்கப்பட்ட 69 முன்பள்ளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பேசும் மடிக் கணனிகளை இன்னும் மூன்று மாதத்தில் கொடுக்க இருக்கிறேன்.

இவை இந்த வருடத்துக்கான என்னுடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் வழங்கப்படும்-என்றார்.

(து-ரி-26)



மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்தில் மகா சிவராத்திரி வழிபாடு நேற்றிரவு நடைபெற்ற போது...

# தலைமை நீதியரசர் ஸ்ரீபவன் நீதிச் சேவையிலிருந்து செவ்வாயன்று ஓய்வு



கொழும்பு, பெப். 25
தலைமை நீதியரசர் கே.ஸ்ரீபவன் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புச் சபையின் பரிந்துரையில் புதிய நீதியரசர் ஒருவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் அடுத்த வாரம் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப் பட்டது.

நீதிச் சேவை ஆணைக்குழுவில் சேவை மூப்பு அடிப்படையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரசாத் டெப் மற்றும் ஈவா வனசுந்தர ஆகியோர் தலைமை நீதியரசர் பதவிக்கான தகுதிகளை கொண்டுள்ளனர். எனவே இவர்களில் ஒருவர் தலைமை நீதியரசராக நியமிக்க அரசமைப்புச் சபை பரிந்துரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் தலைமை நீதியரசராக கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட்டார்.

(வ-10)

# 35ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், பெப். 25
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறும் என்று தலைவர் கெ.பிரகாஸ் அறிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட செயலர் என். வேதநாயகனும், நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனும் கலந்துகொள்ளவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-10)

# பருப்பு மூடை விழுந்து ஒருவர் பரிதாபச்சாவு

கொழும்பு, பெப். 25
களனி - பட்டிவில பிரதேசத்தில் பருப்பு களஞ்சியசாலையில் பருப்பு மூடை சரிந்து வீழ்ந்தபோது அதில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

பட்டி வில பிரதேசத்தில் பருப்பு பொதியிடும் தொழிற்சாலையில் நேற்று இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்த இடரில் சிக்கி காயமடைந்த நால்வரும் கிரிபத்கொட மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(து-5)

# தென்மராட்சிப் பிரதேச விளையாட்டு விழா கைதடியில் நாளை

தென்மராட்சி, பெப். 25

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழ கங்களுக்கு இடையேயான 2017ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா நாளை பி.ப. 2 மணிக்கு கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதேச செயலரும் தென்மராட்சி விளையாட்டு அவைத் தலைவருமான திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவுள்ள விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயப் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் கே.விஜிதரன் தென்மராட்சிப் பிரதேச ஓய்வுநிலை நிர்வாக அலுவலர் செல்வி ப.குழந்தைவேலு ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை ஆகியோரும் கலந்து கொள்வர்.

விழாவில் தடகள இறுதிப் போட்டிகளும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளன. உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சான்றோர் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான குழு நிலைப் போட்டிகளும் தடகளப் போட்டிகளும் நடைபெற்றுள்ளன. அந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் விழாவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

# மண்மேடுகள் அகற்றப்பட்டன

பருத்தித்துறை வீதியில் கட்டப்பிராய் பகுதியில் வீதி யோரம் காணப்பட்ட மண்மேடுகள் அகற்றப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டில் பெய்த மாரி மழையால் இந்தப் பகுதியில் உள்ள தாழ்ந்த இடங்களில் வெள்ளம் ஏற்பட்டது. வெள்ளம் வழிந்தோட வசதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தற்காலிக வடிகால் அமைக்கப் பட்டது. வடிகால் அமைப்புக்காக வெட்டப்பட்ட மண் மேடுகளால் இரவு வேளையில் விபத்துக்கள் ஏற்பட்டன.

(வ-17)

**வீடு வளவு விற்பனைக்குண்டு**

டிஸ்பென்சரி லேன். உரும்பிராயில் 6 பரப்பில் அமைந்துள்ள மேல்மாடி வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

021 221 9526, 077 628 5831, 077 610 1872

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் வீட்டில் தங்கிநின்று பணியாற்றக்கூடிய பணிப்பெண் தேவை.

077 413 7763

## பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன சித்திவிநாயகர் ஆல்யம்

### விஷேட பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய மூல மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரண வேலைகள் கனடா வாழ் முன்னை நாள் ஊழியர்களினதும் மற்றும் அடியார்களினதும் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றது. இது பற்றி அங்கிருந்து வந்துள்ள ஊழியர்கள் அடியார்களுடன் கலந்துரையாட விரும்புவதால் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்கள், பக்த அடியார்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் சிரமம் பாராது 27.02.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முடிவில் பிரசாதம் வழங்கப்படும்.

விவரங்களுக்கு

திரு. சுந்தரலிங்கம் - 077 502 4412

(K/3099)(11.18)

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்துறை நிறுவனத்துக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ படவரைஞர் - Certificate in Draughtsmam and Auto CAD with Quantity Surveying Experience
- ★ சாரதி

தொடர்பு: 077 712 0945/ 021 221 3663
No.207, Navalar Road, Jaffna.
E.Mail - vacancynsc@gmail.com

(AJA 1574) (13.18)

## வெளிவந்துவிட்டது

குவி அச்சகத்தின் புதிய வெளியீடுகளாக

- ✱ Class Work Book Grade-8
- ✱ Happy Kids English Grade-1
- ✱ Practise your Grammar Grade-11
- ✱ கணிதம் தரம்-7(தமிழ் மொழி மூலம் & English Medium)
- ✱ கணிதம் தரம்-10(தமிழ் மொழி மூலம் & English Medium)

சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

K.V,Printers Book Distributing Centre
355, Clock Tower Road, Jaffna.
T.P:- 021 720 0237



யாழ் இந்திய துணைத் தூதுவராலயத்தின்
அனுசரணையில்
வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும்
சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 170 ஆவது இசை ஆராதனை - 2017

காலம் : 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை
இடம் : வட இலங்கைச் சங்கீத சபை தற்பரானந்தன் அரங்க, மருதனார்மடம்
நேரம் : முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை

தலைவர்
திரு. ந. தெய்வேந்திரராஜா அவர்கள்
யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

பிரதம விருந்தினர்கள்
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. சோ. மாவை சேனாதிராஜா அவர்கள்
தலைவர் தமிழரசுக்கட்சி
கௌரவ A.நடராஜன் அவர்கள்
யாழ் இந்தியத் துணைத் தூதுவர்

சிறப்பு விருந்தினர்
திருமதி அருளீஸ்வரி வேதநாயகம்
ஓய்வு நிலை யாழ் வலயக்கல்விப்பணிப்பாளரும்
முன்னாள் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார்மடம்

சி. சிவராஜன்
செயலாளர்.

**ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

சிறந்த ரக கிறிராஷ், கழுத்துவெட்டிக் குஞ்சுகள் (ஒரு கிழமை) வளர்க்க இலகுவானவை. விற்பனைக்குண்டு.

077 755 6244

SB

**விசா Ticket குறைந்த விலையில்**

சகல நாடுகளுக்குமான பயணச் சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 29.500/= க்கும் வீசா விண்ணப்பப்படிவம் 100/= பூர்த்தி செய்து தரப்படும். அத்துடன் பிரயாண காப்புறுதி, திகதி மாற்றமும் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு

SB Travels and Tours Pvt Ltd.
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 076 691 1083

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

## IELTS

- Latest training materials. ( Book 11 )
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

## IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

British Council'S
IELTS Registration Centre

Spoken English
Fluency Diploma

www.itdmi.com/english Hotline 0777 17 35 17

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி Tel.: 021-226 2470 | சாவகச்சேரி Tel.: 021-227 0775 | சுன்னாகம் Tel.: 021-224 1970 | கிளிநொச்சி Tel.: 021-228 5655

## மணமக்கள் தேவை

*1987 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் $15\frac{3}{4}$ பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1979 இல் பிறந்த 6 இல் சூரியன் செவ்வாய் லக்கண பாவம் 8 உடைய சொப்வெயார் இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1986 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 6 பாவமுடைய வங்கியில் பணிபுரியும் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1984 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 50 பாவமுடைய டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1979இல் பிறந்த 11 இல் செவ்வாய் $62\frac{1}{2}$ பாவமுடைய விரிவுரையாளர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1983இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் $69\frac{3}{4}$ பாவமுடைய டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1985இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 14 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1986இல் பிறந்த 12 இல் செவ்வாய் 29 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1971 இல் பிறந்த 7இல் செவ்வாய் $43\frac{1}{2}$ பாவமுடைய பட்டதாரி மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
*1982இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் $21\frac{3}{4}$ பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.

கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி. - 077 607 0862

## மாதாந்த மின் பட்டியல் தொடர்பாக மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் மின்மானி வாசிப்பாளர் பற்றாக்குறை காரணமாக மின் பாவனையாளருக்கு மாதந்தோறும் மின்மானி வாசித்துப் பட்டியல் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பாவனையாளருக்கு இரண்டு மாதத்துக்கு ஒருதடவை மின் பட்டியல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மின்சாரசபை வருந்துகிறது.

**மின்பொறியியலாளர் (யாழ்.பிரதேசம்)**
**இலங்கை மின்சாரசபை, மின்சார நிலைய வீதி,**
**சுன்னாகம்.**

T.P :- 021 224 0302 / 021 321 2261
Fax.No :- 021 224 0302

(C/28357)(11.18)

யாழ்ப்பாணத்தில் 08.04.2017 இல் நடைபெற இருக்கும்

IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

16 - Practice Tests with Explanations Daily Writing Practice Daily Speaking and Listening Practice It is an Inovative Training Programme

## IELTS

2016 ஆம் ஆண்டு September - October மாதங்களில் British Council - Colombo இல் நடைபெற்ற IELTS ஆசிரியர் Workshop மற்றும் Trainings இல் பங்குபற்றி IELTS பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு British Council லினால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியரினால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது.

OUR TARGET IS BAND : 9



IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை
Grammar and Vocabulary
போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.

Pearson English Course Level B2

எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் — 01.03.2017



COURSE SCHEDULE
Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

IELTS LIFE SKILLS A1, B1

கடந்த வருடம் A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS Registration Centre for British Council

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. [பெருமாள் கோவிலடி திலக்குரல் காரியாலயத்திற்கு முன்னால்]
Tel : 021 222 0384 , 077 880 3887

# சட்டவிரோதமாகப் பிடித்த 396 கிலோ மீன்கள் ஏலத்தில்

## முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

முல்லைத்தீவு, பெப்.25

முல்லைத்தீவு, நாயாறுக் கடற்பரப்பில் சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட 396 கிலோகிராம் மீன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தால் ஏல விற்பனை செய்யப்பட்டது.

இதன் மூலம் பெறப்பட்ட 2 இலட்சத்து 97ஆயிரத்து 500 ரூபா வருமானம் அரசுடைமையாக்கப்பட்டது.

நாயாறுக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்திக் கடந்த புதன்கிழமை மீன் பிடித்துக் கொண்டிருந்த உள்ளூர் மீனவர்கள் 10 பேர் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளாலும், கடற்படையினராலும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள், அன்றைய தினமே முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் எஸ்.எம்.சம்சுதீனிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான், கைது செய்யப்பட்ட மீனவர்களில் ஆறு பேருக்குத் தலா 4 ஆயிரம் ரூபா அபராதமும், ஏனைய நால்வருக்கு தலா 2ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அத்தோடு மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மீன்களை ஏலவிற்பனை மூலம் விற்று அதில் வரும் பணத்தை அரசுடைமையாக்குமாறு தெரிவித்த நீதிவான், படகுகளை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-21)




தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் மானிப்பாய் கணினி பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவிகள் நேற்று முன்தினம் உதயன் பணிமனைக்கு வருகை தந்து பத்திரிகை நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர். (ஐ-ரி)

# வைத்தியசாலைகளில் ஆலோசனைக் குழுக்கள்

## வடக்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வைத்தியசாலைகளில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மாவட்டப் பொது வைத்தியசாலைகளில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது ஆதார வைத்தியசாலைகளிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் நேரடி மேற்பார்வையில் செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தலைமையில் அந்தப் பிரிவு பிரதேச செயலர், கட்டடத் திணைக்கள தொழில்நுட்பவியலாளர், நகர சபையாயின் அதன் செயலாளர் அல்லது சிறப்பு ஆணையாளர், பிரதேச சபையாயின் அதன் தவிசாளர் அல்லது செயலாளர், வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர், வைத்திய அதிகாரி, பிரதம மருந்தாளர், தாதிய சகோதரி ஆகியோர் உள்ளடங்குவர்.

இந்தக் குழு வைத்தியசாலையின் அபிவிருத்தி, சீரமைப்பு ஆகிய விடயங்களை ஆராய்ந்து சுகாதார அமைச்சுச் செயலாளரின் அனுமதியுடன் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)




திருநெல்வேலி
பழங்கிணற்றடி
வீரகத்தி விநாயகர் ஆலயம்
இன்று 25.02.2017
15 ஆம் திருவிழா
தேர்த்திருவிழா

பேசரும் பொருளானவனே
பேரின்பமே யுருவானவனே
ஈசனுவந்தருள் ஈஸ்வரனே
ஈடிணை இல்லா ஈஸ்வரனே
வாசவன் மருகா வாரணவா
வரமருட் சுகந்தரு மாரணனே
பூசனை நலமுறப்பூப்பவனே
பூ மழை பொழிந்து போற்றிடுவோம்

கண்ணன் ஸ்ரோர்ஸ்
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

**விற்பனைக்கு**
யமுனாபாறி, சணல் ஆடுகள், பொமேரியன், அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குள்ளன.
077 101 6407

**வேலையாள்கள் தேவை**
விக்டோரியா வீதியில் இயங்கும் மல்ரி சொப் கடை ஒன்றுக்கும், அச்சக பைண்டிங்குக்கும் பெண் பிள்ளைகள் தேவை. (குளிரூட்டப்பட்ட கடை)
077 392 0797

உ
சிவமயம்



துன்னாலை கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலய
தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 25.02.2017
இன்று சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு இடம்பெறும்

கொக்கராமுல்லை கோவிற்கடவை சித்திவிநாயகர் மெய் அடியார்களே !
நிகழும் துர்முகி வருடம் மாசி மாதம் 13 ஆம் நாள் (25.02.2017) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நாதஸ்வர மங்கல வாத்தியங்கள் முழங்க எம் சித்திவிநாயகப் பெருமான் தேரேறி அடியார்களுக்கு வீதி உலா வந்து அருள்பாலிப்பார்
அனைவரும் வருக ! அருள் பெறுக !
- பரிபாலன சபை -
- கோவிற்கடவை சித்திவிநாயகர் ஆலயம் -

அனுசரணை: கோவிற்கடவை திருமண மண்டபம்

மண்டப முகப்புத் தோற்றம்


மண்டப உள் தோற்றம்


தங்களுக்கான சேவை
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் வைபவம் போன்ற நிகழ்வுகள் கொண்டாட சகல வசதிகளும் கொண்ட மண்டபம். அத்துடன் உணவு பரிமாற பிரத்தியேக மண்டபம் அமையப் பெற்றது.

கோவிற்கடவை திருமண மண்டபம்
(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
A/C or Non A/C

வாரீர் தொடர்பு கொள்வீர் !!
தொலைபேசி இல : 021 226 4135
அலைபேசி இல : 077 714 0090
கோவிற்கடவை திருமண மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.

# இலவச சட்ட உதவி சேவைகள் அடுத்த வாரம் யாழ். நீதிமன்றில்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் சட்ட உதவி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப. 3 மணி வரைக்கும் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் இலவச சட்ட உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சட்டத்தரணிகளினதும் சட்ட உதவி ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் சட்டத்தரணிகளினதும் பங்களிப்புடன் இந்த நிகழ்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

'வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் அனைவரும் கலந்து கொண்டு சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை பெற முடியுமென்பதுடன் உரிய பிரச்சினைகள் தொடர்பில் நீதிமன்றங்களில் இலவசமாக வழக்குகளும் தொடரப்பட்டு நடாத்தியும் கொடுக்கப்படும்.

இந்தச் சட்ட உதவியைப் பெற விழைவோர் அனைவரும் தாம் வறுமைக் கோட்டுக்குட்பட்டோர் என்பதைத் தத்தமது கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பராமரிப்பு, மணநீக்கம், குடும்ப வன்முறை போன்ற வழக்குகளைத் தொடர வேண்டியிருப்பின் திருமணப்பதிவுச் சான்றிதழ், 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் நிழல் பிரதிகளைக் கொண்டு வரவேண்டும்.

வேறுவிடயங்கள் தொடர்பில் ஆலோசனை பெறவருவோர் பொருத்தமான ஆவணங்களின் நிழல் பிரதிகளைக் கொண்டு வரவேண்டும்' என்று யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி அரச தலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார். (வ)

# மோ. சைக்கிள் விபத்தில் சிறுவர்கள் இருவர் காயம்

தென்மராட்சி, பெப். 25

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மதிலுடன் மோதியதில் அதில் பயணித்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த பாலன் லதிர்சன் (வயது -17), சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த பூபாலசிங்கம் மகிந்தன் (வயது - 17) ஆகிய இரு சிறுவர்களும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (வ-9)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி யோகீஸ்வரி செல்வராசா
(இலிகிதர்– கைதடி கமநலசேவை நிலையம்)

மண் மகிழ
28.12.1953

கண் நெகிழ
23.02.2009

திதி: அபரபக்க சதுர்த்தசி

ஆண்டுகள் எட்டு நகர்ந்து மறைந்திடினும் உமது அன்பு, பாசம் எமது மனங்களில் நகராதுள்ளது.

உங்களது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

கணவர், குடும்பத்தினர்கள்.
கைதடி, தெற்கு.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
27.07.1933

விண்ணில்
25.02.2016

### லாசறஸ் குணநாயகம்

(முன்னாள் அதிபர் சென்ற் சாள்ஸ் மகாவித்தியாலயம்.
விரிவுரையாளர் - பல்கலைக்கழகம்.
கிளிநொச்சி,
தொழில்நுட்பக்கல்லூரி.
யாழ்ப்பாணம் - கொழும்பு)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனிமார்.

24/2A. 59ஆவது ஒழுங்கை.
மனிங்பிளேஸ். வெள்ளவத்தை. கொழும்பு - 06
T.P: 011 250 1729 / 075 488 5953

## மரண அறிவித்தல்

### Dr.சோதிலிங்கம் மாணிக்கலிங்கம்

(வண்ணக்கிளி)



பிறப்பு
25.10.1935

இறப்பு
23.02.2017

யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு. வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் மாணிக்கலிங்கம் 23.02.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சோதிலிங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பாலசுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்புக் கணவரும், சுமதி (கனடா), அகலிகா (சுவிஸ்), வரதன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற Dr.பொன்னுச்சாமிப் பிள்ளையின் பாசமிகு சகோதரனும் ஸ்ரீரங்கநாதன், தாசன், ஸ்ரீதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பத்மாவதி, காலஞ்சென்ற இராஜேந்திரம், பாலேந்திரன், இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் வைத்திலிங்கம், வினோதினி, சிவநாயகி ஆகியோரின் அன்புச் சகலனும் யாழினி, நர்த்தனா, ஓவியா ஆகியோரின் பாசமிகு பேரனும் டானியலின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 591, காலிவீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று அன்று பிற்பகல் 5.00 மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீட்டு முகவரி:
40/5, HAMPDEN LANE,
COLOMBO - 06

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: மகன் - வரதன்
0094 779 456 582 (இலங்கை)
0094 112 365 375 (இலங்கை)
0044 203 318 5052 (பிரித்தானியா)

## மரண அறிவித்தல்



### சீனிவாசகம் அரசு

(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் - கச்சேரி, யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கைதடியை வசிப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம் அரசு 20.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் (ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர்) அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன் (கனடா), ரவிகாந்தன் (கனடா), புவிகாந்தன் (கனடா), மதிகாந்தன் (கனடா), கவிகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி, கண்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயாளினி (கனடா), கிறிஷ்ணி (கனடா), சகுந்தலாதேவி (கனடா), சித்திரா (கனடா), சுதாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், முத்தம்மா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றிலான், வித்யா, கெவின், றே, கஜானா, சியானா, நிஷா, துஷா, றினேஷா, கபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

யாழ்.மாநகர சபையில் நிதி மோசடி

## பெண் உத்தியோகத்தருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ்ப்பாணம் மாநகர சபையில் நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட பெண் உத்தியோகத்தருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதிப்பிரிவில் பணியாற்றிப் பெண் உத்தியோகத்தர் ஒருவர் 28 லட்சம் ரூபா நிதியை கடந்த வருடம் மோசடி செய்தார் என்று உள்ளக கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது. திணைக்கள ரீதியில் இடம்பெற்ற விசாரணையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை முன்வைக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகத்தால் பெண் உத்தியோகத்தருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் பொலிஸார் முறைப்பாடு தொடர்பில் எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் நிதி மோசடிக் குற்றச்சாட்டில் பெண் உத்தியோகத்தருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவர் நீதிவான் மன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கபட் டுள்ளன.
திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக விசாரணைகளின் போது பெண் உத்தியோகத்தர் மீதான நிதி மோசடிக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில் அவர் பணியிலிருந்து இடை நீக்கப்பட்டுள்ளார்.
(வ -101)

# வீதியில் கழிவுகள் கொட்டுவோரை கண்டுபிடிப்பதற்கு சி.சி.ரி.வி. கமரா

### யாழ்.மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.25
கழிவுகளை இரகசியமாகக் கொண்டு வந்து வீதிகளில் எறிந்துவிட்டுச் செல்பவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்காக அசையும் சி.சி. ரி.வி. கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.
பெருமளவு கழிவுகள் கொட்டப்படும் கல்லுண்டாய், காக்கைதீவுப் பகுதி வீதிகளில் கழிவு கொட்டுவோரைப் பிடிப்பதற்காக முதற்கட்டமாக அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை செயற்படுத்தவுள்ளது.
இந்தப் பகுதியில் சிலர் வாகனங்கள் மூலம் திண்மக்கழிவுகளை எடுத்து வந்து கொட்டிவிட்டுச் செல்கின்றனர். பிரதான வீதியோரங்களில் திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது.
இதனையடுத்துக் கழிவுப் பொருள் களைக் கொட்டுவோரை இனம் கண்டு கொள்ள வசதியாக கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படும் என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.
மாநகரக் கழிவகற்றும் பிரிவினரின் உதவியுடன் வீதியோரங்களில் கொட்டப்பட்ட திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.
கழிவுகளைக் கொட்டுவோர் இந்தக் கண்காணிப்புக் கமரா மூலம் இனம் காணப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்காகச் சுற்றுச்சூழல் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.
மாநகரப் பகுதியில் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் இடங்கள் இனம் காணப்பட்டு இந்தக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டு வருகின் றன என்று ஆணையாளர் மேலும் கூறினார்.
(து-17)

## நூல் அறிமுக விழா

பளை,பெப்.25
பளையூர் கருணாகரன் எழுதிய 'புகைப்படக்காரர் பொய் சொல்ல முடியாது' எனும் படுவான் கரை குறிப்புகள் நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறும்.
அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வ.ஜீவரத்தினம், சிராஜ் மஷ்ஹர், யதார த்தன், வி.தயாளன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.
(ஐ-9)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 25
வண்ணை வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
(வ-5)

## புரட்சித் தலைவரின் நூறாவது பிறந்த தின நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம்,பெப்.25
மக்கள் திலகம் புரட்சித் தலைவர் பொன் மனச் செம்மல் எம்.ஜி. ஆரின் நூறாவது பிறந்த தினமும் கலைஞர்கள் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு சர்வோதய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
சர்வோதயமும் தேசோதயமும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் தேசோதய தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் ஏ. நடராஜனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், பேராசிரியர் சிவலிங்கராஜா, விஞ்ஞான ஆசிரியர் இரா.செல்வவடிவேல், உடுவில் மகளிர் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் கே.ஏ.முத்துலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள் என்று விழா ஏற்பாட்டுக் குழு தெரிவித்தது.
(வ)

## பாதுகாப்பான மலசல கூடம் அமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் அதிகரித்து வரும் நிலையில் நிலத்தடி நீர் மூலம் தொற்று நோய்கள் ஏற்படாதிருக்க நகரத்தை அண்டிய பகுதிகளில் மலசல கூடம் அமைக்கும் குடியிருப் பாளர்கள் பாதுகாப்பான முறையில் அவற்றை அமைக்க வேண்டும் என்று நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் கேட்டுள்ளார்.
சாவகச்சேரி நகரை அண்டிய பகுதிகளில் குடியிருப்புகள் அதிகரித்து வருகின்ற நிலையில் கிணறு மலசல கூடம் போன்றவை அமைப்பவர்கள் உரிய அங்கீகாரம் பெற்று அமைப்பதால் தொற்று நோய்களுக்கு உள்ளாகும் நிலை குறைவடையும். புதிதாக மலசலகூடம் அமைப்பவர்கள் உரிய அங்கீகாரம் பெற்று (சீல் பிற்) அமைக்குமாறும் அவர் தெரிவித்தார். (வ- 9)

# நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு மாணவர் பங்களிப்புத் தேவை

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப். 25
இளைய சமுதாயத்தினராகிய மாணவர்கள், நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தமது பங்களிப்புகளை வழங்க முன்வர வேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்துக்குமான செய லகத்தால் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரியில் கடந்த 19 ஆம் திகதியில் இருந்து 5 நாள் கொண்ட நல்லிணக்கச் செயலமர்வு நடை பெற்றது.
இந்தச் செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தெற்கு மற்றும் வடக்கில் இனவாத அரசியல் தலைமைத்துவம் தற்போதும் காணப்படுகிறது. நாட் டில் சகவாழ்வு ஏற்பட வேண்டுமாயின் மன்னிப்பு, மறப்பு அவசியமான தொன்றாகும். எமது அடுத்த கட்ட நகர்வுக்கு மன்னிப்பு மருந்தாகும். மாணவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு உழைக்க முன்வரவேண்டும் - என்றார்.
இந்த நல்லிணக்கச் செயலமர்வுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள 25 பாடசாலையில் இருந்து 100 மாணவர்களும், மேல் மாகாணத்திலுள்ள 16 பாடசாலைகளி லிருந்து 100 மாணவர்களுமாக மொத்தமாக 200 மாணவர்கள், 20 ஆசிரியர்கள் மற்றும் வளவாளர்களும் கலந்து கொண்டனர்.
(ஐ-10)

# கடமையிலுள்ள அதிபரை மாற்றுமாறு கோரவில்லை

### கரம்பைக் குறிச்சி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விளக்கம்

யாழ்ப்பபாணம், பெப்.25
'வரணி கரம்பைக் குறிச்சி பாடசாலையில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட தரம் 111 அதிபரே தொடர்ச்சியாக அந்தப் பாடசாலையில் இருக்க வேண்டும். அவரை மாற்றி விட்டு வேறு ஒரு அதிபரை நியமிப்பதாக இருந்தால் தரம் 111 தகுதியுடைய ஒருவரே நியமிக்கப்பட வேண்டும்' இவ்வாறு கோரியே தென்மராட்சி கல்வி வலயத்தில் மனு கையளிக்கப்பட்டது, என கரம்பைக் குறிச்சி பாட்சாலை அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர்.
தற்போதுள்ள அதிபரை மாற்றுமாறு நாம் ஒருபோதும் கோரவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
முற்கொணர்ந்த தகவலின்படி, வரணி கரம்பைக் குறிச்சிப் பாடசாலையில் நியமிக்கப்பட்ட தரம் 111 தகுதியான அதிபருடைய செயற்பாடு திருப்தி அளிக்கவில்லை. எனவே அவரை இடமாற்றம் செய்து புதிய அதிபரை நியமிக்க வேண்டும் என்று தெரிவித்து கல்வி வலயத்தில், கரம்பைக் குறிச்சிக் கல்வி சமூகத்தினரால் மனு கொடுக்கப்பட்டது என உதயன் பத்திரிகையில் நேற்றுமுன்தினம் 6ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பாக தெரிவிக்கும் போதே சங்கத்தினர் இதனை தெளிவுபடுத்தினர்.
அதிபர் சேவைக்கான பரீட்சையில் சித்தி பெற்று தகைமை பெற்ற அதிபர்கள் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டபோது வரணி கரம்பைக்குறிச்சிப் பாடசாலைக்கும் தரம் 111 தகுதியுடைய அதிபர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அதிபர் கடந்த மாதம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தகைமையுடைய குறித்த அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரியும். அப்படி அந்த அதிபரை இடமாற்றம் செய்வதானால் மீண்டும் தரம் 111 தகுதியுடைய அதிபர் ஒரு வரே எமது பாடசாலைக்கு அதிப ராக நியமிக்கப்பட வேண்டும் என் றும் தெரிவித்தே கல்வி வலயத்தில் மனுகையளிக்கப்பட்டது-' என்றார்.
தவறான செய்தியால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு உதயன் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறான். (வ-21)

# தராசுகள் முத்திரையிடும் பணிகள் தென்மராட்சியில் மார்ச் 6 ஆரம்பம்

தென்மராட்சிப் பிரதேச உள்ளூராட்சி சபைகளின் எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுவை மற் றும் அளவை உபகரணங்கள் படிகள் போன்றவைகளுக்கு 2017 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடும் பணிகள் மார்ச் மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அளவீட்டுஅலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.இராஜேஸ்வரன் தெரிவித்ததாவது:
சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் மார்ச் 6, 7, 9 மற்றும் 10ஆம் திகதிகளிலும் சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் உப அலுவலகத்தில் மார்ச் 13, 14 ஆகிய திகதிகளிலும் சாவகச்சேரி பிரதேச சபை கைதடி உப அலுவலகத்தில் மார்ச் 16, 17ஆம் திகதிகளிலும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்கள் படிகள் போன்றவற்றுக்கு முத்திரையிடும் பணிகள் இடம்பெறும்.
வியாபார நிலையங்களில் பயன்படுத்தும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்கள் மற்றும் படிகளை கையளித்து முத்திரையிடப்பட வேண்டும். அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் முத்திரையிடும் பணிகள் நடைபெறும் வேளைகளில் முத்திரையிடத் தவறுவோர் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்துக்குக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படும் - என்றார்.
(வ - 9)

# விமல்ராஜ் மீதான சூட்டுக்கு எதிராக நேற்றும் போராட்டம்

## குற்றவாளிகளை உடன் கைது செய்யுமாறு அரச தலைவரிடம் கிழக்கு மக்கள் கோரிக்கை



களுவாஞ்சிக்குடி, பெப்.25

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அரசதலைவர், பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் நேசகுமாரன் விமல்ராஜ், கடந்த புதன்கிழமை இரவு மட்டக்களப்பு - களுதாவளை 4ஆம் பிரிவு சோமசுந்தரம் வீதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து இனம்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பில் கடந்த இரு தினங்களாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடராக நேற்றுக் காலை களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் சிலை முன்பாகப் பட்டிருப்புத் தொகுதி தமிழ்ச் சமூகம் எனும் அமைப்பினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், ச.வியாழேந்திரன், சீ.யோகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா, மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், மாகாணசபை உறுப்பினர்களான மா.நடராசா, ஞா.கிருஸ்ண பிள்ளை, இரா.துரைரத்தினம் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்குமாறு அரசதலைவரைக் கோரும் மனு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசனிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் தெவிக்கப்பட்டதாவது:

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணத்தின் பிரதிப் பணிப்பாளர் நேசகுமாரன் விமல்ராஜ் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கண்டிக்கத்தக்கதாகும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடன் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். இதற்குப் பின்புலமாக உள்ளவர்களையும் தெரியப்படுத்தவேண்டும்.

2014 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மண்டூரில் வைத்து மதிதயன் எனும் சமூகசேவை உத்தியோகத்தர் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதில் சம்பந்தப்பட்ட கொலையாளிகளோ அல்லது அதன் சூத்திரதாரிகளோ இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

களுவாஞ்சிக்குடியில் கடந்த வருடம், கிராமசேவை உத்தியோகத்தர் ஒருவர் மர்மமான முறையில் இறந்தார். கிரானில் மற்றுமொரு கிராமசேவை உத்தியோகத்தர் தாக்கப்பட்டார். தற்போது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச அதிகாரிகள் மீது குறிவைத்துத் தாக்குதல்களை நடத்துவதும், துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படுவதாக எமக்குத் தெரியவில்லை.

எனவே, விமல்ராஜின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் மூடிமறைக்காமல் உடனடியாகச் சட்ட நடவடிக்கையைத் துரிதப் படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது.

(த-ய)




## பணிப்பாளர் விமல்ராஜ் சூட்டின் பின்னணியில் அரச காணி விவகாரம்

### யோகேஸ்வரன் எம்.பி. கண்டனம்

களுவாஞ்சிக்குடி, பெப்.25

துப்பாக்கிகள் மௌனிக்கப்பட்ட நிலையில் மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்துவரும் இந்தக் காலகட்டத்தில் திடீரென நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூடு மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி சம்பந்தமான பிரச்சினைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அரச காணிகள் சில அரசியல்வாதிகளின் அனுசரணையோடும், சில அரச அதிகாரிகளின் துணையோடும் சுவீகரிக்கப்படுகின்ற நடவடிக்கைகள் நடந்தேறிவருகின்றன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் நேசகுமாரன் விமல்ராஜ் சுடப்பட்டதைக் கண்டித்து நேற்றுக் காலை களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் சிலை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்புபுன்னைக்குடாபிரதேசத்தில் காணிப் பிரச்சினைகள் உள்ளன. எம்மினம் சாராத ஓர் அரசியல்வாதி அந்தக் காணிகள் தமது இனம் சார்ந்தவர்களுக்குச் சொந்தமானவை என்று நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றார். புன்னைக்குடா காணிப் பிரச்சினை தொடர்பில் நேசகுமாரன் விமல்ராஜ் நியாயமாகச் செயற்பட்டிருந்தார். இதன் பிற்பாடு அவருக்குப் பல பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன.

இதன் தொடராகக் கடந்த புதன்கிழமை இரவு இனம்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் நாம் ஆராயவேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தங்களது காணிப் பிரச்சினைகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்கின்றபோது அவை குறித்துக் கவனத்தில் எடுப்பது மிகக் குறைவு. இது தொடர்பில் நான் நாடாளுமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

காணிப் பிரச்சினை தொடர்பில்தான் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என எமக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்க பொலிஸார் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(த-ய)

## இரண்டு மாதங்களில் 193 டெங்கு நோயாளர்

### மன்னார்ப் பகுதியில் இனங்காணப்பட்டனர்

மன்னார், பெப்.25

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப் பகுதியில் 193 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஜனவரி மாதம் 148 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரி மாதம் இதுவரையான காலத்தில் 45 டெங்கு நோயாளர்களும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடையாளம் காணப்பட்ட டெங்கு நோயாளர்கள் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுப் பின் வீடு திரும்பியுள்ளனர்.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் டெங்கு நுளம்பின் தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. எனினும் கடந்த காலங்களை விடத் தற்போது டெங்கு நுளம்பின் தாக்கம் சற்றுக் குறைவடைந்து காணப்படுகின்றது.

டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக தமது வீடுகள் மற்றும் சூழலை வைத்திருந்த 10 பேருக்கு எதிராக மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மனிமனையூடாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுத் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார் பொலிஸாரினால் 6 பேருக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பின் பெருக்கத்துக்கு ஏதுவான சூழலை வைத்திருந்தனர் என 300 பேர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. இதுவரை 270 பேர் தமது வீடுகள் மற்றும் சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்தியுள்ளனர். ஏனைய 30 பேர் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. அவர்களுக்கு எதிராக மன்னார் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுச்சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றார். (த-21-56)

## டெங்கு பரவும் சூழல் வைத்திருந்த மூவருக்கு நீதிமன்றம் தண்டம்

சாவகச்சேரி, பெப் 25

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த குடியிருப்பாளர்களுக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் நேற்று முன் தினம் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத் தினரால் கடந்த 21 ஆம் திகதி மட்டுவில் பிரதேசத்தில் நடத்தப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளின்போது நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட பூச்சாடிகள், வெட்டப்பட்ட வாழை மரக் குற்றிகள், கால்நடைகள் மற்றும் பறவைகளுக்கு வைக்கப்பட்டிருந்த நீர்த் தொட்டிகள் என்பவற்றை வைத்திருந்த குடியிருப்பாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். (த-9)




## 'இலங்கையின் இருட்டறை' ஆவணப்படம் அடுத்த மாதம் ஐ.நாவில் திரையிடப்படும்

கொழும்பு, பெப். 25
மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கு மான அமைப்பால் 'இலங்கையின் இருட்டறை' எனும் ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் படம், அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் திரையிடப்படவுள்ளது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தால், தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்ற அவலங்களை பன்னாட்டின் பார்வைக்கு கொண்டு வரும் முயற்சியாகவே இது அமைந்துள்ளது. முழுமையாக இலங்கையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில், பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு சாட்சிகளாக இருக்கும் மக்கள் பலர் தங்களது வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர்.

பெற்றோலால் நனைக்கப்பட்ட பொலித்தீன் பைகளால் முகங்களை மூடித் தாக்கப்பட்டவர்களும், அசிட் ஊற்றித் தாக்கப்பட்டவர்களும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தபோது, பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டவர்களும், முள்ளுப் பற்றைக்குள் கைகள் கட்டப்பட்ட நிலையில் உழவு இயந்திரம் மூலம் கட்டி இழுக்கப்பட்டவர்களும், வீட்டில் தங்கியிருந்த போது தங்களின் கண் முன்னால் தாய் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதை நேரில் பார்த்த பிள்ளைகள் என பலர் தமது உள்ளக் குமுறல்களை இந்த ஆவணப்படத்தில் வெளிப்படுத் தியுள்ளனர்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆவணப்படம், தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையில், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு கொழும்பு அரசு ஒப்புதல் அளித்திருந்தது. ஆனால், இன்றும் குறித்த சட்டம் நடைமுறையில் இருந்து வருகின்ற நிலையிலேயே இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# இலங்கை போரை வெற்றிகொள்ள இந்தியா கடும் பயிற்சி வழங்கியது

## கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25
போரை வெற்றி கொள்வதற்கு இந்தியா இலங்கைக்குக் கடும் பயிற்சிகளை வழங்கியது. சீனா, பாகிஸ்தான், உக்ரைன் மற்றும் இஸ்ரேல் நாடுகள் அதிகளவான ஆயுதங்களைத் தந்திருந்தன.



இவ்வாறு இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கை மீதான முதலீட்டில் இந்தியா, சீனா இடையே போட்டியும் அதனால் உட்பூசலும் ஏற்பட்டுள்ள நிலையில், கோத்தபாய ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஆயுதம் தாங்கிய போருக்கு இந்திய அரசு மிகவும் கடுமையான பயிற்சியை, இலங்கை இராணுவத்துக்கு வழங்கியது. அவ்வாறு உதவியதால் தமிழ் நாட்டில் குழப்பமான சூழல் ஏற்பட்டது. அதனால் இந்தியா ஆயுதங்களை வழங்கவில்லை.

இலங்கையில் தீவிரவாதத்துக்கு எதிரான போருக்கு முழுமையாகவே சீனாவின் ஆயுதக் கொள்வனவை நம்பிச் செயற்படும் நிலையே இருந்தது.

பாகிஸ்தான், இஸ்ரேல், ரஷ்யா மற்றும் உக்ரைன் உள்ளிட்ட நாடுகள் பெருமளவு ஆயுதங்களை வழங்கியதோடு, வான் படைத் தாக்குதல்களுக்கு உறுதுணையான, விமானங்களையும் வழங்கி உதவின'-என்றார்

'இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான ஆக்கிரமிப்புப் போட்டிகள் தலைதூக்கியுள்ளன. இந்தியப் பெருங்கடலில் சீனாவின் இராணுவ அத்துமீறல்கள் தொடர்பான சர்ச்சைகள் மேலெழுந்துள்ள நிலையில் கோத்தபாய இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ-4)

## வாகனப் போக்குவரத்துக் குற்றங்களுக்கு அபராதம் 5 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 25
வாகனப் போக்குவரத்தின் போது இடம்பெறும் பெரிய ளவிலான ஏழு குற்றங்களுக்கான அபராதம், 5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என பரிந் துரை செய்யப்பட்டுள்ளது என்று மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சரத் விஜிதகுமார தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வாகனப் போக்குவரத்தின்போது இடம்பெறும் பெரியளவான ஏழு குற்றங்களுக்கான அபராதத் தொகையை, 25 ஆயிரம் ரூபாவாக அரசு பரிந்துரை செய்திருந்த நிலையில், அந்தப் பரிந்துரைக்கு, பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுவோர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, இவற்றை ஆராய்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு வாகனம் போக்கு வரத்துகளில் இடம்பெறும் ஏழு குற்றங்களுக்கான அபராதமானது, 5 சதவீதத்தால் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரை கள் செயற்படுத்தப்படின், ஏனைய போக்குவரத்துச் சேவைகள் அடங்கலாக, சகல தனியார் பேருந்துச் சங்கங்களும், கடந்த டிசெம் பர் 2 ஆம் திகதி போன்று நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்ததை மேற்கொள்ளும்.

இந்தக் குழு, ஆகக்குறைந்த 20 ரூபா அபராதத்தை, ஆயிரம் ரூபாவாக மாற்றியுள்ளது. 25 ஆயிரம் ரூபா அபராதத்தை, 30 ஆயிரம் ரூபாவாக மாற்றியுள்ளது. இந்த அபராதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படலாம். அத்துடன், நீதிமன்றங்களின் ஊடாக 10 வருடங்கள் வரை சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம் எனவும் பரிந்துரைத்துள்ளது -என்றார். (ஐ-10)

## பசில் கட்டிய ஆடம்பர வீடு காணியுடன் ஏலத்தில் விற்பனை

கொழும்பு, பெப்.25
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் அவரது மைத்துனர் திருக்குமார் நடேசன் ஆகியோருக்குச் சொந்தமானதென நம்பப்படும் மல்வானையிலுள்ள 16 ஏக்கர் காணி, ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக எதிர்வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதி இந்தக் காணி ஏலத்தில் விடப்படும்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச 16 ஏக்கர் காணியை 64 மில்லியன் ரூபாவுக்கு வாங்கி, அதில் 125 மில்லியன் ருபா செலவில் ஆடம்பர வீடொன்றை நிர்மாணித்திருப்பதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தக் காணி தனது இல்லையென அவர் தெரிவித்துள்ளார். இதையடுத்து மல்வானையிலுள்ள வீட்டுடன் கூடிய 16 ஏக்கர் காணியை ஏல விற்பனை செய்யுமாறு பூகொடை நீதிவான் அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவும், முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்சவின் கணவர் திருக்குமார் நடேசனும் முதல் மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்தக் காணியும், அதிலுள்ள வீடும் பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்தி வாங்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் சட்டத்தரணிகள் இந்தக் காணி அவருக்குரியதல்ல என மறுத்திருந்திருந்தனர். இதே விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கெதிராக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (ஐ-10)

### கொட்டாஞ்சேனை வெள்ளை வான் கடத்தல் சம்பவம்

# முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவிடமும் வாக்குமூலம்

கொழும்பு, பெப்.25
கொழும்பு கொட்டாஞ்சேனைப்பகுதியில் வெள்ளை வானில் இருவர் கடத்தப்பட்டு காணாமல் ஆக் கப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம், எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்குமூலம் பெறப்படும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

ப. லோகநாதன், இ.பரமானந்தன் ஆகியோர் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் வானொன்றில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். இந்தக் கடத்தல் தொடர்பாகவே கொழும்பு நீதிவான் மன்றில் நேற்று முன்தினம் வழக்கு நடைபெற்றது.

இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய வான், வெலிசறை கடற்படை முகாமுக்குப் பின் பகுதியில் இருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்ததாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கெனவே தெரிவித்திருந்தனர்.

அவர்கள் நீதிமன்றில் மேலும் தெரிவித்ததாவது,

இந்தக் கடத்தல் தொடர்பாக, கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரிகளாக இருந்த பொலிஸ் பரிசோதகர் சமந்த குலதுங்க மற்றும் தற்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவான் வேதசிங்க ஆகி யோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட இருவரில் ஒருவரின் அலைபேசியைப் பயன்படுத்திய லெப்டினன் கொமாண்டர் தயானந்தவைக் கைது செய்யத் தயாராகிய போது, கைது செய்ய வேண்டாம் என்று அப்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவால் தாம் பணிக்கப்பட்டதாக இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள அநுர சேனநாயக்கவிடம் எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்குமூலம் பெறப்படவுள்ளது.

லெப்டினன் கொமாண்டர் தயானந்தவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு, 14 நாள்களுக்குள் குற்றப்புலனாய்வுப் பிரிவில் அவரை முன்னிலையாகுமாறு தகவல் வழங்கப்பட்டுள்ளது-என்றனர்.

இதனைத்தொடர்ந்து, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வெலிசறை முகாமின் அதிகாரியாக இருந்தவரும், தற்போது கடற்படை லெப்டினன் கொமாண்டராக உள்ளவருமான தம்மிக அனில் மாபாவை, அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி உத்தரவிட்டார். (ஐ-10)

# விக்ஸ்காடு மக்களின் போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது

வவுனியா,பெப்.25
வவுனியா இராசேந்திரகுளம், விக்ஸ்காட்டுப் பகுதியில் வசிக்கும் மக்கள், தமது காணிகளில் தாம் வாழ்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி, வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆரம்பித்த போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகப் போராட்டத்தை மேற்கொண்ட மக்கள், அரசியல் தலைவர்கள் தங்களுடைய விடயத்தில் அக்கறை கொள்ளவில்லை என்று தெரிவித்து அன்றைதினம் இரவு வீதியில் இறங்கிப் போராட்டத்தை மேற்கொள்வதற்குத் தயாராகினர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் போராட்ட இடத்துக்குச் சென்று மக்களைச் சந்தித்தார். மக்களுடைய கோரிக்கைகளை கேட்டறிந்தார். தம்மால் முடிந்தளவில் உயர் மட்ட குழுக்களுடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுத்தர முயற்சிப்பதாக அவர் தெரிவித்திருந்ததுடன், போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களுக்கு இரவு நேர உணவையும் அமைச்சர் வழங்கினார்.



எனினும் அவர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டத்தைத் தொடர்ந்தனர். வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புகள் மக்களுக்கு வேண்டிய உணவு வகைகளை இதன்போது வழங்கியிருந்தனர்.

**பின்னணி**

விக்ஸ்காட்டுப்பகுதியில் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக வசிக்கும் சுமார் 47 குடும்பங்கள், தாம் தொடர்ந்தும் வன இலாகாவினரால் தொந்தரவுக்குள்ளாகுவதாகவும் , தமக்கு காணி உறுதிப் பத்திரமோ, வீட்டுத்திட்டமோ இது வரை வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டி கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்னால் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இரண்டாம் நாளான நேற்று முன்தினம், மக்களுடைய நிலமைகளை ஆராய்வதற்கு வவுனியா மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இராசேந்திரகுளம் விக்ஸ் காட்டுக்குச் சென்றனர். மக்கள் இருப்பதற்கு இடவசதிகள் இன்றியே காட்டை அழித்து குடியமர்ந்துள்ளனர் என தெரிவித்த குழுவினர், அந்த மக்கள் குடியமர்வதற்கு அந்த பகுதியிலே உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பகுதியில் 47 குடும்பங்களையும் குடியமர்த்துவதற்கான காணியைத் தெரிவு செய்தனர். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையையும் மேற்கொண்டனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த மக்கள், தாம் 6 ஆண்டுகளாக குடியமர்ந்த விக்ஸ் காட்டுப் பகுதியில் உள்ள காணிகளே தமக்கு வேண்டும், எனவே அதற்கான பத்திரங்களைத் தாருங்கள் எனத் தெரிவித்து போராட்டத்தை நேற்றும் தொடர்ந்தனர். (ஐ-21)

## பல்கலைக்கழகங்களில் பகிடிவதை; இணையம் ஊடாக முறையிடலாம்

கொழும்பு, பெப்.25
பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை மற்றும் மாணவர்கள் முகம் கொடுக்கும் அனைத்துச் சித்திரவதைகள் தொடர்பாகவும் இணையத்தின் ஊடாகவும், அலைபேசி மூலமாகவும் முறைப் பாடு செய்யலாம்.

இவ்வாறு பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக் குழுவின்தலைவர்மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

011 212 3456 என்ற இலக்கத்துக்கு அல்லது www.ugc.ac.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து எந்த நேரத்திலும் தமது பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் கூற முடியும்.

கடந்த காலங்களில் புதிதாக பல்கலைக் கழகங்களில் தங்களது படிப்பை தொடர வரும் மாணவர்களை, மூத்த மாணவர்கள் பகிடிவதை மற்றும் சித்திரவதைகள் செய்த மையால் பல மாண வர்கள் பல இன்னல்களுக்கு மன உளைச்சல்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

அதனைக்கருத்தில்கொண்டு இந்தமுறை அதனை முற்றாகத் தடுக்கும் நோக்குடன் முறைப் பாடு செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று மொஹான் டி சில்வா மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## தங்கம் கடத்த முயற்சித்தவருக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

கொழும்பு, பெப். 25
24 இலட்சம் ரூபா பெறுமதியான 32 தங்கக் கட்டிகளை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு கடத்த முற்பட்டவருக்கு, 50 ஆயிரம் ரூபா தண் டம் விதிக்கப்பட்டது

குறித்த நபரைச் சுங்கப் பிரிவினர் கைது செய்திருந்தனர். வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதான அவரிடமிருந்து 400 கிராம் எடையுடை 32 தங்கக் கட்டிகள்மீட்கப்பட்டன. அவரை நீதிமன்றில் முற் படுத்திய போது50ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-4)



*புதுக்குயிருப்பு பெண் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தால், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, புதுக்குடியிருப்பு கைவேலி அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-7)*

## 54 நாள்களுக்குள் 130 பேர் நாய்களால் கடியுண்டனர்

### தென்மராட்சிப் பகுதியில்

தென்மராட்சி, பெப் 25
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 54 நாள்களில் 130 பேர் நாய்களினால் கடியுண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விவரப்படி ஜனவரி மாதத்தில் 94 பேரும், பெப்ரவரி மாதத்தில் 36 பேரும் நாய்களினால் கடியுண்டுள்ளனர்.

இவர்களில் 9 பேர் தெரு நாய்களினாலும், மிகுதியானோர் வளர்ப்பு நாய்களினாலும் கடியுண்டுள்ளனர்.

தற்போது பெருமளவு நாய்கள் வீதிகளில் நடமாடுவதால் வீதியில் செல்வோர் நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நேற்றுமுன்தினம் 7 பேரும் நேற்று 3 பேரும் நாய்களினால் கடியுண்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த இரு மாதங்களில் நாய்களுடன் மோதுண்டு மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து காயமடைந்தோரின் எண்ணிக்கை 27 ஆக உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் கடந்த பத்து வருடங்களாக கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகள் உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படாமல் உள்ளன.

இதனால் வீதிகளில் நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் எனவும் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து வளர்ப்பு நாய்கள் பற்றிய பதிவுகள் விரைவில் உள்ளூராட்சிச் சபைகளால் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும், பதிவு செய்யப்படாத நாய்கள் கட்டாக்காலியாகக் கருதப்பட்டு அவற்றைப் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் மூலம் பிடிக்குமாறு பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் கூறினர். (த-9)

## தோட்ட நிர்வாகக் காணியை அபகரித்து கைத்தொழில் பேட்டை அமைக்க முயற்சி

நுவரெலியா, பெப்.25
பொகவந்தலாவ தேயிலை பயிர்செய்கைக் கம்பனியின் கீழ் இயங்கும் கொட்டியாகலை கீழ்ப்பிரிவில் தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமான, நான்கு ஏக்கர் காணியை, வெளிமாவட்டத்தைச் சேர்ந்த குழுவினர் சுவீகரிப்பதற்கு முயற்சித்து வருகின்றனர்.

இது குறித்த தோட்ட நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் பொகவந்தலாவைப் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்தனர்.

கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 5 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம், குறித்த தோட்டத்துக்குச் சென்று, இந்தக் காணி அரசுக்குச் சொந்தமானது. அதனால் இந்தக் காணியில் கைத்தொழில் பேட்டையொன்றை அமைக்கப் போகிறோம் என்று தோட்ட நிர்வாகத்திடம் தெரி வித்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த, தோட்ட மக்கள் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தின் முன்பாக ஒன்று கூடினர்.

'தோட்ட நிர்வாகத்துக்குச் சொந்தமான இடத்தில், கைத்தொழில் பேட்டைகள் மற்றும் விவசாயம் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டுமானால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும்' என்று தோட்ட முகாமையாளர் தெரிவித்தார். இது தொடர்பில் முறைப் பாடு ஒன்றையும் தோட்ட நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டனர். இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ய-43)

# காரில் மறைத்துக் கடத்திய 22 கிலோ கேரளக் கஞ்சா அதிகாலையில் சிக்கியது

## சாரதியுடன் மற்றொருவரும் கைது பளைப் பொலிஸ் அதிரடி நடவடிக்கை



கிளிநொச்சி, பெப். 25

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் காரில் கடத்தப்பட்ட 22 கிலோ கேரளக் கஞ்சாவை நேற்று அதிகாலை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைக் கடத்திய குற்றச்சாட்டில் வடமராட்சியைச் சேர்ந்த கார்ச் சாரதியும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டார தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 2 மணியளிவில் பளை நகர்ப் பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த கார் ஒன்றை மறித்துச் சோதனையிட்டனர். இதன்போது காரில் இருந்து 22 கிலோ கேரளக் கஞ்சா கண்டறியப்பட்டது. பொலிஸ் உத்தியோகத்தர்களான நவரட்ண மற்றும் ஜெயசிங்க ஆகியோர் கஞ்சாவை மீட்டனர்.

அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் காரில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். கடத்தலுக்குப் பயன்பட்ட கார் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. நாளை மறுதினம் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். வடமராட்சிப் பகுதியில் இந்த மாதத்தில் கஞ்சா பிடிபட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இது எனப் பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (த-6)

# சுற்றாடலில் டெங்குக் குடம்பிகள்; எட்டுப் பேருக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி, பெப். 25

சாவகச்சேரிச் சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரம் மற்றும் கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளின்போது டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட 8 குடியிருப்பாளர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தினங்களில் சுமார் 3 ஆயிரம் இடங்களில் தரிசிப்புச் செய்யப்பட்டு 24 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 337 பேருக்குச் சிவப்பு அறிவித்தலும் வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 17 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுணாவில், கல்வயல் ஆகிய பகுதிகளில் 915 இடங்களில் தரிசிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு மதில்களில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள், வெட்டப்பட்ட வாழை மரக் குற்றிகள் மற்றும் கால்நடைகள், பறவைகளுக்கு வைக்கப்பட்டிருந்த நீர்த் தொட்டிகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்பட்ட 8 பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றினால் தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மட்டுவில் தெற்கு மற்றும் மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளில்985 இடங்களில் தரிசிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட எட்டுப் பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சாவகச்சேரி நகரம் மற்றும் கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை போன்ற பிரிவுகளில் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெற்றன. இந்தப் பிரிவுகளில் ஆயிரத்து 45 இடங்களில் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு எட்டுப் பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினருடன் தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்கள், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் அலுவலர்கள், சாவகச்சேரி பொலிஸார், கிராம டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவினர் உட்பட பலர் இந்த டெங்கு ஒழிப்பில் பங்கேற்றனர். (த-9)

# மன்னார்–யாழ். கடைசி பஸ்ஸை சாவகச்சேரி ஊடாகச் செலுத்துக

## சாலை முகாமையாளரிடம் மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, பெப். 25

மன்னாரிலிருந்து தினமும் மாலையில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்படும் கடைசிப் பேருந்தைச் சாவகச்சேரி ஊடாகச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச மக்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாணப் பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர்.-

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்படும் பேருந்து தனங்களப்பு, நாவற்குளி ஊடாக யாழ்ப்பாணம் செல்வதால் தென்மராட்சிப் பிரதேச் மக்கள் நாவற்குளிச் சந்தியில் இறங்கி நீண்ட நேரம் காத்திருந்து தமது பயணத்தைத் தொடரவேண்டியுள்ளது.

மன்னாரிலிருந்து பூநகரி வரையான ஏ- 32 வீதியில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பயணிகள் தினமும் பயணிக்கின்றனர். தமது தேவைக்காக அல்லது உறவினர் வீடுகளுக்குச் செல்வதற்காக அவர்கள் கடைசிப் பேருந்தில் பயணிக்கின்றனர்.

சாலை முகாமையாளரின் பணிப்பின் பிரகாரம் கடைசிப் பேருந்து சாவகச்சேரிக்குச் செல்லாமல் தனங்களப்பு ஊடாக நாவற்குளி சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் செல்கிறது.

இந்தப் பேருந்தில் பயணிக்கும் பயணிகளிடம் சாவகச்சேரிக்கு பேருந்து செல்லாது எனக் கூறி நாவற்குளிக்குப் பயணச்சீட்டு வழங்கப்படுகிறது. இரவு 8.30 மணியளவில் நாவற்குளிச் சந்தியில் இறக்கிவிடப்படும் பயணிகள் தொடர்ந்து பயணம் செய்வதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

இரவு வேளையில் தனியார் பேருந்துச் சேவைகள் இல்லாததால் சாவகச்சேரியிலிருந்து நாவற்குளி வரை பெருமளவு பயணிகள் பயணிப்பதற்குக் காத்திருக்கின்றனர். மன்னாரிலிருந்து புறப்படும் கடைசிப் பேருந்து சாவகச்சேரி ஊடாகப் பயணித்தால் ஏ-32 மார்க்கத்தில் பயணிக்கும் பயணிகள் சாவகச்சேரியில் இறங்குவதற்கும் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்குக் காத்திருக்கும் பயணிகள் செல்வதற்கும் வசதியாக இருக்குமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-9)

# குடிதண்ணீர் பெறுவதற்கு திண்டாடும் பூநகரி மக்கள்

## பாடசாலை மாணவர்களும் அந்தரிப்பு

கிளிநொச்சி, பெப்.25

கிளிநொச்சி- பூநகரிப் பிரதேசத்தில் தொடர்ந்தும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதனைப் பெற்றுக்கொள்வதில் தாம் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேறியுள்ள 7 ஆயிரத்து 335 குடும்பங்களில் 10 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சுமார் 3 ஆயிரத்து 112 குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய நிலை உள்ளது. பூநகரிப் பிரதேசம் முழுவதும் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் குழாய்களின் மூலம் அல்லது பவுசர்களின் மூலமே பெறவேண்டும்.

கடந்த காலங்களில் இவ்வாறுதான் எமக்குக் குடிதண்ணீர் கிடைத்தது. இன்று கடுமையான வறட்சி நிலவுகின்றது. எனவே எமக்கான குடிதண்ணீர் வசதிகள் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும்.

இங்குள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குக் குடிதண்ணீர் மிகவும் அவசியமாக உள்ளது. பல பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குக் குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைக்ககப்பட்டுள்ளது.

ஆனால் வறட்சியின் பிடியில் உள்ள பூநகரியில் கிட்டத்தட்ட ஒன்பது பாடசாலைகளுக்கு இதுவரை இவ்வாறான திட்டங்கள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் அந்தப் பாடசாலைகளில் தொடர்ச்சியாகக் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மறவன்குறிச்சி, கொல்லக்குறிச்சி, இராமலிங்கம் வீதி, பரமன்கிராய், கறுக்காய் தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், சித்தங்கேணி, நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. எனவே அதிகாரிகள் மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தவேண்டும். வறட்சி தொடர்ந்து நிலவுமானால் இந்தக் கிராமங்களைச்சேர்ந்த மக்கள் குடிதண்ணீருக்காகவே இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் - என்றனர்.

"பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் குடிதண்ணீர் பிரச்சினை ஒவ்வொரு வருடமும் உள்ளது. இந்த வருடம் நிலவும் வறட்சி காரணமாக எமது பிரதேச மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். இது தொடர்பாக எமது மாவட்ட செயலகத்தினூடாக இடர் முகாமைத்துவ அமைச்சிடம் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார்கள்" எனப் பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரன் தெரிவித்தார். (த-21-ரி)

# கஞ்சாக் கடத்தலுடன் தொடர்புடைய நால்வர் தொடர்ந்தும் மறியலில்

கிளிநொச்சியின் பல பகுதிகளில் கஞ்சாக் கடத்தல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு பொலிஸ் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத் தப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த 12 ஆம் திகதி வீதிப் போக்குவரத்துக் கடமையில் நின்ற பொலிசார் இயக்கச்சிப் பகுதியில் கார் ஒன்றை மறித்துச் சோதனை செய்தனர். இதன்போது சுமார் 2 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாவு டன் 3 பேர் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களையும் நீதிமன்றில் முற்படுத்தி 7 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் 4 சந்தேக நபர்களும் பொலிஸாரினால் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் நீதிவான். (த-6)

# சீன உயர் மட்டக் குழுவினர் மகிந்த ராஜபக்சவுடன் சந்திப்பு



கொழும்பு, பெப்.25
அம்பாந்தோட்டை முதலீட்டு வலய விவகாரம் தொடர்பாக, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீனாவின் உயர் மட்டக் குழுவினர், முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்துலக விவகாரங்களுக்கான திணைக்களத்தின் தலைவரான சொங் டாவோ தலைமையிலான குழுவினர், நேற்று முன்தினம் கொழும்பில் இந்தச் சந்திப்பை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான சீனத் தூதரும், முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸும் கலந்து கொண்டனர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 வீத உரிமையைச் சீனாவுக்கு வழங்குவதற்கும், முதலீட்டு வலயத்தை அமைப்பதற்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகளைச் சீனாவுக்கு வழங்குவதற்கும் மகிந்த ராஜபக்ச கடும்எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இந்த விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்த சந்திப்பில் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்னர், மகிந்த ராஜபக்ச தலைமையில் கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரையும் சீன உயர் மட்டக் குழுவினர் சந்தித்தனர். (ஐ-10)

# அண்ணனால் உதைபட்ட தங்கைக்கு ஈரலில் பாதிப்பு

தென்மராட்சி,பெப்.25
அண்ணன் காலால் உதைந்ததில், 11 வயது தங்கையின் ஈரலில் பாதிப்பு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவில் பகுதியில் இடம்பெற்றது. அண்ணனால் உதைக்கப்பட்டார் எனக்கூறிக் குறித்த சிறுமி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பரிசோதனைகளை மேற்கொண்ட வைத்தியர்கள், சிறுமிக்கு ஈரலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

அதனையடுத்து குறித்த சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

### புதிய அரசமைப்புத் தொடர்பாக

# அரசு இன்னும் தீர்மானம் இல்லை

### நீதியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.25
தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஒற்றையாட்சியின் அடிப்படையில் தயாரிப்பதா அல்லது சமஷ்டி அடிப்படையில் தயாரிப்பதா என்று அரசு இன்னும் தீர்மானத்துக்கு வரவில்லை. -இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக மகிந்த அணியினர் கூறி வருகின்றமை தொடர்பில் கருத்துக் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் முதற் பணியாக அது தொடர்பிலான மக்களின் கருத்துக்களை நாம் திரட்டினோம். பல்வேறு வகையான யோசனைகளை மக்கள் தெரிவித்துள்ளனர். அவ்வாறு தெரிவிக்கப்பட்ட எந்தவொரு யோசனையையும் நாம் ஏற்கவில்லை.

ஆனால், இந்தப் பணி தொடங்குவதற்கு முன்னதாகவே அரசமைப்புக்கு எதிராக பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இனவாதத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்பவர்கள் இதற்கு எதிராகப் பரப்புரை செய்து வருகின்றனர்.

இது எப்படி அமையப் போகின்றது என்று தெரியாமல் கற்பனையில் ஓர் அரசமைப்பை உருவாக்கிக் கொண்டு, அவர்கள் பரப்புரை செய்து வருகின்றனர். நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகின்றோம் என்றும், சமஷ்டியை வழங்கப் போகின்றோம் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர்.

உண்மையில் அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்று அரசு இன்னும் எந்தவொரு தீர்மானத்துக்கும் வரவில்லை. ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்றும் நாம் முடிவெடுக்கவில்லை. ஆனால், அரசியல் வங்குரோத்து அடைந்தவர்கள் சமஷ்டி தான் என்று முடிவெடுத்து விட்டனர். அதன் அடிப்படையில் பரப்புரையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உண்மையில் ஆட்சி அமைத்திருக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் நினைத்தால், விரும்பியவாறு அரசமைப்பு ஒன்றைத் தயாரித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அதை நிறைவேற்ற முடியும். ஆனால், நாம் அதை விரும்பவில்லை. அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அரசமைப்பை உருவாக்க விரும்புகின்றோம்.

ஆகவே, அரசமைப்பு தொடர்பாக சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படும் குற்றச்சாட்டை நாம் நிராகரிக்கின்றோம். அவ்வாறான எந்தவொரு சட்ட வரைபும் தயாரிக்கப்படவில்லை. வழிநடத்தல் குழு ஒவ்வொன்றாக ஆராய்ந்து வருகிறது. அனைவரும் இணங்குகின்ற விடயங்களையும் தெரிவு செய்து கொண்டு வருகிறோம். - என்றார். (ஐ-3)

# சட்ட விரோதமாக புலம்பெயர்வோரால் அந்தந்த நாடுகளுக்கு பெரும் பிரச்சினை

### அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25
சட்டவிரோதமாக புலம்பெயர்வோர் தொடர்பில் ஒவ்வொரு நாடுகளிலும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது போன்று, பன்னாட்டு ரீதியிலும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. சட்ட விரோதமாகப் புலம்பெயர்வோர் அந்த நாடுகளில் சுகாதார, சமூக, அரசியல் பிரச்சினைகள் பலவற்றை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புலம்பெயர்வோர் சுகாதாரம் தொடர்பான பன்னாட்டு ஆலோசனை மாநாட்டின் நிறைவு நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம்இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சட்டபூர்வமாக வருகை தரும் புலம்பெயர்வாளர்கள் நாட்டுக்கு ஆசீர்வாதம் என்பதுடன், சட்டவிரோத புலம்பெயர்வோர்களால் அந்த நாடுகளுக்கு சுகாதார, சமூக, அரசியல் பிரச்சினைகள் பலவற்றை ஏற்படுத்துகின்றனர்.

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தொடர்பான பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் தற்போது முன்னுரிமை அளித்துச் செயற்படுவதற்கும் அதுவே காரணம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் வருடாந்த மாநாடுகளுக்குச் செல்லும் போதும் அதனோடிணைந்த கலந்துரையாடல்களிலும் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சுகாதாரம் தொடர்பில் உள்நாட்டிலும், பன்னாட்டு ரீதியிலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் தனிப்பட்ட கவனம் செலுத்தி வருகிறேன்.

வெளியிடப்பட்ட கொழும்பு பிரகடனத்தின் நோக்கங்களை அடைவதற்காக அனைத்து அங்கத்துவ நாடுகளும் பாடுபடுமென்று நம்புகிறேன்'-என்றார்.

19 நாடுகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கடந்த 21ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமான மாநாடு, நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது. 2008ஆம் ஆண்டின் உலக சுகாதார அமைப்பின் சுகாதார மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கமைய ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் புலம்பெயர்ந்தோர் சுகாதாரம் தொடர்பான கொள்கையை தயாரித்து நடைமுறைப்படுத்த உடன்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் பூனம் பெத்ரபால் சிங், புலம்பெயர்வோர் தொடர்பான சர்வதேச அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் நெநெட் மோட்டஸ் உள்ளிட்ட வெளிநாட்டு பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-4)

# கருணாவைக் கொலை செய்ய முயற்சி; சந்தேக நபர் கைது

முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளித ரனைக் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பிலுள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்றபோது, அவரது உடம்பில் மோதிய ஒருவர், அவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்ய முயற்சித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சந்திவெளிப் பிரதேசத்தில் குறித்த சந்தேகநபரைக் கைது செய்வதற்கு, சிறப்புப் பொலிஸ் குழுவொன்று நடவடிக்கை எடுத்தது. அதன் அடிப்படையில் பொலிஸாரால் நேற்று முன்தினம் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் எனவும், அவர் இராணுவத்தால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுச் சமூகத்துடன் இணைக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர் என்றும் குறித்த சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

# கூட்டு அரசு ரூ.22,500 கோடி பணத்தைக் கொள்ளையடித்தது

### இப்படிக் கூறுகிறார் மகிந்தானந்த



கொழும்பு,பெப்.25
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர், இதுவரை கொள்ளையடித்த பணம் 22 ஆயிரத்து 500 கோடி ரூபாவாகும் என்று ஒன்றிணைந்த எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமே தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மைத்திரி - ரணில் அரசு ஆட்சிபீடமேறியதில் இருந்து, நாட்டு மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. அவர்களின் முதல் கொள்ளை மத்திய வங்கி பிணைமுறி மோசடியாகும். அதனைத் தொடர்ந்து கொள்ளைகள் வரிசையாக இடம்பெறுகின்றன.

தலைமை அமைச்சர் ரணில், அமைச்சர் மலிக் சமரவிக்ரம, சரித்த ரத்வத்த மற்றும் பாஸ்கரலிங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து இதுவரை கொள்ளையடித்த பணம் 22 ஆயிரத்து 500 கோடி ரூபாவாகும். இந்தக் கொள்ளை தொடருமே தவிர நிற்காது.

இந்த அரசை விரட்டியடித்தால்தான் இந்த அநியாயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ரணில் தலைமையிலான இந்தக் குழு விரைவில் விரட்டியடிக்கப்படும். மக்கள் இப்போதே இந்த அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கி விட்டனர்.

மக்கள் ஆணை வழங்கியது மைத்திரிக்கு. ஆனால், நாட்டை ஆட்சி செய்வதோ ரணில். இதை எப்படி மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்? மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் இந்த அரசுக்கு வாக்களித்தனர். இப்போது இந்த மக்கள் அரசால் ஏமாற்றப்பட்டுள்ளனர். இதற்கெல்லாம் விரைவில் முடிவு கட்டப்படும்-என்றார். (ஐ-3)

# நியூசிலாந்துக்குச் செல்ல முயற்சித்த 18 பேர் கைது

கொழும்பு, பெப். 25
சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக நியூசிலாந்துக்குச் செல்ல முயற்சித்த 18 பேர் நேற்று முன்தினம் நீர்கொழும்பு வெல்லாம் பிரதேசத்தில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக் குடிப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீர்கொழும்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ-10)



ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப் பகுதியில் முகாமிட்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புக்கு எதிராக தற்பொழுது பெரும் போரை ஆரம்பித்துள்ளது ஈராக் அரச படை. போருக்காக அணிவகுத்துச் செல்லும் இராணுவ வாகனமொன்றின் முன் கண்ணாடிகளை துப்பாக்கித் தோட்டாக்கள் பதம்பார்த்துள்ள ஒளிப்படமே இது. மேற்கு மோசூல் மீட்புப் போரின் உக்கிரத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் இந்தப் படம் அமைந்துள்ளது. (ம)

# கூட்டு விசாரணைக்குத் தயார்; வடகொரியா அதிரடி அறிவிப்பு

கோலாலம்பூர், பெப். 25
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் ஒன்றுவிட்ட சகோதரர் கிம் ஜோங் நாமின் கொலை தொடர்பில் கூட்டு விசாரணைக்குத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்தது வடகொரியா.

மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில், கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹவாங், வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வடகொரியத் தூதர் ஒருவருக்கும் கொலையில் தொடர்புண்டு என்று சந்தேகம் தெரிவித்தது மலேசியப் பொலிஸ். முன்னதாக, கிம் ஜோங் நாம் படுகொலை செய்யப்பட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் வடகொரிய அதிபரின் காட்டுமிராண்டித்தனமும், பதவி வெறியும் நிச்சயம் வெளிப்படும் என்று தென்கொரிய அதிபர் தெரிவித்திருந்தார். இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து, வடகொரியாவே கிம் ஜோங் நாமைக் கொன்றது என்று பலமான சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில், கூட்டு விசாரணைக்குத் தயார் என்றும் மலேசியாவில் வைத்தே விசாரணை நடத்தப்படச் சம்மதம் என்றும் வடகொரியா அறிவித்தது. (ம)



கிம் ஜோங் நாம்



கிம் ஜோங் உன்



# நோபல் பரிசை வென்ற கென்னத் ஆர்ரோ சாவு

வொஷிங்டன், பெப். 25
1972 ஆம் ஆண்டில் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை வென்றவரான அமெரிக்காவின் கென்னத் ஜெ ஆர்ரோ தனது 95 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் சாவடைந்தார்.

பொருளாதார மேதையான இவர் அடிப்படைக் கணிதத்திலும் சிறந்து விளங்கினார். மேலும், பொருளாதார கோட்பாடுகள் கொண்ட பல புத்தகங்களையும் ஆர்ரோ எழுதியுள்ளார். அமெரிக்காவின் முக்கிய பல்கலைக் கழகங்களின் ஆலோசகராகவும் ஆர்ரோ பணியாற்றியுள்ளார். அவரது இழப்பு பொருளாதாரத் துறைக்குப் பின்னடைவு என்று ஆர்ரோவின் மகன் தெரிவித்தார். (ம)

# குடியரசுத் தலைவரி
# பதிவானது முறைப்ப

சென்னை, பெப். 25
தமிழக முதல்வர் எடப்பாடி பழனி
தலைமையிலான அமைச்சரவை மீ
தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில்
வன்முறை தொடர்பாக தி.மு. கழக
செயல் தலைவரும் எதிர்கட்சித் தலைவ
ஸ்டாலின் இந்தியக் குடியரசுத் தலை
ணாப் முகர்ஜியை நேற்றுமுன்தினம் ச
முறைப்பாடு வழங்கினார்.
தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சா
றும் அவர் தலைமையிலான அமைச்
மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு கட
ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற
தடவைகள் சபை ஒத்திவைக்கப்பட்டு
3.30 மணியளவில் பெரும்பான்மை அ
நிரூபித்தார் எடப்பாடி பழனிச்சாமி.
வாக்கெடுப்பின் போது, முன்னாள் மு
ஓ.பன்னீர்செல்வமும் அவருக்குச் சா
அ.தி.மு. கழக அமைச்சர்களும் இரகசி
கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்
யுறுத்தினர். தி.மு. கழகத்தின் செயல்
வரும் தமிழக சட்டசபையின் எதிர்கட்சி
வருமான ஸ்டாலினும் இரகசிய வாக்கெ
வலியுறுத்தினார். இல்லாதுவிடில் சட்
உறுப்பினர்கள் தமது தொகுதிக
சென்றுவந்த பின்னர் வாக்கெடுப்பு நட
என்றும் அவர் குறிப்பிட்டார்.
இது தொடர்பான கூச்சல்களும், கு
களும் தொடர்ந்து நடைபெற்றன. இ
தி.மு. கழகத்தினர் வலுக்கட்டாயமாக
யேற்றப்பட்டனர். கை கலப்புக்களும்
பெற்றன. காங்கிரஸ் தானாக வெளி
செய்தது. பின்னர் வாக்கெடுப்பு நடைபெ
இதில் 122 சட்டமன்ற உறுப்பினர்
ஆதரவுடன் பெரும்பான்மையை நிரூ
எடப்பாடி பழனிச்சாமி.
இந்த வாக்கெடுப்பு ஜனநாயகக் கெ
என்று அன்றைய தினமே தமிழக பெ
ஆளுநர் வித்யாசாகர் ராவை ச
முறையிட்டார் ஸ்டாலின். குடியரசுத் த
பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர
ஆகியோரைச் சந்திக்கும் விருப்பத்
அவர் வெளியிட்டிருந்தார். இந்த நிலை
குடியரசுத் தலைவரிடம் நேற்றுமுன்தினம்
பாடு பதிவுசெய்யப்பட்டது. எனினும்
னால் மோடியைச் சந்திக்க இயலவில்



# டயர் அல் ஷோர் நகருக்குள் நுழை

டமஸ்கஸ், பெப். 25
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள சிரியாவின் முக்கிய நகர்களில் ஒன்றான டயர் அல் ஷோர் நகருக்குள் நுழைந்தது சிரிய அரச படை.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. சிரியாவின் முக்கிய நகர்களில் ஒன்றான டயர் அல் ஷோர், ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே இருந்தது. ஐ.எஸ்ஸின் கோட்டைகளில் ஒன்று என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு



## லைவரிடம் றைப்பாடு

பாடி பழனிச்சாமி
ச்சரவை மீது நடத்
கெடுப்பில் ஏற்பட்ட
தி.மு. கழகத்தின்
சித் தலைவருமான
ரசுத் தலைவர் பிர
முன்தினம் சந்தித்து

டி பழனிச்சாமி மற்
ான அமைச்சரவை
கெடுப்பு கடந்த 18
நடைபெற்றது. இரு
க்கப்பட்டு பிற்பகல்
பான்மை ஆதரவை
ழனிச்சாமி. இந்த
ன்னாள் முதல்வர்
வருக்குச் சார்பான
ளும் இரகசிய வாக்
ண்டும் என்று வலி
தின் செயல் தலை
ன் எதிர்கட்சித் தலை
சிய வாக்கெடுப்பை
துவிடில் சட்டமன்ற
தொகுதிகளுக்கு
கெடுப்பு நடத்தலாம்
ர்.

ல்களும், குழப்பங்
பற்றன. இதனால்
கட்டாயமாக வெளி
ப்புக்களும் இடம்
ாக வெளிநடப்புச்
டுப்பு நடைபெற்றது.
உறுப்பினர்களின்
மையை நிரூபித்தார்

நாயகக் கொலை
தமிழக பொறுப்பு
ராவை சந்தித்து
தடியரசுத் தலைவர்
ர் நரேந்திர மோடி
விருப்பத்தையும்
. இந்த நிலையில்,
முன்தினம் முறைப்
எனினும் ஸ்டாலி
இயலவில்லை. (ம)





# 56 ஆயுததாரிகள் கொன்று குவிப்பு

## அல் பாப் நகர் மீட்பில் வேட்டை

பெய்ரூட், பெப். 25
சிரியாவின் அல் பாப் நகரில், முகாமிட்டிருக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் 56 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்.
அல் பாப் நகரை மீட்கும் போர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. தரைவழியாகவும் வான் வழியாகவும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அமெ ரிக்கா, ரஷ்யா, துருக்கி உள்ளிட்ட நாடுகள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு முடிவு கட்டுவதில் கடும் முனைப்பாக உள்ளன.
நேற்றுமுன்தினம் அமெரிக்கா தலைமையில் கூட்டுப் படைகள் நடத்திய தரைவழித் தாக்குதலில் 56 ஆயுத தாரிகள் கொல்லப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முகாம்கள், இராணுவத் தளபாடங்கள், வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட வாகனங்கள் பலவும் சேதமாக்கப்பட்டன என்றும் ப்ன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அல் பாப் நகருக்கு அருகில் உள்ள டாதிப், காபசின் பிஸாகா உள்ளிட்ட நகர்களும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே உள்ளன. அவற்றிலும் நேற்றுமுன்தினம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.
எனினும் முழுமையான விவரங்கள் எவையும் வெளியிடப் படவில்லை. (ம)

## யூதருக்கு ஆதரவாகத் துடிக்கிறார் இவன்கா

வொஷிங்டன், பெப். 25
யூத சமூகத்துக்கு எதிராக அச்சுறுத்தல் தொடர் வதையடுத்து மத சகிப்புதன்மைக்கு ஆதரவாக ட்ரம் பின் மூத்த மகளான இவன்கா ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.
உலகின் பெரும்பாலான பகுதிகளில் நடக்கும் குண்டு வெடிப்புக்களும் அமெரிக்காவில் அரங்கேறும் அசம் பாவிதங்களும் யூதர்களுக்கு எதிரான எச்சரிக்கை மணி யாகவே அமைந்து வருகின்றன. இந்த நிலையில் இவன்கா ட்ரம்ப், கடந்த திங்கட்கிழமை தனது ருவிற்றர் பதிவில் அமெரிக்கா என்ற நாடு மத சகிப்புதன்மை யால் உருவானது. நாம் நமது இல்லத்தை வழிபாடுகள் மற்றும் மத மையங்களால் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.
இவன்கா ட்ரம்பின் கணவரான குஷ்னர் யூத மதத்தை சேர்ந்தவர். திருமணத்தின்போது இவன்கா ட்ரம்ப் மதத்துக்கு மாறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## 15 இராணுவச் சிப்பாய்கள் சாவு

நைஜீரியாவின் நைஜர் நகரில், மேற்கு பகுதியில் போகோ ஹறம் ஆயுததாரிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 15 சிப்பாய்கள் சாவடைந்தனர்.
உயிரிழந்த 15 சிப்பாய்களைத் தவிர 19 பேர்காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று நைஜீரிய ராணுவத்தின் செய் தித் தொடர்பாளரான சியோதெள அல்தெளலா தெரிவித்தார். ஆயுத தாரிகளைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். நைஜீரியப் பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் தாக்குதலுக்கு தமது கண்டனத்தைத் தெரி வித்தனர். (ம)

## ழைந்தது சிரிய அரச படை



அந்த அமைப்பு டயர் அல் ஷோரில் தனது ஆதிக்கத்தை வேரூன்றச் செய்தி ருந்தது. இந்த நிலையில் நீண்டகாலத் திட்டத்தின் பின்னர் நகரை மீட்கும் போரில் களமிறங்கி யுள்ளது சிரிய அரச படை.
டயர் அல் ஷோர் நகருடன் தனது எல் லையைப் பகிர்கிறது ராக்கா நகரம். இந்த நகரமும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் பின் பிடியிலேயே உள்ளது. இதனால் டயர் அல் ஷோர் நகரை மீட்டால் ராக்கா நகர் மீட்கப்படுவதும் இலகுவாகும். எனவே இந்த மீட்புப் போர் ஐ.எஸ். அமைப் புக்கு எதிரான நகர்வுகளில் மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகிறது. (ம)

## 'ஜெ'வின் பிறந்தநாளான நேற்றுக் கோலாகலம்

சென்னை, பெப். 25
தமிழக முன்னாள் முதல் வர் ஜெயலலிதாவின் 69 ஆவது பிறந்த தினமான நேற்று, தமிழகம் முழுவதும் அரச விழாபோல் பெரும் எடுப்பில் கொண் டாடப்பட்டது.
69 லட்சம் மரக் கன்றுகளை நடும் மாபெரும் திட் டத்தை தமிழக அரசு நேற்றுத் தொடங்கியது. சென்னை ஓமந் தூரார் அரசினர் தோட்டத்தில் தமி ழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச் சாமி மரக்கன்று களை நட்டுவைத்து இந்தப் பெரும் திட் டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத் துக்காக பலகோடி ரூபா செலவில் விளம்பர ஏற் பாடுகள் செய்யப்பட்டன என்று இந்திய ஊடகங் கள் குறிப்பிட்டன.
அதேபோல், ஜெய லலிதாவின் பிறந்த நாளையொட்டி, தனியார் மருத்துவமனைகளின் சார்பில் தமிழ் நாடு முழு வதும் 690 சிறப்பு மருத் துவ முகாம்களுக்கு ஏற் பாடு செய்யப்பட்டது. இந்த மருத்துவ முகாம் களை தனியார் மருத்துவ மனைகள் தாமாக முன் வந்து நடத்துவது போன்ற தோற்றம் திட்ட மிட்டு ஏற்படுத்தப்பட்டுள் ளது. மாறாக மருத்துவ முகாம்கள் அனைத்தும் அரசு கொடுக்கும் அழுத் தம் காரணமாகவே நடத் தப்படுகின்றன என்றும் சில ஊடகங்கள் குற்றச் சாட்டை முன்வைத்தன.
முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தனது வீட்டில் ஜெயலலிதாவின் உருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத் தினார்.
ஜெயலலிதாவின் அண் ணன் மகள் தீபா, ஜெய லலிதாவின் நினை விடத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தமி ழகமெங்கும் பரவ லாக ஜெயலலிதா வின் பிறந்தநாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட் டது.



ப.ம.க. நிறுவுநர் ராமதாஸ் இந்தப் பெரும் எடுப்புக் கொண் டாட்டங் களுக் த் தனது கண்ட த்தைத் தெரி த்தார். ஊழல் மோசடி யில் சி கிய ஒரு குற்றவாளியி பிறந்த தினத்தை அ ச விழா போல் கொ டாடுவது வருத்தத்து தரியது என்று அவர் து கண் டன அறிக்கை ல் குறிப் பிட்டார். (ம)

# கிழக்கு மாகாண பொருளாதார மத்திய நிலையத்திற்கு 300 மில்லியன ரூபா நிதி ஒதுக்கீடு

## விவசாய உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தத் திட்டம்

வணிகம்

"அதிகளவான விவசாய உற்பத்தியாளர்களைக் கொண்ட பிரதேசமான களுதாவளையில் கிழக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் அமையவுள்ளது"

கிழக்கு மாகாணத்தின் முக்கிய கேந்திர நிலையமான மட்டக்களப்பில் பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி இந்த பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கான தொகை மதிப்பீடாக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி தெரிவித்துள்ளார்.



கிழக்கு மாகாணத்தின் மத்திய நிலையமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதான களுதாவளைப் பகுதியில் மேற்படி பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான விவசாய உற்பத்தியாளர்களைக் கொண்ட பிராந்தியமாக களுதாவளைப் பிரதேசம் முக்கியத்துவம் பெறும் காரணங்களைக் கருத்திற்கொண்டு பொருளாதார மத்திய நிலையம் இங்கு அமையவுள்ளதுடன் கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்தியாளர்களுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்குவதற்குமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையமாக இவை செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியாவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலும் அவை பல்வேறு காரணங்களால் பின்னடிப்புச் செய்யப்பட்டுவருகின்ற நிலையிலே கிழக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளமை நோக்கத்தக்கது.

# எயார்பொட்

## காற்றை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் கார்




தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகம் அதிகரித்துவருகின்ற போதும் நாம் வாழ்கின்ற சுற்றாடலில் சேர் கின்ற கழிவுகளின் எண்ணிக்கை அதற்கேற்பவே அதிகப்படுகிறது. சூழல் மாசுறல் என்பது கட்டுப்படுத்தப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் இடைவிலகலோடே இருந்துவருகிறது.

இந்த நிலையிலே காற்றை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் கார் வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அழுத்தப்பட்ட காற்றை எரிபொருளாகக் கொண்டு இயங்குநிலை பெறக்கூடியதான 'எயார்பொட்' (AIRPOD) வகை கார்களை டாடா நிறுவனம் வடிவமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சுற்றுச்சூழல் மாசுறாத வகையில் பெற்றோல், டீசலுக்கு மாற்றான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் இயங்கும் கார்களின் உருவாக்கம் குறித்தான ஆய்வுகள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடந்து வருகின்ற நிலையில் மேற்படி காற்றை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் கார்கள் வருகின்ற 2020ஆம் ஆண்டு சந்தைக்கு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்பதாக பெற்றோல், டீசலுக்கு மாற்றாக மின்சாரத்தில் இயங்குநிலை பெறும் மின்கலக் கார்களே இதுவரையாக சந்தைகளில் முன்னிலை பெற்றிருந்தமை நோக்கத்தக்கது.

நுட்பம்

# 'செலான் செல்பி' டிஜிற்றல் வங்கிக் கணக்கு அறிமுகம்

இளைஞர்களுக்கான 'செலான் செல்பி' டிஜிற்றல் வங்கிக் கணக்கை செலான் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

18 வயது தொடக்கம் 26 வயது வரையான தொழிநுட்ப ஆர்வமுடைய இளைஞர்களுக்கு நிதி சார் புதிய அனுபவத்தை வழங்கும் விதமாக தனித்துவ அனுகூலங்களை உடையதாக மேற்படி கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக செலான் வங்கியானது நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு வழங்குநரான டயலொக் நிறுவனத்துடன் இணைந்து டேட்டாவை விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு பல்வகை டிஜிற்றல் அனுகூலங்களை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 'செலான் செல்பி' உலகில் முதன்முறையாக வங்கியானது தொடர்பாடல் வழங்குநருடன் இணைந்து டிஜிற்றல் வட்டி எனும் கருப்பொருளை முன்வைத்துள்ளது.

இதன் மூலமாக சேமிப்புக் கணக்கின் வட்டியானது, கணக்கு வைப்பாளர் விரும்பும் பட்சத்தில் நேரடியாக டயலொக் கைபேசிகளைக் கொண்டுள்ள கணக்கு வைப்பாளர்களுக்கான தகவல்களை மீள் நிரப்ப மற்றும் குரல் சேவை போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கு பயனுறுதியாக்கப்படுகிறது.

தவிர செலான் செல்பியின் சிப் பொருத்திய 'டெபிட் காட்' மூலம் பொருள் கொள்வனவு, உணவகம் மற்றும் விடுமுறை ஆகியவற்றுக்கான சிறப்பு விலைக் கழிவுகள் மற்றும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளமுடிவதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் கணக்கு வைப்பாளர் 21 வயதை அடையும்போது பட்டப்படிப்பு அல்லது தொழில் சார் தகைமையை நிறைவு செய்திருப்பின் 25 ஆயிரம் ரூபா வரையான பணப்பரிசைப் பெற்றுக்கொள்ளமுடியும். கல்வி மற்றும் வியாபாரத்துக்கான கடன் வசதிகளையும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களில் பெறலாம். அத்துடன் நிபந்தனைக்குட்பட்ட முறையில் இளைஞர்கள் சிறப்பான நடைமுறைக் கணக்கையும் காசோலைப் புத்தகத்தையும் நிலையான வருமானமாக 15 ஆயிரம் ரூபாவைப் பெறும் கணக்கு வைப்பாளர்கள் சிறப்பு கிரெடிட் காட் வசதியையும் பெற்றுக்கொள்ள முடிவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SEYLAN
BANK PLC
The bank with a heart



# தெற்காசியாவின் சிறந்த விமான சேவை வழங்குநராக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை தெரிவு

தெற்காசியாவின் சிறந்த விமான சேவை வழங்கும் நிறுவனமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சீனாவின் பிரபல சுற்றுலா சஞ்சிகையினால் நடத்தப்பட்ட பத்தாவது வருடாந்த சுற்றுலா விருது விழாவின் போதே மேற்படி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலத்தின் பின்பாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை பெற்றுக் கொண்ட விருதாக இது விளங்குகிறது.

தவிர, இதற்கு முன்பதாக வேள்ட் ரவல்ட் எவாட் (World Traveled Award) விழாவின்போதும் இந்திய பெருங்கடல் எல்லையில் செயற்படுகின்ற உலகின் முதலாவது விமான சேவையாகவும், முழுமையான சேவையை வழங்கும் மத்திய மற்றும் தெற்காசிய எல்லையின் விமான சேவையாகவும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை விருதைப் பெற்றுக்கொண்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

மேலும் சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான பயணங்களை விஸ்தரிப்பதற்காக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருவதான முயற்சிகளுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி அ.நிரூபா

# நமது எதிர்காலச் சந்ததியினரிடம் தலைமைப் பண்பை வளர்ப்போம்



இன்றைய சிறுவர்கள் தான் வருங்காலத்தில் நமது சமூகத்தை வழிநடத்தப் போகின்றவர்கள். இந்த சமூகத்தை உலக அரங்கில் சிறந்த சமூகமாக மிளிரச் செய்யும் ஆற்றல் அவர்கள் கையிலேயே உண்டு. எனவே இந்தச் சிறுவர்களுக்குத் தலைமைப்பண்பு அவசியம் கற்றுத்தரல் வேண்டும்.
அனைவருக்குமே பெரிய பொறுப்புக்களுக்கு வரவேண்டும், பெரும் சாதனைகளைப் புரியவேண்டும் என்பதே இலட்சியக்கனவாக இருக்கிறது. ஆனால், பெரும் பொறுப்புக்களுக்குவரும் பலர் அந்தப் பொறுப்புக்களை எப்படிக் கையாள வேண்டுமென்று அறியாதவர்களாக இருக்கின்றனர். சிறந்த தலைவனால் அந்தத் தலைவனுக்கு மட்டுமல்ல, அவனைச் சார்ந்த மக்களுக்கும் நன்மைகள் கிடைக்கும். தலைமைப்பண்பானது சிறுவர் பராயம்முதல் ஊக்கம் கொடுத்து வளர்த்து வந்தால்தான் பிற்காலத்தில் பெரும் பதவிகள், பெறுப்புக்களை அனைவரும் பயன்பெறும் வகையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.
தலைவர்கள் என்பவர்கள் பிறக்கிறார்கள். அவர்கள் உருவாக்கப்படுவதில்லை என்ற கருத்தும் உண்டு. ஆனால், ஜனநாயக ரீதியில் இந்தக்கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று. முன்பிள்ளைப்பருவம் முதலே பிள்ளையிடம் காணப்படும் தலைமைத்துவத்துக்கான பண்புகளை சரியாக இனங்கண்டு சரியான வழிப்படுத்தல்மூலம் நாட்டில் நல்ல தலைவர்களை உருவாக்கி விட முடியும். எனவே தலைமைப்பண்பை வளர்ப்பதற்கான அத்திபாரம்முன்பள்ளிகளிலே பலமாக இடப்படவேண்டும்.

### தலைமைப் பண்பு

மற்றையவர்களை சமாதானப்படுத்தியும் நெறிப்படுத்தியும் பொர்துநோக்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ள இலக்குகளை எட்டிடும் ஆற்றலே தலைமைப் பண்பாகும்" என மைக்கைவர் மற்றும் பேஜ் என்போர் சமுதாயம் என்ற புகழ்பெற்ற நூலில்குறிப்பிட்டுள்ளனர். இதேபோல் கீத் டேவிஸ் என்பவர் நன்கு வரையறுக்கப்பட்ட இலக்குகளை எட்டுவதற்கு, மற்றவர்களை இணங்கச்செய்து, உற்சாகத்துடன் செயற்படத்தூண்டும் ஆற்றலே தலைமையாகும்" என்றும் ஒட்வே டீட் என்பவர் விரும்பத்தக்கதாக காணப்படும் சில இலட்சியங்களை நோக்கி செயற்பட, ஒத்துழைப்பைத் தரும் வண்ணம் மக்களைத் தூண்டுகின்ற நடவடிக்கையே தலைமையாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். பொதுவாக நோக்கும்போது ஒரு குழுவினரை வழிநடத்து வதோ, பலர் மத்தியில் பேசுவதோ மட்டும் தலைமைப் பண்பாகாது. ஒருவர் தனது நேரான இயல்புகளையும் எதிரான இயல்புகளையும் புரிந்துகொண்டு தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் மேம்படுத்தும் ஆற்றலே தலைமைப் பண்பாகும்.

### சிறுவர் இடத்தே தலைமைப்பண்பை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு

இன்றைய பெற்றோரும்சரி, ஆசிரியரும் சரி தங்களது பிள்ளைகள் படித்து பரீட்சைகளில் உயர்புள்ளி பெற்று கௌரவமான தொழிலொன்றில் அமர்வதையே இறுதி இலட்சியமாகக் கொண்டு அதற்கான முன்னெடுப்புகளையே மேற்கொள்கின்றனர். இது மட்டுமல்லாமல் பிள்ளையிடம் தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் சந்தோசமாக வைத்திருக்க வேண்டும் என்ற உணர்வையும் ஊட்டி வளர்க்க வேண்டும். இதுவே தலைமைத்துவப் பண்புக்கான முதல் அத்திபாரமுமாகும். இதற்கு பெற்றோரோ, முன்பள்ளிகளோ ஒரு பிள்ளை செய்ய வேண்டிய முக்கிய விடயங்கள் எவை? என்பதை உணர்த்துவதுடன் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் வாழ்க்கையில் ஏதாவது நல்ல மாற்ற மொன்றைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தையும் அவர்கள் மனங்களில் விதைக்க வேண்டும்.

### கூடி விளையாடல்

இன்று சிறுவர் மத்தியில் அருகிவரும் பழக்கங்களில் ஒன்று கூடி விளையாடுதலாகும். பிள்ளைகள் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் விளையாடுவது பல்வேறு தலைமைப் பண்புகள் வளரக் களமாக அமையும்.
இன்றைய சமூகத்தில் ஒரே சமூக அந்தஸ்துள்ள குழந்தைகள் மட்டுமே ஒன்றாகச் சேர்ந்து பழகுவதற்கு பெற்றோர் அனுமதிப்பதுண்டு. இதனை விடுத்து அதே பிரதேசத்திலுள்ள வசதியில் குறைவான பிள்ளையையும் பெயர் சொல்லி அறிமுகப்படுத்தி ஒன்றாகப் பேசவும் விளையாடவும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இதனால் பிள்ளையிடம் தான் உயர்வு, மற்றையவர் தாழ்வு எனும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாது. எல்லோரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் பிள்ளையிடம் துளிர்விடும். ஏற்றத்தாழ்வுகள் இல்லாத இந்த இயல்பான மனப்பான்மைதான் தலைமைப்பண்புக்கு வேண்டிய அடிப்படைத் தேவையாகும்.

### ஆசிரியரே எடுத்துக்காட்டு

ஒரு முன்பிள்ளைப்பருவப்பிள்ளை சராசரியாகத் துயில் கொள்ளும் 12 தொடக்கம் 14 மணிநேரத்தைவிட மிகுதி நேரத்தின் பெரும்பகுதியை நான்கு மணிநேரத்துக்குமேல் (கிட்டத்தட்ட விழித்திருக்கும் நேரத்தின் மூன்றில் ஒரு பகுதி முன்பள்ளியிலேயே செலவு செய்கிறது. இதனை நோக்கும் போது பிள்ளையை வழிப்படுத்துவதில் பெற்றோரைவிட ஆசிரியரே முக்கியபங்கு வகிக்கிறார்.
ஒரு சிறந்த தலைமைத்துவத்துக்கான பண்புகள் அனைத்தையும் முன்பள்ளி ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். காரணம் முன்பிள்ளைப்பருவப் பிள்ளைகள் பெற்றோரை விட தமது ஆசிரியரையே அறிவு நிறைந்த ஜீவனாகக் கருதி அவர்கள் வழியைப் பின்பற்றத் தலைப்படுவர்.
ஆசிரியரின் ஒவ்வொரு நடவடிக்கையும் அவரால் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளும் அவரது உயர் குணத்தையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத் துவதாக அமைய வேண்டும். வன்முறைகளிடையே அமைதியை ஏற்படுத்துபவராகவும் துன்பங்களிடையே உதவுபவராகவும் கவலைகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்துபவராகவும் திகழ்வது இன்றியமையாதது.

### தலைமைப்பண்பை கண்டறிந்து வழிப்படுத்தல்

மாணவரிடையேயான ஊடாட்டத்தின்போது கற்றல் முயற்சியின்போதும் அவர்களிடம் காணப்படும் தலைமைத்துவத்துக்கான நல்லியல்புகள் கண்டறியப்பட்டு அவர்களின் நல்லியல்புக்கேற்ப பொறுப்புக்கள் வழங்கப்பட்டு அவ்வியல்புகள் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

> இன்று சிறுவர் மத்தியில் அருகிவரும் பழக்கங்களில் ஒன்று கூடி விளையாடுதலாகும். பிள்ளைகள் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் விளையாடுவது பல்வேறு தலைமைப் பண்புகள் வளரக் களமாக அமையும். இன்றைய சமூகத்தில் ஒரே சமூக அந்தஸ்துள்ள குழந்தைகள் மட்டுமே ஒன்றாகச் சேர்ந்து பழகுவதற்கு பெற்றோர் அனுமதிப் பதுண்டு.

### மொழிவளர்ச்சி

தலைமைத்துவத்துக்கான முக்கிய ஆற்றல்களில் ஒன்று சரியானதும் பண்பானதுமான மொழிப்பயன்பாடாகும். ஒருவர் தனது அறிவையும் திறனையும் வெளிப்படுத்த மொழி ஒரு சிறந்த ஆயுதமாகும். சமூகத்தின் தேவைகளைப் புரிந்து கொள்வதற்கும் தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் தெளிவாகத் தடையின்றி வெளிப்படுத்தவும், மொழியாற்றலின் அடிப் படைகள் முன்பிள்ளைப் பருவத்திலிருந்து வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

### குழு நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டல்

முன்பள்ளிகளில் எல்லா செயற்பாடுகளும் குழு நடவடிக்கையூடே மேற்கொள்ளப்படவேண்டும். அனைத்து மாணவரும் இவற்றில் பங்குபெறுவதற்கு ஊக்கம் தரல் வேண்டும். பாடசாலையில் இடம்பெறும் போட்டிகள் யாவும் தனிப்போட்டியாக அமையாது குழுப்போட்டியாக அமையும் பட்சத்தில் தலைமைப் பண்புகள் பலரிடமும் வளர்வதற்கு களமாக அமையும். இங்கு மாணவரிடையே ஒற்றுமை, ஒருவருக்கொருவர் பொருள்களைப் பகிர்ந்துகொள்ளுதல், விளையாட்டில் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பிறரின் இயலாமைக்கு உதவுதல், இரக்க உணர்வு, முடிவெடுக்கும் திறன், குழுவின் வெற்றிக்குப் பிறரை ஊக்கப்படுத்தி இலக்கை அடைதல்,, புறநோக்கு சிந்தை, துடிதுடிப்புடன் செயற்படும் ஆற்றல், தகவல் பரிமாற்றத்திறன் போன்ற தலைமைத்துவத்துக்கான உயரிய பண்புகள் பலவும் வளர்த்தெடுக்கப்படும்.

### பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு

ஒரு குழந்தையின் தலைமைத்துவ வளர்ச்சியில் பெற்றோர், ஆசிரியர் என இரண்டு தரப்பினரும் பங்குபற்றல் சிறப்பானதாகும். பிள்ளை பற்றிய கருத்துக்களை பெற்றோர், ஆசிரியர் என இரு தரப்பினரும் பரிமாறிக் கொள்ளவேண்டும். மாதத்தின் ஒரு தடவையேனும் பிள்ளையின் முன்னேற்றம் பற்றி கலந்துரையாடி தேவையான ஏற்பாடுகளை இரு தரப்பினரும் மேற்கொள்ளுவது சிறப்பானது. முன்பள்ளி களில் பெற்றோர் ஆலோசனை சபை உருவாக்கப்பட்டு பிள்ளைகளின் முன்னேற்றத்தில் ஆசிரியர், பாடசாலை நிர்வாகத்தினர் மட்டுமன்றி பெற்றோரும் ஈடுபடும் நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

### புத்தாக்க சிந்தனையை தூண்டிவிடுதல்

இன்றைய போட்டி நிறைந்த உலகில் பிள்ளைகளிடம் புத்தாக்கத்திறனை தூண்டிவிடுதல் முக்கியமானது. புத்தாக்க சிந்தனையுடைய பிள்ளைகள் மற்றைய பிள்ளைகளைவிட மேன்மையாகத் திகழ்வதுடன் தனக்கோ, தன்னைச் சார்ந்தவர்க்கோ ஏதாவது பிரச்சினைவந்தாலும் அதனை வித்தியாசமான கோணத்தில் சிந்தித்து சிறந்த தீர்வை எட்டிவிடுவார்கள். வீடுகளிலும்சரி, முன்பள்ளிகளிலும் சரி பிள்ளையொன்று ஏதாவது தனது உடைமைக்குச் சேதம் விளைவிக்கும்போது பிள்ளையைத் தண்டித்துப்பெரிய பிரச்சினை உண்டு பண்ணாது பிள்ளையிடம் சேதமான உடைமையை எவ்வாறு சீர் செய்யலாம் என சொல்லித்தரலாம். இது மாதிரியான அணுகுமுறைதான் ஒரு பிரச்சினைக்கு எப்படி உடனடியாக சரியான்முறையில் எவ்வாறு தீர்வு காணமுடியும் எனும் எண்ணம் பிள்ளையின் மனதில் உதிக்கும். இப்படியான சூழலில் வளரும் பிள்ளைகளே மாற்று சிந்தனை உடையவர்களாகவும் திகழ்வர். அடக்கி வளர்க்கும் பிள்ளைகளிடம் சுயமாக முடிவெடுக்கும் திறன் காணப்படாது. இது மாதிரியான விடயங்களை சிறுவர் பாடசாலையிலும் சரி வீட்டிலும் சரி பின்பற்றும்போது பிள்ளையிடம் ஆளுமைமிக்க பண்புகள் பலவும் வெளிப்படும்.
முன்பிள்ளைப்பருவப் பிள்ளைகளின் பல்வேறு செயற்பாடுகளையும் முன்பள்ளிகளும் பெற்றோரும் இணைந்து சரியானமுறையில் வழிப்படுத்தும்போது நாட்டில் தலைமைப் பண்புகள் நிறைந்த எதிர்கால சந்ததியொன்று உருவாகும் என்பதில் ஐயமில்லை..

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சாண் ஏற முழம் சறுக்கும் அரசமைப்பு உருவாக்கம்

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான முயற்சிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தடத்துக்குத் திரும்பிவிட்டது என்று சொல்லப்பட்டாலும், அது எத்தனை நாளைக்கு என்று இந்தப் பத்தியில் உதயன் இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் கேள்வி எழுப்பியிருந்தான். அந்தச் சூடு ஆறுவதற்கு முன்னரே, ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைத்து, மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டுமானால், அரச தலைவர் பதவியின் நிறைவேற்று அதிகார முறை தொடரவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது அந்தக் கட்சி.

அரசமைப்பு வழிகாட்டல் குழு கடந்த 21ஆம் திகதி கொழும்பில் கூடியபோது மாகாணங்களுக்கு ஆகக்கூடுதலாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு சுதந்திரக் கட்சி இணங்குவதாகத் தெரிவித்து மூன்று நாள்கள் கடப்பதற்குள், மீண்டும் முருங்கை மரம் ஏறியிருக்கிறது அந்தக் கட்சி.

மாகாணங்களுக்கு ஆகக் கூடுதலான அதிகாரத்தை வழங்குவதையும், நிறைவேற்று அதிகார முறைமையையும் ஒரே நேர் கோட்டில் அந்தக் கட்சி நிறுத்துவதற்குத் தெளிவான உள்நோக்கம் உண்டு. நிறைவேற்று அதிகாரத்தைத் தக்கவைப்பதன் மூலம் மாகாணங்களின் மீதான கொழும்பின் ஆதிக்கத்தைத் தக்கவைப்பதே அந்த உள்நோக்கம்.

நிறைவேற்று அதிகார அரச தலைவர் ஒருவர் இருப்பாரானால், கொழும்புடன் முரண்டு பிடிக்கும் மாகாணங்களைக் கலைக்கவோ அல்லது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தை அனுப்பவோ முடியும் என்று கட்சி கருதுகின்றது. அதன் மூலம் ஒற்றையாட்சியின் பிடிமானத்தைத் தொடர்ந்தும் கொண்டிருக்க முடியும் என்றும் அது கருதுகின்றது. முரண்டு பிடிக்கக்கூடிய மாகாணங்களாக வடக்குஇ கிழக்குத்தான் இருக்கும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் சுதந்திரக் கட்சி தெரிவித்திருக்கும் மற்றொரு விடயமும் கண்டிப்பாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது.

“பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளமாட்டேன் என்று அரச தலைவர் தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தார். அதன்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் வகையிலான எந்தவொரு பரிசீலனையையும் மேற்கொள்ளாது” என்றும் கூறியிருக்கிறது.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பிப்போம் என்று புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில் சுதந்திரக் கட்சி இணக்கம் தெரிவித்த மூன்றாவது நாள், அந்தக் கட்சி இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறது.

இதனைத் தெரிவித்தவர் கட்சியின் மூன்றாம் நிலைத் தலைவரான விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரதானே என்று புறந்தள்ளிவிட முடியாது. கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் தலைவர்களும் இவ்வாறு புதிய அரசமைப்பு முயற்சிக்கு எதிராகவும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்திலும், கருத்துத் தெரிவிப்பதை கட்சித் தலைமை கண்டும் காணாமல் விட்டு, அதனை அனுமதிக்கிறது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கிய விடயம்.

இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துப் பார்க்கும்போது, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சியில் சுதந்திரக் கட்சி உண்மையான ஈடுபாட்டோடு, இதயசுத்தியோடு ஈடுபடுகிறது என்று சொல்ல முடியாது. இந்த நிலை தொடருமானால் நித்திய கண்டம் பூரண ஆயுள் என்கிற நிலையில்தான் புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் நகர முடியும். அது ஆரோக்கியமானதும் அல்ல. தீர்வு ஒன்று கிட்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதும் அல்ல.

சாண் ஏறினால் முழம் சறுக்கும் இந்த முயற்சியில் தற்போதைக்கு சுதந்திரக் கட்சி என்கிற தடையைத் தாண்டுவதே பெரும்பாடாக இருக்கும் நிலையில் இன்னும் பல தடைகளைத் தாண்டிப் பின்னர் பொதுமக்கள் வாக்கெடுப்பையும் தாண்டி இந்த முயற்சி வெற்றிபெறவேண்டியிருப்பதை நினைக்கையில் மலைப்பாகவே இருக்கிறது. இவற்றையெல்லாம் தாண்டி ஒரு தீர்வை எப்போது அடையப் போகிறோம்?

# கேப்பாப்பிலவு மக்களுக்கு அரசின் பதில் என்ன?

சேரலாதன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பு மக்களின் நில மீட்புக்கான போராட்டம் தொய்வின்றித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மழை, வெயில், பனி, குளிர் என இயற்கையின் இடையூறுகளைச் சகித்தவாறு இந்த மக்கள் நடத்தி வருகின்ற போராட்டம் பெரும்பான்மையின மக்களின் உணர்வுகளையும் தொடுவதற்கு ஆரம்பித்துவிட்டது.

பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடின்றிப் போராட்டக்களம் காணப்படுகின்றது. படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கும் எமது மண் எமக்கு வேண்டும் என்கின்றனர் அவர்கள்.

படைமுகாமுக்கு முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதற்கும், அதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் இலட்சிய வேட்கை வேண்டும். கொடிய போர் தந்த வலியும் வேதனையும் இவர்களைக் கிளர்ந்தெழச் செய்து விட்டன.

> படைமுகாமுக்கு முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதற்கு மனத்துணிவு மட்டும் இருந்தால் போதாது, அதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குரிய இலட்சிய வேட்கையும் வேண்டும்.

### பொது மக்களது காணிகள் படையினரால் அடாத்தாகவே கையகப்படுத்தப்பட்டன

போர் ஓய்ந்து எட்டு ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. ஆனால் இடம்பெயர்ந்த மக்களில் பலர் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் அகதி வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களுக்குச் சொந்தமான காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கின்றனர். இந்தக் காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான திட்டமெதுவும் படையினரிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

பெரும் இடையூறுகளுக்கு மத்தியில் போராட்டத்தில் ஈடுபடுகின்ற மக்களுக்கு இந்த விடயத்தில் அரசு என்ன செய்யப் போகின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. அந்த மக்கள் அரச நிலங்களைக் கோரிப் போராடவில்லை. தமக்குச் சொந்தமான நிலங்களையே கோரி நிற்கின்றனர். இதில் உள்ள நியாயத்தை அரசு மட்டுமல்ல மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினரும் உணர்ந்து கொள்ளவேண்டும். பௌத்த துறவிகள் கூடப் போராட்டக்களத்துக்கு வந்து அங்குள்ள நிலைமைகளை அறிந்து சென்றுள்ளனர். இவர்கள் உண்மை நிலவரங்களைத் தென்பகுதிக்குப்போய் தெளிவுபடுத்துவார்களாயின், அங்குள்ள மக்கள் தமிழர்களது போராட்டத்தின் நியாயத்தையும் அவசியத்தையும் புரிந்துகொள்வார்கள்.

தமது கண்களுக்கு முன்னே தாம் வாழ்ந்த புனித பூமி படையினரது பிடியில் சிக்கிச் சீரழிவதை எவர்தான் பொறுத்துக் கொள்வார்கள். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களைப் பலாத்காரமாக அங்கிருந்து அகற்றி விடுவதற்குப் படையினரும் அரசும் நினைத்தால், அதன் எதிர்விளைவுகள் மிகப் பாதகமானதாகவே அமைந்து விடும். எதிர்வரும் 27 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் ஆரம்பமாகி அடுத்த மாதம் 24ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கை தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளதால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகிப்பதற்கு அரசும் படையினரும் தயக்கம் காட்டவே செய்வார்கள். போராட்டக் களத்தில் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெற்று விட்டால் உலக நாடுகள் மத்தியில் இலங்கை தொடர்பாக ஏற்பட்டுள்ள நல்லெண்ணம் சிதைந்து விடும் என்பதும் அரசுக்கு நன்றாகவே தெரியும்.

### இறுதிப்போரில் இஸ்ரேல் இலங்கை அரசுக்கு பெருமளவில் உதவிகள் வழங்கியது

ஈழத் தமிழர்களும் பாலஸ்தீனியர்களும் ஒரேவகையான பிரச்சினைக்கே முகம் கொடுத்து வருகின்றனர். இஸ்ரேலிய அரசு, பாலஸ்தீன மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து யூதக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கான பலம் அரபு நாடுகளிடம் இல்லாதது மிகப் பெரிய குறைபாடாகக் காணப்படுகின்றது. அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் செல்லப்பிள்ளையான இஸ்ரேஸ், ஆயுத பலத்தின் உதவியுடன் அரபு நாடுகளை மிரட்டி வருகின்றது. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதிலும், இஸ்ரேலின் பங்கும் இருக்கவே செய்தது. ஆயுத விநியோகம், இராணுவ ஆலோசனை, படையினருக்கான பயிற்சிகள் ஆகியவை இஸ்ரேல் வழங்கிய உதவிகளில் அடக்கம். போர்க்காலத்தில் இலங்கைப் படைகளால் இஸ்ரேலின் ஆலோசனையின் பிரகாரமே மண் அணைகள் அமைக்கப்பட்டன. இவற்றுள் சில பொதுமக்களது இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இன்றும் காணப்படுகின்றன.

போரின்போது இலங்கைக்கு ஆதரவு வழங்கிய நாடுகள், போரின் பின்னர் தமது கடமை முடிந்ததென எண்ணி ஒதுங்கி விட்டன. போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக அந்த நாடுகள் கவனத்தில் கொள்ளவேயில்லை. இந்தியாவும் இதில் உள்ளடங்குகின்றது. இந்தியா இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டு விட்டதாகவே கருத வேண்டியுள்ளது. கேப்பாப்பிலவு மக்களின் அகிம்சைப் போராட்டம் தொடர்பாக இந்தியாவிடமிருந்து எந்தவித சமிக்ஞையும் வெளியாகவில்லை. ஆகவே இனியும் இந்தியா உதவுமெனக் காத்திருப்பதில் பயனெதுவும் கிடைக்கப் போவதில்லை. இன்று கேப்பாப்பிலவு மக்கள், போராட்டத்தில் ஈடுபடுவதற்கும் இந்த நாடுகளே முக்கிய காரணமாகும்.

நல்லாட்சி அரசு இனியும் தாமதிக்காது இந்த மக்களின் போராட்டத்துக்கு மதிப்பளித்து அவர்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து படையினரை விலக்கிக் கொள்ள வேண்டும். அப்பாவிகளான இந்த மக்களை நிர்க்கதியாக விட்டு விடுவது பௌத்த தர்மத்துக்கே விரோதமானது. தம்மிடமிருந்த சகலதையும் இழந்து நிற்கும் இந்த மக்கள் குந்தியிருப்பதற்குத் தமது சொந்த நிலத்தைத்தான் கேட்டு நிற்கிறார்கள்.

இவர்கள் நாட்டின் அரசமைப்புக்கு விரோதமாக வேறு எதையும் செய்யவில்லை. அரசிடம் நீதி கேட்டுத்தான் போராடுகிறார்கள் இதற்கு அரசு செவி சாய்க்குமா?

■ தி.ராஜ்



# கஜேந்திரகுமாரின் கனவு நிறைவேறுமா?

மட்டக்களப்பில் நடத்தி முடிக்கப்பட்ட 'எழுக தமிழ்' போராட்டத்தின் பின்னர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அடிக்கடி பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி வருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் எம். ஏ.சுமந்திரனுக்கு எதிரான குற்றச்சாட்டு, கூட்டமைப்பிலும், பேரவையிலும் இணைந்துள்ள தலைவர்கள் மீதான குற்றச் சாட்டு என்பவற்றைத் தொடர்ச்சியாக அவர் முன்வைத்து வருகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீதான அதிருப்தியாளர்களை ஒன்றிணைத்துத் தொடக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை, ஒரு சிவில் சமூக அமைப்பாகச் செயற்படும் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. கால ஓட்டத்தில், கூட்டமைப்புத் தலைமைக்கு அழுத்தம் கொடுக்கும் தரப்பாக இது மாற்றம் கண்டது. பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் 'எழுக தமிழ்' நிகழ்வுகள் நடத்தி முடிக்கப்பட்டன.

கூட்டமைப்புக்கு எதிராகத்தான் எழுக தமிழ் நிகழ்வுகள் நடத்தப்பட்டன என்பதையும், கூட்டமைப்புக்கு எதிராகத்தான் எழுக தமிழ் நிகழ்வுகளில் மக்கள் திரண்டார்கள் என்பதையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். பேரவையிலுள்ள முதலமைச்சராலோ அல்லது வேறு எவராலுமோ இனியும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியாது.

## இரட்டை வேடம் போடவேண்டாமென விமர்சிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு நேர் எதிரான கொள்கையுடன் தமிழ் மக்கள் பேரவை இருக்கின்றது. இந்த இரண்டில் ஏதாவது ஓரிடத்தில் மாத்திரமே இருக்க முடியும். இரண்டிலும் இருந்து இரட்டை வேடம் போடவேண்டாம் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அங்கம் வகித்துக்கொண்டு தமிழ் மக்கள் பேரவையிலும் குந்தியிருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச் சந்திரன், சித்தார்த்தன் ஆகியோரை நோக்கி கஜேந்திரகுமார் நேரடியாகச் சாடியிருக்கின்றார்.

கொள்கையில் எப்போதுமே உறுதியாக இருப்பவராகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் அவர், இப்போது முன்வைத்த கருத்தை (பேரவை அல்லது கூட்டமைப்பில்தான் அங்கம் வகித்தல்) பேரவை ஆரம்பிக்கப்பட்ட முதல்நாளில் முன்வைத்திருந்தால், அவரது தற்புகழ்ச்சி நியாயமானதுதான் என்று ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

கஜேந்திரகுமாரின் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் தமிழ் மக்கள் நலன்சார்ந்தவை அல்ல. அவரது கட்சி அரசியலுக்கானது தான் அவை. பேரவையை என்ன நோக்கத்திற்காக கஜேந்திரகுமார் தரப்பு உருவாக்கியதோ, அந்த நோக்கத்தை அடைவதற்கு, கூட்டமைப்பிலும் – பேரவையிலும் சமநேரத்தில் அங்கம் வகிக்கும் தரப்புக்கள் தடை போட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் இனிவருகின்ற தேர்தல்களிலும் கூட்டமைப்புக்கு எதிரே எந்தச் சவால்களும் இருக்காது. அவர்கள் மீண்டும் வெல்வார்கள்.

கஜேந்திரகுமாரது நினைப்பு, கனவு எல்லாம், பேரவையில் அங்கம் வகிக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுரேஸ் அணி, புளொட் என்பவை இணைந்து, ஓர் அரசியல் தரப்பாகத் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதுதான். அதன் ஊடாகத்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சிக்கு தேர்தல் அந்தஸ்துக் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்கின்றார்.

ஆனால் அவரது அத்தகைய எதிர்ப்பார்ப்புக்கு மாறாகவே கள யதார்த்தமும், கட்சிகளின் நிலைப்பாடும் இருக்கின்றன. கஜேந்திரகுமாரது கருத்துக்களைக் கணக்கில் எடுக்காத வகையிலேயே புளொட் தலைவர் சித்தார்த்தன், வடக்கு முதலமைச்சர் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரது பதில்கள் இருக்கின்றன. இதனால் கஜேந்திரகுமாரது கனவு வெறும் கனவாகத்தான் இருக்கப்போகிறது.

## கூட்டமைப்பு தலைமை மீதான குற்றச்சாட்டு

கஜேந்திரகுமார் தனது கட்சியை ஆரம்பித்ததிலிருந்தே இரா.சம்பந்தன் மீதும், சுமந்திரன் மீதும் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வருகின்றார். தாம் கொள்கைக்காகவே கூட்டமைப்பிலிருந்து விலகியதாக இப்போது கஜேந்திரகுமார் குறிப்பிடுகின்றார். கஜேந்திரகுமார் கூட்டமைப்பிலிருந்து எப்போது வெளியேறினார் ? ஏன் வெளியேறினார் என்பது மக்களுக்குத் தெரியாதல்ல. 2010 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு தொடர்பில் சர்ச்சை ஏற்படவே, அந்தக் கட்சியிலிருந்து வெளியேறியவர்தான் கஜேந்திரகுமார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தலைமை இப்போதும், புதிய அரசமைப்புத் தொடர்பில் பொதுவாக்கெடுப்பு அவசியம் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. கஜேந்திரகுமார் குற்றம்சுமத்துவதைப்போல சம்பந்தன் ஒற்றையாட்சித் தீர்வை ஏற்றுக் கொண்டிருந்தால், பொது வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் அதனை நிராகரிப்பார்கள். புதிய அரசமைப்பு தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சம்பந்தன் கூட்டாட்சியை வலியுறுத்தவில்லை என்று குறிப்பிடும் கஜேந்திரகுமார், அதே சம்பந்தன் தனது உரையில் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டதாகவும் சொல்லவில்லை என்பதை மறந்து விட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புக் கூறலிருந்து அரசைப் பாதுகாக்கின்றது என்று கஜேந்திரகுமார் மற்றொரு குற்றச்சாட்டையும் முன்வைத்திருக்கின்றார்.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான மக்கள் கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை வெளியிடப்பட்ட நிகழ்வில் உரையாற்றிய சம்பந்தன் 'இராணுவ வீரர்கள் பலர் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பயப்படுகின் றனர். இரண்டு பிரிவாக நடந்தவற்றைப் பிரிக்க முடியும். பாலியல் குற்றங்கள், சரணடைந்தவர்களைக் கொலை செய்த குற்றங்கள் ஒருபுறம். மற்றையது போரை நடத்திச் சென்றமை மற்றும் அதன்போதான குற்றங்கள். இதில் பாலியல் மற்றும் சரணடைந்தவர்களைக் கொலைசெய்த குற்றங்களுக்கு, அதனைப் புரிந்த இராணுவ வீரர்களே பொறுப்புக் கூற வேண்டும். போரை நடத்திச் சென்ற மற்றும் அதன் போது நடந்த குற்றங்களுக்கு, போருக்கான கட்டளைகளை வழங்கியவர்கள் தான் பொறுப்புக்கூற வேண்டும். களத்தில் நின்றவர்கள், கிடைத்த கட்டளைகளைத் தான் நிறைவேற்றினார்கள். கட்டளைகளை வழங்கியவர்களுக்கு எதிராகத் தான் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நாங்கள் நீதியைத்தான் கோருகின்றோம். பழிவாங்குவதற்கு முயற்சிக்கவில்லை' என்று தெரிவித்திருந்தார்.

ஆக, கஜேந்திரகுமார் குறிப்பிட்டது போன்று சம்பந்தன் போர்க்குற்றங்களிலிருந்து இராணுவத்தைக் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. அவர் தெளிவாகவே, எவ்வாறு போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். ■



## வாசகர் திருமுகம்

### பாழடைந்து போன ஊற்றங்கரை, சின்ன நீராவி வீதி எப்போது புனரமைக்கப்படும்?

முல்லைத்தீவு மாவட்டத்து தண்ண ஊற்றுக் கிராமத்திலுள்ள விநாயகப்பெருமான் ஆலயத்தின் சமீபமாக, கிழக்குப் புறத்தே எமது முஸ்லிம் நல்லுறவுகளின் வணக்க ஸ்தலமான பள்ளிவாசலுக்கு அண்மித்தாற் போலுள்ள சின்ன நீராவி வீதி, நீண்ட காலமாகப் புனரமைப்பின்றி பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்த வீதி மிகவும் பழைமை வாய்ந்த வீதியாகும். எமது முன்னோர்களான பல தமிழ் முஸ்லிம் பெரியார்கள், இந்தப் பகுதி சித்தர் விநாசித்தம்பிப் பெரியார், சாதி, மத, இன, பேதமின்றி இன்னருள் புரிந்து இறையருள் பெற்ற பக்கிருபாபா போன்றவர்கள் பயன்படுத்திய குறித்த வீதி, இன்று பாவனையின்றிப் பற்றைகள் வளர்ந்து காணப்படுகிறது. இந்த வீதியைப் புனரமைத்து மீண்டும் மக்கள் பயன்படுத்தத் தக்கவகையில் செப்பனிட்டுத்தர உரியவர்கள் உதவிட வேண்டும். தற்போது இந்த வீதியின் சீரற்ற நிலையால் இப்பகுதியில் பாம்புகளின் நடமாட்டம் மிகவும் மோசமாக உள்ளதாகப் பலர் தெரிவிக்கின்றனர். நீராவிப்பிட்டி முஸ்லிம் நல்உறவுகள், பெரிய பள்ளிவாசலுக்குத் தமது தொழுகைக்கு சென்று வருவதற்காகவே இந்த வீதி அமைக்கப்பட்டதெனக் கூறப்படுகிறது.

வற்றாப்பளை, பெரும்பீலி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது குறுகிய தூரப் பாதையாக பாவிப்பதும் இந்த வீதியையே. நீராவிப்பிட்டி மக்கள், பாடசாலை, சந்தை மற்றும் வர்த்தக நிலையம், வங்கிகளுக்குச் செல்ல வசதியாக அமைந்த வீதி இது.


எனவே இஸ்லாமிய முற்போக்கு இளைஞர் மன்றங்கள், கிராம அபிவிருத்தி மன்றங்கள், குறிப்பாக ஊற்றங்கரை விநாயகர் ஆலய நிர்வாக இளைஞர் முன்னணி என்பவை இந்த வீதியின் புனரமைப்புக் குறித்து உரிய அதிகாரத் தரப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்து இந்த வீதியைப் புனரமைப்பித்து இந்தப் பகுதி மக்கள் தமது போக்குவரத்துக்களைச் சிரமமின்றி மேற்கொள்ள வசதி செய்ய உற்சாகம் காட்டிச் செயற்பட வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

*வைரமுத்து நிர்ம ந்தன்,*
*ல்லூர்.*

**விசாரணை நீதிபதி:** பொலிஸ் அடிச்சு மண்டை உடைஞ்சது இருக்கட்டும்... நீ பொலிஸ் கம்பு பக்கத்தில மண்டைய கொண்டு போனியா...

**கைதி:** இதுக்கு நான் அங்கேயே செத்திருக் கலாம்...

# பாதுகாப்புக் கவசங்களின்றி நடிப்பில் கலக்கும் விஜய்



தமிழ் சினிமாவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாளும் புதுப்புது அறிமுகங்கள், தொழில்நுட்பங்கள் என அதன் அடுத்த நிலையை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறது. தற்போதைய நிலையில், ரசிகர்களைக் கவரும் வகையில் நடிகர்களும், நடிகைகளும் தங்களது பங்களிப்பை பலவிதங்களில் அளித்து வருகின்றனர்.

அந்த வகையில் நடிகர்கள் ஆபத்தான நிலைகளில் டூப் ஏதுமின்றி தாமாகவே நடித்து ரசிகர்களை கவர்கின்றனர். இவ்வாறு டூப் போடாமல் ஆபத்தான நிலைகளில் ஈடுபடுவது நடிகர் விஜய்க்கு ஒன்றும் புதிதல்ல. முன்னதாக அட்லி இயக்கத்தில் விஜய் நடித்த 'தெறி' படத்தில் 90 அடி பாலத்தில் இருந்து எந்தவித பாதுகாப்பு அம்சங்களுமின்றி தண்ணீரில் குதித்து ரசிகர்களைக் கவர்ந்தார்.

அந்த வகையில் விஜயின் 61ஆவது படத்தில் அவரது ரசிகர்களுக்கு ஒரு புதுமையான விருந்து காத்திருக்கிறது. விஜய் தற்போது அட்லி இயக்கத்தில் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு சென்னை கிழக்கு கடற்கரைசாலையில் உள்ள பிரபல ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. அதில் ஒரு முக்கியமான காட்சியில் விஜய் பாதுகாப்புக் கவசங்கள் ஏதுமின்றி ஆபத்தான நிலை ஒன்றில் நடித்து அசத்தியுள்ளார். இந்தக் காட்சி திரையில் வரும்போது விஜய் ரசிகர்களுக்கு பெரிய விருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக காஜல் அகர்வால், சமந்தா, நித்யா மேனன் நடிக்கின்றனர். முக்கிய கதாபாத்திரத்தில் சத்யராஜ், எஸ்.ஜே.சூர்யா, வடிவேலு, கோவை சரளா, சத்யன் உள்ளிட்ட பலரும் நடித்து வருகின்றனர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | | |
| | 8 | | | 7 | | | 3 | |
| 9 | | 6 | | | | 8 | | 5 |
| | | 8 | | | | | | 2 |
| | 4 | | | 1 | | | 7 | |
| 5 | | | | | | 9 | | |
| 6 | | 2 | | | | 4 | | 9 |
| | 3 | | | 8 | | | 1 | |
| | | | 4 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 6 |
| 8 | 7 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 1 |
| 2 | 5 | 6 | 1 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 |
| 1 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 9 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 | 7 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 1 | 4 | 8 | 9 | 5 |
| 6 | 8 | 1 | 5 | 9 | 3 | 7 | 4 | 2 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை, 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் புத்துணர்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறு விலகும். லாபம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்ப வளர்ச்சி கண்டு மகிழ்வர்.

**இடபம்:** எதிர்பார்ப்பு நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். வீடு, வாகனவகையில் செலவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மிதுனம்:** தகுதி மீறிய வாக்குறுதி யாருக்கும் தராதீர்கள். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் கருத்துவேறுபாடு கொள்வர்.

**கடகம்:** மனதில் நேர்மையும், உறுதியும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய பணிமாற்றம் உண்டாகும். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிங்கம்:** வாழ்வில் முன்னேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சாதனை இலக்கு பூர்த்தியாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**துலாம்:** நேர்மையுடன் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சீராக இருக்கும். உறவினர் வகையில் சுபச் செலவு ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிலும் திறமை மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர்.


**தனுசு:** குடும்ப பிரச்சினையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், உறவினர் வழியில் செலவு செய்ய நேரிடும்.

**மகரம்:** இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பெருகும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் நற்பெயர் காண்பர். வெளியூர் பயணத் திட்டத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**மீனம்:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். மனைவியின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

(இண்டெர்வியூ) உங்களுக்கு பிடிச்ச ஊர் எது...?
சுவிஸ்சர்லாந்து...
எங்கே speling சொல்லுங்க...



ஐயையோ...
அப்படின்னா "கோவா" சார்

திருமணமான பெண்கள் 500 கிராம் நகை வைத்துக் கொள்ள முடியும்: செய்தி



நம்ம கிட்டதான் நாலு பித்தளை குண்டான தவிர ஒன்னும் இல்லையே நீ ஏன் புள்ள கவலை படுகிறாய்...

மனைவி: ஏங்க முள்ளங்கி வெட்ட சொன்னா கரட்ட வெட்டிருக்கீங்க?



கணவன்: ஏய் கைய வெட்டிகிட்டேன்டி குருதி முள்ளங்கில பட்டு அப்பிடியாயிடுச்சு
மனைவி: அய்யய்யோ காய் வேஸ்டா?

# ஆண்களுக்கான மச்ச பலன்கள்



மோவாயின் இடதுபுறத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் மேடு, பள்ளமான வாழ்க்கையை அனுபவிப்பார்கள், கல்வியறிவும் குறைவாக இருக்கும்.
மோவாய்க்கு அடியில் மச்சம் இருந்தால் அவர்கள் இசையில் வல்லுநர்களாக இருப்பார்கள்.
வலது கன்னத்தில் மச்சம் இருந்தால் அவருக்கு பிறரை வசீகரிக்கும் சக்தி இருக்கும். உறவினர்கள் அவரை மிகவும் நேசிப்பார்கள். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் மகிழ்ச்சி யான வாழ்க்கை அமையும்.
இடப்புறக் கன்னத்தில் மச்சம் இருந்தால் அவர் வறுமை, உயர்வு என இரண்டு விதமான வாழ்க்கையை மாறி, மாறி அனுபவிப்பார்.
வலது காதின் மேல் நுனியில் மச்சம் இருந்தால் தண்ணீரில் கண்டம் இருக்கக்கூடும்.
இடது காதின் மேல் நுனியில் மச்சம் இருந்தால் பெண்கள் சம்பந்தமான வியங்களில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.இரண்டு காதுகளிலும் மச்சம் இருந்தால் அவர் அதிர்ஷ்டக்காரர். பேச்சுத்திறன், பிறரை வசீகரிக்கும் ஆற்றல், செல்வம் எல்லாம் அவரை வந்தடையும்.
தொண்டையில் மச்சம் இருந்தால் திருமணத்தின் மூலம் அவர்களுக்குச் சொத்து கிடைக்கும்.
கழுத்தின் வலதுபுறத்தில் மச்சம் இருந்தால் பங்காளிகளின் மூலம் பெயரும், புகழும், சொத்தும் கிடைக்கும். கழுத்தின் இடது புறத்தில் மச்சம் இருந்தால் அவர் மிதமான நலன்களுடன் வாழ்வார்.
இடது மார்பில் மச்சம் இருந்தால் ஆண் குழந்தைகள் அதிகம் பிறக்கும். பெண்களிடம் மிகுந்த பாசமாகப் பழகுவார்.
வலது மார்பில் மச்சம் இருந்தால் அவர் வாழ்க்கை நடுத்தரமாக இருக்கும். பெண் குழந்தைகள் அதிகம் பெற்றிடுவார்.
மார்பின் மேற் புறத்தில் மச்சம் இருந்தால் பிறர் விடயங்களில் தேவையில்லாமல் தலையிடும் குணத்துடன் இருப்பார். அமைதியான சுபாவமும் கடுமையான உழைப்பாளியாகவும் இருப்பார்.
வயிற்றின் மீது மச்சம் உள்ளவர்கள் பொதுவாக பெறாமைக் குணம் நிறைந்தவராக இருப்பார்கள்.
வயிற்றின் இடப்புறத்தில் மச்சமிருந்தால் நல்ல குணங்களும் உழைத்து வாழ விரும்பும் எண்ணமும் கொண்டவர்களாக இருப்பார்கள்.
வயிற்றின் கீழ்பக்கத்தில் மச்சம் இருந்தால் பலவீனமானவனாக இருப்பான். தொப்புள் மீது மச்சம் இருந்தால் அவன் வசதியான வாழ்க்கைக்கு சொந்தக்காரனாக இருப்பான்.
வலது தோளில் மச்சம் இருப்பவர் சின்ன சின்ன விடயங்களுக்குக் கூட மனதை அலட்டிக் கொள்வார்.
வலது உள்ளங்கையில் மச்சம் இருந்தால் நல்ல நண்பர்களின் நட்பைப் பெற்றிருப்பார்கள்.
இடது உள்ளங்கையில் மச்சம் உள்ளவர்கள் தேவையில்லாத பிரச்சினைகளை தம் பக்கம் இழுத்துக் கொண்டு கஷ்டப்படுவார்கள்.
முதுகில் மச்சம் இருப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகளாகவும், பக்திமான்களாகவும் இருப்பார்கள்.

(தொடரும்)

## நாளை

மாசி-14
ஞாயிற்றுக்கிழமை -26.02.2017
திதி: அமாவாசை மு.இ. 09.15
நட்சத்திரம்: அவிட்டம் மு.ப.07.50
சுபநேரம்:09.29-10.59 வரை
ராகுகாலம்:04.59-06.29 வரை
அமாவாசை விரதம்


# பல்லுக்கு கிளிப் அணிந்தவர்கள் கவனிக்க வேண்டியவை

பற்களுக்கு கிளிப்போட்ட பிறகு பல் மருத்துவரின் அறிவுரைகளைப் பின்பற்றாது போனால், பல் சீரமைப்பு முயற்சியும் தோல்வியடையலாம். கிளிப் போடும்போது பல்லுக்கும் கிளிப்புக்கும் இடையே சிறிய இடைவெளி ஏற்படும். இதற்கு உள்ளே உணவுத் துணுக்குகள் புகுந்து பக்ரீறியா உள்ளிட்ட கிருமிகள் வளர ஆரம்பிக்கும். இந்தத் துணுக்குகளை அகற்றாதபோது, பல்லின் எனாமல் பாதிக்கப்படலாம். ஈறு தொடர்பான பிரச்சினைகளும் ஏற்படலாம்.

மேலும், சொத்தை விழுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும். பல் உள்ளே தள்ளப்படுவதால், பல் வேரில் பிரச்சினை வரலாம். கிளிப் போட்ட பிறகு பல் மருத்துவரின் அறிவுரைகளைப் பின்பற்றாது போனால், பல் சீரமைப்பு முயற்சியும் தோல்வியடையலாம்.

கிளிப் அணிந்தவர்களுக்கான டிப்ஸ் :

- ஐஸ்கிறீம், ஜூஸ் போன்றவற்றை தாராளமாக சாப்பிடலாம்.
- ஒரு நாளைக்கு, குறைந்தது இரண்டு முறை பல் துலக்க வேண்டும்.
- ஒவ்வொரு முறை உணவு உண்டதும், பல் துலக்குவது நல்லது. முடியாத பட்சத்தில், தண்ணீரைக்கொண்டு வாய் கொப்பளிக்க வேண்டும்.
- பல் துலக்கியதும் கிளிப் சுத்தமாக இருக்கிறதா என்பதைக் கண்ணாடியில் பார்த்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- பல்லுக்கும் கிளிப்புக்கும் இடையே ஃப்ளாஸ் என்ற மெல்லிய மெழுகு நூலைப் பயன்படுத்தி, சுத்தம் செய்ய வேண்டும்.
- சுவிங்கம், வாயில் ஒட்டிக்கொள்ளக்கூடிய சொக்லெட், மிட்டாய், போன்ற உண வுப் பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.
- குறிப்பிட்ட கால இடைவெளியில் பல் மருத்துவரை அணுகி பல், ஈறு ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.






# வரலாற்றில் இன்றைய தினம்


1336 - ரியூடோனிக் படைவீரர்களால் சிறைப்பிடிக்கப்படுவதிலிருந்து தப்புவதற்காக லித்துவேனியா பிலனை கோட்டை பாதுகாப்புத் தரப்பினர் 4000 பேர் ஒன்றிணைந்து தற்கொலை செய்தனர்.
1856 - கிரிமிய போரின் பின்னர் பாரிசில் சமாதான மாநாடு தொடக்கி வைக்கப்பட்டது.
1919 - ஒருகலன் எரிபொருளுக்கு ஒரு சதம் வரி அறவிட்டதன் மூலம் அமெரிக்காவில் எரிபொருள் மீதான வரிவிதிப்பு ஒரிகன் மாநிலத்தில் தொடங்கப்பட்டது.
1928 - வோஷிங்டனில் சாள்ஸ் ஜென்கின்ஸ் ஆய்வு கூடம் சமஷ்டி வானொலி கொமிசனிலிருந்து முதல் தொலைக்காட்சி அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனமாகியது.
1932- 1932ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடத் தக்கவாறு இயற்கைத்துவத்துக்கு நச்சுரலைசேசனுக்கு அமைய அடொல்ப் ஹிட்லருக்கு ஜேர்மனிய பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.
1933 -விமானத்தாங்கிக் கப்பலாக USS றேஞ்சர் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் உருவாக்கப்பட்டது.
1954 - எகிப்தின் பிரதமரானார் காமல் அப்துல்நஸார்.
1968 - வியட்நாம் போர் தென்வியட்நாம் ஹாமை கிராமத்தில் 135 நிராயுதபாணியான பொதுமக்கள் தென்கொரிய படைகளால் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டனர்.
1980 - தேசி பவுட்ரஸ் தலைமையிலான இராணுவப் புரட்சியில் சுரினாம் அரசு வீழ்த்தப்பட்டது.
1986 - பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்கோஸ் மக்கள் சக்தி புரட்சியால் 20 ஆண்டுகால ஆட்சியைக்கைவிட்டுஓட,கொறேசோன்அக்கியூனோ பிலிப்பைன்சின் முதல் பெண் ஜனாதிபதியானார்.
1991 - வளைகுடா போர், ஈராக்கிய ஸ்கட் ஏவுகணை சவூதி அரேபியா டஹ்ரான் அமெரிக்க இராணுவப் படைத் தளத்தைத் தாக்கியதில் 28 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர்.
1991 - வோர்ஸோ ஒப்பந்தம் கலைக்கப்பட்டதாக நடைமுறைப்படுத்தப்பட்டது.
1992 - கொழும்பு நகரில் பரவலாக அங்கவீனர்கள் ஏல விற்பனை. முதலாளிமார் பிச்சைக்காரராக ஈடுபடுத்திப் பணம் சம்பாதிக்க எனத் தெரிவிப்பு.
1992- வவுனியாப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்; விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கனரக வாகனம் எரிந்து நாசம்.
1993 - 30 தமிழர்கள் படுகொலை 23 இராணுவத்தினர் மீது கொலைக் குற்றச்சாட்டு என சிறிலங்கா அரசு அறிவிப்பு.
1994 - ஏப்ரகாம் மசூதி படுகொலை; மேற்குக் கரை பற்றியாச் குகையில் தன்னியக்க துப்பாக்கியால் சுடப்பட்டதில் 29 பலஸ்தீனிய யாத்திரிகர்கள் உயிரிழந்ததுடன் 125 பேர் வரை காயமடைந்தனர்.
2014- நவியின் அறிக்கையில் உதயன் மீதான தாக்குதலும் சேர்ப்பு.
2015 - வடகிழக்கு ஆப்கானிஸ்தானில் மலைச்சரிவில் சிக்கி 310 பேர் உயிரிழந்தனர்.

# சிரியாவில் 60 பேர் சாவு

சிரியாவில் உள்ள அப்-பாப் நகரம் ஐ.எஸ் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலையில், அதற்கு மறுநாள் நகரின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சூசியன் கிராமத்தில், தாக்குதல்தாரி வெடிகுண்டு நிரப்பிய காரை வெடிக்க வைத்ததில் 60 பேர் கொல்லப்பட்டனர். 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று துருக்கி அரச ஊடகம் தெரிவித்தது. (வ)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி செல்வராஜா



3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி செல்வராஜா 23.02.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகடாசம்-இரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற செல்வ ராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகரத்தினம், பாலசிங்கம், பவனோஸ்வரி, கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவாஜினி, மீனலோஜினி, ராஜினி (ஜேர்மன்), குமுதினி (கனடா), நாக லோஜினி (பபி-முத்திரைச்சந்தி), சிறிதரன் (USA), முரளிதரன் (சவுதி), காலஞ்சென்ற பாஸ்கரன், பகீரதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மயூரன்(லண்டன்) உதயசங்கர்(கடனா) ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் குகமூர்த்தி, வாசுதேவன் (ஜேர்மன்), குனேந்திரன்(ஜேர்மன்), முத்தழகன் (கனடா), யோகேந்திரன் (அரசடி), விஜியா(USA), கோகிலவாணி (நீர்கொழும்பு), சிவரஞ்சினி, கஜி(ஜேர்மன்) ஆகியோரின் மாமியாரும் பிந்துகாசினி, பிருந்துஷா, சாருகன், கவின், பென், தேவா, மிம்மி, பிரியா, ராதா, தாரணி, வினோ, அனோஜன், நூர்ஜகான், சமிரா, ஆதவன்(லண்டன்), ஆத்திகன்(லண்டன்), வருணன்(கனடா), கிருஸ்ணி(கனடா), சித்தேஸ் (ஜேர்மன்), ஜனகன்(ஜேர்மன்), ஜனனி, ஜனனன், சூட்டி (யோகேஸ்வரன்), **கஜன் (நியூ விஷ்ணு மோட்டோர்ஸ், ஆனைப்பந்தி)**, மிரோஜன், லோஜித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவீன், யருன், இமயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.02.2017 திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**11/14 A.P.C. லேன்,**
**முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம்.**
**(பேரன்) கஜன்-077 474 7217**

தகவல்:
**நாகலோஜினி**
**(மகள்-பபி)**

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் அந்தோணிப்பிள்ளை

**(சைக்கிள்கடை ஜெயம்)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் அந்தோணிப்பிள்ளை 22.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் நேசமணி தம்பதியரின் பாசமிகுமகனும் கௌசலையின் அன்புக்கணவரும் அனிற்றோ, அன்ரனிற்றோ கமல்ரோ தனுஸ்ரோ, வெனிஸ்ரோ ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குணபாலராஜா மற்றும் கொலஸ்ரிக் அம்மா காலஞ்சென்ற எமல் இராசாத்தி மற்றும் லெஸ்லித்துரை, லூர்துநிலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சியாமிளா, சிறானி, சுகன்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கெவின் லோரன்சோ, அயன் சர்வின், டினிசன் அஜய் அனிஸ்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நயினாதீவு சல்லிபரவை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினாதீவு - 01**
**076 577 2851**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## எம்மை...

அழுத்தம் கொடுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நேற்றுச் சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம்அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அமெரிக்கத் தூதரகத்தில் நேற்றுக் காலை, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் எட்டுப் பேரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலின் போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு அழுத்திக் கூறியுள்ளார்.

'இந்தக் கூட்டுஅரசை அமைப்பதற்கு நாம் ஆதரவு வழங்கியிருந்தோம். மக்கள் இந்தக் கூட்டுஅரசு மீது அதிருப்தி அடைந்துள்ளார்கள். எதிர்பார்த்த விடயங்கள் நடக்கவில்லை. எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லவில்லை. எங்களுடைய எதிர்பார்ப்புக்களுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிய அளவே நடந்துள்ளது. புதியஅரசமைப்பு உருவாக்க முயற்சியும் மெதுவாகவே நகர்கின்றது. ஆனால் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றோம். அமெரிக்காவைப் போன்ற கூட்டாட்சி முறைமை அமையாவிடினும், நாங்களே எங்களுடைய அலுவல்களைப் பார்க்கும் விதத்தில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். சரியான முறையில் அதிகாரங்கள் பகிர்வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்' என்று இரா. சம்பந்தன் கோரியுள்ளார். இதன் பின்னர் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் சீனா - இந்தியாவின் தலையீடு - ஆர்வம் எந்தளவில் இருக்கின்றது என்று கேட்டுள்ளார். அதற்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், இந்தியா ஆரம்ப காலம் தொடக்கம் இந்த விவகாரத்தில் ஆர்வம் செலுத்தி வருகின்றது. சீனா ஆர்வம் செலுத்தவில்லை. அவர்கள் பொருளாதார முதலீடுகள் தொடர்பிலேயே கவனம் காண்பிக்கின்றார்கள் என்று குறிப் பிட்டுள்ளார். (த-5)

## கஜேந்திரகுமாரை...

சொற்களால் விமர்சித்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கூட்டமைப்பின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை பங்கேற்றுள்ளனர்.

15 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தவர், எப்படிச் சுமந்திரனைத் துரோகி என்று விமர்சிக்கலாம். கஜேந்திரகுமாரின் அப்பபரையும் தெரியும், அவரின் அப்பபரையும் எனக்குத் தெரியும். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றும் தெரியும் என்று தெரிவித்த இரா.சம்பந்தன், மிகக் கடுமையாகக் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் திட்டித் தீர்த்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வில் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் மாற்றுத் தலைமை வேண்டும் என்று தெரிவித்த கருத்துத் தொடர்பிலும், இரா.சம்பந்தன் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். சுரேஸ் பிரேமசந்திரனையும் விமர்சித்துள்ளார். அவர் அவ்வாறு தெரிவித்தது பிழை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், வடக்கில் நடைபெறும் காணி விடுவிப்புக்கான போராட்டம் தொடர்பிலேயே அதிகம் பேசப்பட்டதாக அறிய முடிகின்றது. (த-5)

## பிலக்குடியிருப்பு...

தேசிய ஒருமைப்பாட்டுக்கான முற்போக்குப் பேரவை, காத்தான்குடி அரசியல் களம் என்பன இதனை ஏற்பாடுசெய்திருந்தன.

காத்தான்குடி - 05 ஜும்மா பள்ளிவாசல் முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் காத்தான்குடி முஸ்லிம் இளைஞர்கள், தேசிய ஒருமைப்பாட்டுக்கான முற்போக்குப் பேரவை மற்றும் காத்தான்குடிஅரசியற் களம் என்பவற்றின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், மூவின மக்களின் ஒன்றிணைந்த குரலுக்கு அரசே செவிமடு, கேப்பாபிலவு மக்களின் காணிகளை விடு, நல்லாட்சி அரசில் எமது ஊர் எமக்கு வேண்டும், இராணுவமே வெளியேறு என்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். (த-ய)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை சிவயோகநாதன்

**(கராஜ் உரிமையாளர் - சித்தன்கேணி)**



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவயோகநாதன் (சித்தன்கேணி, சிவன் கோயிலடி கராஜ்) நேற்று (24.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னலச்சுமி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா (பொலிஸ் இன்ஸ்பெக்டர்) - மீனாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் அன்னலச்சுமியின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2017) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துணைவி, சங்கரத்தை.**

தகவல்:
**குடும்பத்தினர்**

### நாகேந்திரர் தவராசா



சரவணை கிழக்கு, வேலணை 9ஆம் வட்டாரம் கரப்பியனை பிறப்பிடமாகவும் சந்தனமாதா கோவில் லேன், சுண்டுக்குளியை வதிவிடமாகவும் தற்பொழுது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரர் தவராசா 22.02.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் (குஞ்சு) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் மனோன்மணி, அருமைநாயகம் காலஞ்சென்றவர்களான லெட்சுமி, தியாகராஜா மற்றும் நாகநாதபிள்ளை, காலஞ்சென்ற தாட்சாயணி, மற்றும் அம்பிகாவதி, பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் கமலாம்பிகை (கனடா), வாலாம்பிகை (சுவிஸ்), கருணாவதி(டென்மார்க்), இந்திராணி (லண்டன்), சரோஜினி (கொலண்ட்), தேவராசா(லண்டன்), காலஞ்சென்றவர்களான தவமணி, பசுபதிப்பிள்ளை மற்றும் தவமணிதேவி காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை,ஞானாம்பிகை மற்றும் மனோரஞ்சிதம், காலஞ்சென்றவர்களான பரமசுந்தரம், மீரா மற்றும் குகானந்தன், ஜீவரேகா (பிரான்ஸ்), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் சோதிநாதன்(சுவிஸ்), நாகராசா(டென்மார்க்), ஜெய்சந்திரகுமார் (லண்டன்) காலஞ்சென்ற செல்வேந்திரன் மற்றும் உமாமணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் அனோஜித்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மனைவி(லண்டன்)**
**0044 783 296 7230**
**அருமைநாயகம் 077 954 7685**
**(சகோதரர் -இலங்கை)**

**336, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி.**

# எம்.ஜி.ஆர்., அம்மா, தீபா பேரவை என்ற அமைப்பை ஆரம்பித்தார் தீபா



சென்னை, பெப். 25

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த தினமான நேற்று, எம்.ஜி. ஆர், அம்மா, தீபா பேரவை என்ற அமைப்பை ஆரம்பித்து வைத்தார் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா.

ஜெயலலிதாவின் பிறந்த தினமான நேற்று புதிய அறிவிப்புக்களை வெளியிடுவேன் என்று தீபா ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் தனிக் கட்சி தொடர்பான அறிவிப்பை அவர் நேற்று மாலை வெளியிட்டார்.

ஜெயலலிதாவின் அரசியல் வாரிசாக பணியைத் தொடர்வேன். ஆதரவளித்த தொண்டர்களுக்கும், மக்களுக்கும் நன்றி. இரட்டை இலையை மீட்போம். தற்போதையை அரசியல் சூழலில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டுள்ளது என்று தீபா தெரிவித்தார்.

அமைப்பின் கொடியும் அறிமுகம் செய்யப்பட்டது. அதில். கருப்பு, சிவப்பு நிறங்கள் மற்றும் நடுவில் வெள்ளை நிறத்தில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா படம் உள்ளது. (ம)



# 112 அடி ஆதியோகி சிவன் சிலை திறப்பு

கோவையில் 112 அடி உயரமுடைய சிவன் சிலையை நேற்றுத் திறந்து வைத்தார் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி.

மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு கோவையில் உள்ள ஈசா யோகா மையத்திலேயே இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டது. மோடி - எடப்பாடி பழனிச்சாமி இடையேயான சந்திப்பும் இடம் பெற்றது. தமிழக அரசியல் நிலவரங்கள் குழப்பமான நிலையில் உள்ளது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (வ-ம)

# தன்னைத் தானே குறை கூறுகிறது சீனா

பீஜிங், பெப். 25

இந்தியாவைச் சேர்ந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை புறக்கணித்து சீனா தவறு செய்துள்ளதாக, சீன அரசுக்கு சொந்தமான குளோபல் டைம்ஸ் நாளிதழ் கூறியுள்ளது.

இந்தியாவை சேர்ந்த திறமைசாலிகளைப் புறக்கணித்து சீனா தவறு செய்துள்ளது. ஆனால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பியாவைச் சேர்ந்த திறமைசாலிகளுக்கு சீனா அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. நமது நாட்டில் பணிபுரிய இந்தியாவை சேர்ந்த திறமைசாலிகளை கவர சீனா எதையும் செய்யவில்லை என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிட்ட வேலையாள்கள் தேவை.
மேசன், வெல்டர்
(ஓட்டு வேலையாள்கள்)
தொடர்பு - 077 2330 790, 076 7969 293

**விற்பனைக்கு**

புறோயிலர் சுத்தம் செய்தது 1 kg -400/= அத்துடன் ஊர்ச்சேவல், கல்பேட் பேரன்ஸ், முட்டை என்பன விற்பனைக்குண்டு.
தாசன் பாம் 158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.












## விடுவிக்கப்பட்டது...

இராணுவம் வெளியேறியதை அடுத்து, பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்றுத் தங்கள் காணிகளுக்குச் சென்று சொந்த வீடுகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். 2008ஆம் ஆண்டுக்கு, பின்னர் தமது வீடுகளுக்கு முதல் தடவையாகச் சந்தோசத்துடன் மக்கள் நேற்றுச் சென்றனர்.

காணிகளை விடுவித்ததை அடுத்துத் தாம் அமைத்த எல்லை வேலிகளையும் படையினர் அகற்றினர். விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் மக்கள் நேற்று உடனடியாகவே நுழைந்தனர்.

பரவிப்பாஞ்சான் இராணுவ முகாம் அமைந்துள்ள காணிகள் நாளைமறுதினம் திங்கள் கிழமை உத்தியோகபூர்வமாகப் படையினரால் கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் பிரதேச செயலகம் ஊடாக உரிய மக்களிடம் காணிகள் கையளிக்கப்படும் என்று கூறப்பட்டது.

'காணி விடுவிப்பு தொடர்பில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் போது அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோரால் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. எனினும் அவை எதுவும் நிறைவேறியிருக்கவில்லை. தற்போது நாங்கள் மேற்கொண்ட தொடர் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே இதனைக் கருதுகிறோம்' என்று பரவிப்பாஞ்சான் மக்கள் தெரிவித்தனர்.

*பின்னணி*

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாதிருந்த 9.5 ஏக்கர் காணிகளுக்குச் சொந்தமான 27 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து சுழற்சி முறையில் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதற்கு முன்னரும் இரு தடவைகள் தொடர் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளையடுத்துப் போராட்டங்களை மக்கள் கைவிட்டிருந்தனர்.

கடந்த திகதி திங்கட்கிழமை, பரவிப்பாஞ்சானில் தமது காணிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம் முன்பாகப் போராட்டத்தை ஆரம்பித்த மக்கள், பகல் - இரவாக அங்கே தங்கியிருந்து போராடி வந்தனர். அரசியல்வாதிகளும், சிவில் அமைப்பினரும், வர்த்தகர் சங்கத்தினரும் அந்த மக்களை நேரில் சென்று சந்தித்து தமது ஆதரவுகளை வழங்கினர்.

இந்த நிலையில், அறவழிப் போராட்டத்தின் 5ஆவது நாளான நேற்று பரவிப்பாஞ்சான் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டன.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் படையினர் வசமுள்ள தமது காணிகளை மீட்பதற்கான மக்களின் அறவழிப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கு-4-35)

## தகுதியான...

ஏற்கனவே போட்டியிடுவதற்குரிய விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். ஆனால் வெளிநாட்டில் உள்ள - துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிடத் தகுதியுள்ள பேராசிரியர் சாம்.தியாகலிங்கம் தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தும் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

'நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்ற துணைவேந்தருக்கான தேர்தலிலே வாக்குரிமை உடையவர்கள் தாங்களே. எந்தவொரு அரசியல் அமைப்பையும் சாராமல் எமது பல்கலைக்கழகத்தைப் பன்னாட்டு ரீதியில் தரம் உயர்த்துவதற்கான உரிய தராதரத்தை உடையவர்களையும், எமது பிரதேசத்துக்கு நன்மை ஏற்படுத்தக் கூடியவர்களையும் மதிப்பிட்டு அதற்கு ஏற்ற வகையில் பக்கச் சார்பில்லாமல் வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய துணைவேந்தர் போட்டிக்காக விண்ணப்பித்த பேராசிரியர் சாம் தியாகலிங்கம் என்பவருடைய விண்ணப்பத்தை மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து துணைவேந்தர் தெரிவு தொடர்பாக எமது பல்கலைக்கழகத்துக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தியைத் தவிர்த்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கையை முன்னெடுக்குமாறு கோரிக்கையாக முன்வைக்கின்றோம்' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களிடம் கோரியுள்ளது.

'பல அப்பாவி மக்கள் மீண்டும் பேராசிரியர் துரைராஜா போன்ற ஒருவர் துணைவேந்தராக வேண்டும் என்ற பெரிய கனவுடன் காத்திருப்பதை நாம் அறிவோம். இந்தக் கனவு மெய்ப்படவேண்டும்.

1990 களின் நடுப்பகுதியிலிருந்தே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியானது, அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளின் ஏவற்பொம்மையாகச் செயற்பட்டுத் தமது சுயநலன்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்புவோரின் விளையாட்டுக் குதிரையாக மாறிவிட்டது. இந்தப்போக்கு 2008 - 2014 காலப்பகுதியில் அதன் உச்சத்தைத் தொட்டது.

2014 துணைவேந்தர் தேர்தலில் துணைவேந்தருக்கான பேரவையின் மூன்று தெரிவுகளையும் அச்சொட்டாக நிர்ணயிப்பதற்காக 'டம்மி' வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டார். 'டம்மிக்கு' எத்தனை வாக்குகள் அளிக்கப்பட வேண்டும். துணைவேந்தராக வரவேண்டியவருக்கு எத்தனை வாக்குகள் அளிக்கப்பட வேண்டும். மூன்றாவதாக வருபவர் குறைவாக வாக்குகளைப் பெறத்தக்கதாக இவ்வாக்குகள் எப்படி பிரிக்கப்படவேண்டும் என்பதெல்லாம் பல்கலைக்கழகத்துக்கு வெளியே அரசியல் கட்சி அலுவலகமொன்றில் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட அரசியல் கட்சியின் கட்டளைகளை பெற்று வாக்களிப்பதற்காக மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் அந்தக் கட்சி அலுவலகம் சென்று கூட்டமொன்றில் கலந்து கொண்டனர். அந்தக் கால கட்டத்தில் பேரவையின் முன்னான கூட்டங்கள் கட்சி அலுவலகத்திலேயே நடைபெற்று வந்தன.

2015 இல் புதிய வெளிவாரி உறுப்பினர்களைக் கொண்ட பேரவை அமையபெற்றதெனினும், அநீதிகளுக்குக் காரணமானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்படவில்லை. அதனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தவறான ஆள்சேர்ப்பும், ஆள்சேர்ப்பு வினாக்களை முற்கூட்டியே வேண்டியவர்களுக்குத் தெரியபடுத்தும் போக்கும் இப்போதும் தொடர்கின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பழிவாங்கல்களும், பல்கலைக்கழக மாணவிகளுக்குப் பாதுகாப்பற்ற நிலையும் இன்னும் காணப்படுகின்றன.

இத்தகையதொரு பின்னணியிலேயே 2017 இல் புதிய துணைவேந்தர் தேர்வு இடம்பெறுகிறது. வாக்குகளைப் பிரயோகிக்கும் உரித்துடைய பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய மூன்று வாக்குகளைப் பிரயோகிப்பது குறித்தும், அவற்றில் ஒன்றையோ இரண்டையோ பிரயோகிக்காமல் தவிர்ப்பது குறித்தும் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

விண்ணப்பம் தாமதமாகக் கிடைத்தது எனக் காரணம் கூறி தகுதி மிகக் கொண்டவர்களின் விண்ணப்பத்தை நிராகரிப்பதை நாம் விரும்பவில்லை. இந்த விடயத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடனும், விஞ்ஞான ஆசிரியர் சங்கத்துடனும் நாமும் உடன்படுகிறோம். துணைவேந்தர் தெரிவு என்பது, சாதாரண ஆள்சேர்ப்பு அல்ல. நாம் சிறந்த துணைவேந்தர் வேட்பாளரைத் தேடிச் செல்லவேண்டுமென்றே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கைகள் வலியுறுத்துகின்றன. பேரவையால் நியமிக்கப்பட்ட 'தேடற்குழு' தேடல் தொடர்பாக ஆற்றிய பணிகள் யாதெனவும் அறிய விரும்புகிறோம்' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாளைய துணைவேந்தர் தேர்தலுக்குப் பேராசிரியர்களான சாம்.தியாகலிங்கம், விக்னேஸ்வரன், சிறிசற்குணராசா, ரவிராஜ், மிகுந்தன், வேல்நம்பி ஆகியோர் விண்ணப்பித்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(கு-4)

## கொழும்பு...

றப்பட்டுள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த விமல்ராஜ் உடனடியாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் வியாழக்கிழமை மாலை கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(கு-ய-46)

## தளராது...

துக்குச் சாதகமான முடிவு எதுவும் இதுவரை கிட்டவில்லை.

பிலக்குடியிருப்புப் பொதுமக்கள் முன்னெடுத்து வரும் தொடர் அறவழிப் போராட்டத்துக்கு நாட்டின் பல இடங்களில் இருந்தும் ஆதரவுகள் பெருகிவருகின்றன. நேற்று மட்டக்களப்பில் இருந்து பல பொதுமக்கள் நேரில் வந்து தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை மாணவர்களும் நேற்றுப் பிலக்குடியிருப்பு போராடம் முன்னெடுக்கப்பட்டுவரும் இடத்துக்குச் சென்று ஆதரவைத் தெரிவித்தனர்.

(கு-7)

## 5 சிறப்புப்...

குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பல மட்டங்களில் இருந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

(கு-ய-46)

## ஐங்கரநேசனிடம்...

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. ஓய்வு பெற்ற இரு நீதிபதிகள் மற்றும் முன்னாள் மாவட்டச் செயலர் ஒருவர் இந்த விசாரணைக் குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

அமைச்சர்கள் மீதான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட பின்னர், சாட்சியப் பதிவுகள் ஆரம்பமாகியிருந்தன. கடந்த மாதம் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்றுமுன்தினமும், நேற்றும் மேலதிக விசாரணைகள் நடைபெற்றன.

விவசாய அமைச்சருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மருத்துவ கலாநிதி ஒருவர் நேற்று முன்தினம் விசாரணைக் குழு முன்பாக முன்னிலையாகிச் சாட்சியமளித்துள்ளார்.

விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், அவர் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும் விசாரணைக் குழு முன்பாக நேற்று அழைக்கப்பட்டனர். இருவரும் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாகத் தமது கருத்துக்களை விசாரணைக் குழு முன்பாகப் பதிவு செய்தனர்.

உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் விவசாய அமைச்சருக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் சாட்சியமளிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் நேற்று விசாரணைக் குழுவினால் அழைக்கப்பட்டிருந்தார். அவரும் சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் உள்ள ஆவணங்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார் எனத் தெரியவருகின்றது.

(கு-5-101)

## பரவிப்பாஞ்சான்...

நம்பிக்கை அளித்துள்ளது. இதேபோன்று எங்களுடைய காணிகளும் கிடைக்கும் வரை நாம் முன்னெடுத்த அறவழிப் போராட்டத்தை ஒருபோதும் கைவிடமாட்டோம் எனப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் 49 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியில் முகாம் அமைத்துள்ள இராணுவம் வெளியேறவேண்டும் என்பதை வலியுறுத்தி 22 நாள்களாக மக்கள் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமது அறவழிப் போராட்டத்துக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் 48 மணி நேரச் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கு-4)

## விடு...

பொதுமக்கள் போராட்டத்தை நிறைவு செய்து தமது காணிகளுக்குச் சென்று பார்வையிட்டு வீடுகளைத்துப்புரவு செய்தனர். இதன்போதே, "காணிகளை விடு விடு என்று கத்திப் போராடினீர்கள். காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. உடனடியாகவே போய் கொட்டில்கள் போட்டு இருங்கள். தாமதிக்க வேண்டியதில்லைதானே" என்று ராணுவத்தினர் கூறியதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

(கு-4)

## அரசியல்...

வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும், பேரவையை அரசியல் நோக்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் பயன்படுத்தி வருகின்றமையினால், பேரவையின் சிவில் சமூக உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். தமிழ் மக்கள் பேரவையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. மட்டக்களப்பில் நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வின் பின்னர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், தமிழ் மக்கள் பேரவையை அரசியலுடன் தொடர்புபடுத்திப் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கின்ற சிவில் சமூகத்தின் முக்கிய தலைவர்கள் சிலர், கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து, பேரவையை அரசியலுடன் தொடர்புபடுத்திப் பேச வேண்டாம் என்று கடந்த வாரம் தெரிவித்துள்ளனர். அத்துடன், பேரவை ஒருபோதும் எந்தவொரு அரசியல் கட்சியையும் ஆதரிக்காது என்றும் குறிப்பிட்டனர்.

பேரவையின் உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்த பின்னரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவ்வாறான பேச்சுக்களை நிறுத்தவில்லை என்று, பேரவையின் சிவில் சமூக உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் அடுத்த மாதம் முதல் வாரத்தின் இறுதி நாளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பேரவையின் கூட்டத்தில் ஆராய்வதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். இந்த விடயத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவுள்ளதாக அறிய முடிகின்றது.

(கு-5)

## காது கேளாத...

சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வழங்க முன்வராவிட்டால், 'காது கேட்காத மைத்திரி', 'கண் தெரியாத ரணில்' என்றும் கேலிச் சித்திரங்கள் வரையுமாறும், தேசிய மொழி கள் ஒருமைப்பாட்டு அமைச்சர் மனோகணேசன் தனது முகநூலில் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றில் வெளியான கேலிச் சித்திரம் தொடர்பாக தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் பதிவிட்டுள்ளமை வருமாறு:

நாட்டின் நிதிச் சிக்கல் காரணமாக எனக்குப் போதுமான நிதி கிடைக்கவில்லை. நிதிப் பற்றாக்குறை காரணமாக நல்ல பல திட்டங்கள் காத்திருக்கின்றன.

எனக்குப் போதிய நிதி வழங்கும்படி அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் கோரித் தலையங்கம் எழுதுமாறு வேண்டுகிறேன். அவர்கள் முன்வராவிட்டால், 'காது கேட்காத' மைத்திரிபால என்றும், 'கண் தெரியாத' ரணில் என்றும் கேலிச்சித்திரங்கள் வெளியிடுமாறு அன்புடன் கோருகிறேன்.

மொழிக்கொள்கை நடைமுறை தொடர்பில், கனடிய அரசின் உதவித்தொகை இன்னமும் வரவில்லை. அமெரிக்க, ஐரோப்பிய, இந்திய வாக்குறுதிகள் என்று எனது அமைச்சுக்கு இன்னமும் ஒரு ரூபா கூடக் கிடைக்கவில்லை. என்னிடம் இருப்பது காற்றும், தண்ணீரும் தான்.

கிடைத்தான், ஒரு தமிழ் அமைச்சன் என்று என்னை அடிப்பதுடன் (அதை இருகரங் கூப்பி வரவேற்கிறேன்!) இந்த நடைமுறை சிக்கல்களையும் தீர்க்க உதவுமாறு கோருகிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

(கு-5)

## எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களை எழுதுவோம்

1. சி / ர் / ரி / ய / ஆ = ------------------
2. லை / ட / பா / சா = ------------------
3. ம் / த் / பு / க / த = ------------------
4. ர் / மா / வ / ண = ------------------
5. தி / ப / அ / ர் = ------------------
6. ல் / நூ / நி / ய / ம் / லை = ------------------
7. ளை / டு / வி / யா / ட் = ------------------

## நமக்கு தெரிந்திருக்க வேண்டியவை

1. வணங்கத் தக்கவர்கள் – தாயும் தந்தையும்
2. வந்தால் போகாதது – புகழும் பழியும்
3. போனால் வராதது – மானமும் உயிரும்
4. தானாக வருவது – இளமையும், முதுமையும்
5. வருவதும் போவதும் – இன்பமும் துன்பமும்
6. பிரிக்க முடியாதது – பந்தமும் பாசமும்
7. அடக்க முடியாதது – பசியும் தாகமும்
8. அழிவைத் தருவது – கோபமும் பொறாமையும்
9. நம்முடன் வருவது – பாவமும் புண்ணியமும்
10. எல்லோருக்கும் சமமானது – பிறப்பும் இறப்பும்
11. செய்ய வேண்டியது – பிறருக்கு உதவி
12. செய்யக் கூடாதது – பிறருக்கு கேடு
13. ஆபத்தைத் தருவது – அதிக பேச்சு
14. மிகவும் கொடிய நோய் – பேராசை
15. உயர்வுக்கு வழி – உழைப்பு
16. ஒற்றுமைக்கு வழி – மனம் விட்டுப் பேசுதல்
17. வெற்றிக்கு வழி – தொடர்ச்சியான முயற்சி
18. அடக்க வேண்டியது – சினமும், ஆசையும்
19. புகழைத் தருவது – ஒழுக்கமும் கல்வியும்
20. மிக மிக நல்ல நாள் – இன்று



## பழமொழிகள்

பழமொழிகள் என்பவை நம் முன்னோர் தமது வாழ்க்கை அனுபவங்களூடாக கண்டறிந்த யதார்த்தமான உண்மைகளை, சிந்திக்கத் தூண்டுகின்ற வகையில் குறுகிய வாக்கிய அமைப்பில் தந்துள்ள நன்மொழிகளாகும். பழமொழிகள் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடிய பொதுவான இயல்புகள், பண்புகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள், வாழும் நெறிகள் என்பனவற்றை எடுத்துக் கூறுகின்றன.

**சிறுதுளி பெரு வெள்ளம் :-** *இந்தப் பழமொழியின் நேர்பொருள் பல்லாயிரக் கணக்கான மழைத் துளிகள் சேர்ந்தே பெருவெள்ளம் ஆகிறது என்பதாகும். ஆனால் இது கூறும் மெய்ப்பொருளாவது சிறு சிறு முயற்சிகளே பெரிய சாதனைகளுக்கு காரணங்களாகின்றன என்பதோடு, சிறு சிறு பணத்தை தினமும் சேமித்துக் கொண்டு வந்தால் ஒரு நாள் அவை பெருஞ்செல்வமாக மாறும் என்பதுவுமாகும்.*

**உப்பிட்ட வரை உள்ளவும் நினை :-** *ஒருவர் உப்பளவான சிறிய உதவி செய்த போதிலும், அந்த உதவியை அற்பமானது என கருதி மறந்து விடலாகாது. ஆயுள் உள்ளளவும் மறந்து விடாது அவருக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். முடிந்தால் உதவி செய்தவருக்கு நன்றியாக நாம் பிரதி உதவி செய்யவும் வேண்டும்.*

**மின்னுவதெல்லாம் பொன் அல்ல :-** *பகட்டைக் கண்டு ஏமாறக் கூடாது என்பதே இப்பழமொழி கூறும் விடயமாகும். மின்னுவது பொன்னாகவும் இருக்கலாம். அல்லாமலும் இருக்கலாம். ஆனால் உடனே பொன்தான் என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. அதாவது தோற்றத்தை மட்டும் வைத்துக் கொண்டு முடிவுகள் எடுக்கக் கூடாது. தோற்றத்தின் பின்னால் உள்ள குணங்களையும் வைத்துத்தான். முடிவு செய்ய வேண்டும்.*
*அவசரப்பட்டு எந்த முடிவுகளையும் எடுக்காது ஆற அமர சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதையே இந்தப் பழமொழி தெளிவுறுத்துகிறது.*

**தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் :-** *குழந்தைகளாக இருக்கும்போது நாம் கற்றுக் கொள்ளும் பழக்க வழக்கங்களே இறுதி நாள் வரைக்கும் தொடரும். பெற்றோர் குழந்தை வளர்ப்பில் மிகுந்த அக்கறையுடன் இருந்து சிறுவயதிலேயே அவர்களுக்கு நற்பழக்கங்களைப் பழக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை இப் பழமொழி குறித்து நிற்கிறது.*

**இளமையில் கல்வி சிலையில் எழுத்து :-** *இந்தப்பழமொழியால் இளமைக் காலத்தின் பெறுமதி, சிறப்பு கூறப்படுகிறது. இளமையான வயதில் எந்த விடயமும் மிக இலகுவாக மனதில் பதியும். வயது ஆன பின்பு எதையும் மனதில் பதிப்பது சிரமம். உடனேயே மறதி ஏற்பட்டுவிடும். ஆதலால் தான் கல்வியை இளமையிற் கல் என்பார்கள். அப்படி கற்றால் கல்லிலே செதுக்கப்பட்ட எழுத்துக்களாக அவை என்றும் மனதில் நிலைத்திருக்கும். வயது சென்ற பின்பு கற்கும் கல்வி நீரில் எழுதியவை போன்று உடனேயே காணாமற் போய்விடும்.*



## குரங்கும் முதலையும்

ஓர் ஆற்றின் அருகே ஒரு பெரிய நாவல் மரம் நின்றது. அதில் நாவற்பழக் காலத்தில் இனிமையான பழங்கள் எப்பொழுதும் நிறைந்திருக்கும். அம்மரத்தில் ஒரு குரங்கு வாழ்ந்து வந்தது. அது தினமும் மரத்தில் இருந்த இனிய கனிகளை உண்டு மகிழ்ந்தது. குரங்கின் இச்செயலை அந்த ஆற்றில் தன் துணையுடன் வாழ்ந்து வந்த பெரிய முதலை ஒன்று கவனித்து வந்தது.

முதலை ஒரு நாள் ஆற்றங்கரைக்கு வந்து குரங்கிடம் பேச்சுக் கொடுத்தது. "குரங்கே எனக்கு நாவற் பழங்களை உண்ண மிகவும் ஆசையாக உள்ளது. எனக்கும் பழங்கள் தருவாயா?" என்று கேட்டது. குரங்கு "அன்பரே! இதுவரை நான் மட்டுமே தனித்து இப்பழங்களை உண்டு வந்தேன். இன்றிலிருந்து நீர் எனது விருந்தாளி. அமுதத்துக் கொப்பான இந்தப் பழங்களை உமக்கும் தருகிறேன் சாப்பிடும்" என்று கூறி நாவல் மர உச்சியில் இருந்து பழக்கொப்புகளை வேகமாக அசைத்து விட பழங்கள் பொலு, பொலுவென கீழே விழுந்தன. முதலை நீரிலிருந்து வெளியேறி வந்து பழங்களை உண்டது. நாவற்பழம் விடயமாக நடந்தவற்றை முதலை தனது துணைவிக்கும் தெரிவித்தது. இரண்டும் குரங்கின் ஈரலை உண்ண ஆசைப்பட்டன. இப்படி இரண்டொரு நாள்கள் கடந்தன. ஒரு நாள் வழமை போல குரங்கு நாவற் பழங்களை முதலைக்குக் கொடுத்தது. முதலை "குரங்கே நீ நல்ல பழங்களை மரத்தில் இருந்த படி உண்ணுகிறாய். உன் விருந்தாளி ஆகிய நான் மட்டும் மண்ணில் விழுந்து அழுக்கடைந்த பழங்களை உண்ணுகிறேனே இது நியாயமா?" என்றது.

"சரி... சரி கொஞ்சம் பொறு பழங்களைப் பறித்து என் கைகளில் கொண்டு வந்தே கொடுக்கிறேன். ஆனால் கையில் அதிகம் பழங்களைக் கொண்டு வரமுடியாது. பரவாயில்லை இரண்டு மூன்று தடவைகளில் பறித்துக் கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறி கீழே இறங்கி முதலையிடம் பழங்களைக் கொடுத்தது குரங்கு.

இந்தச் சமயத்தை எதிர் பார்த்திருந்த முதலை சட்டெனப் பாய்ந்து குரங்கைப் பிடித்து தனது முதுகில் ஏற்றிக் கொண்டு நீருக்குள் ஓடியது. குரங்கு தான் ஏமாந்து விட்டதை உணர்ந்த போது" முதலை "குரங்காரே, உமது ஈரல் மிகவும் சுவையானதாமே! நானும் என் மனைவியும் உன்னுடைய ஈரலை மட்டும் உண்டு விட்டு உன்னை விட்டு விடுகிறோம்" என்றது. குரங்கின் மூளை துரிதமாக வேலை செய்தது. "முதலையாரே! இதனை நீங்கள் கரையிலேயே சொல்லியிருக்கலாமே! என்னுடைய ஈரலைக் கழற்றி நாவல் மரத்தில் அல்லவா காய வைத்து விட்டு வந்தேன். இரவு பொழிந்த மழையில் அது மிகவும் நனைந்து விட்டது. என்னைக் கரைக்கு கொண்டு போவீரானால் நான் ஈரலை எடுத்து வந்து விடுவேன். உமது மனைவியாரையும் நான் ஒரு முறை சந்தித்ததாகவும் இருக்கட்டும்" என்றது. முதலை உடனே கரைக்கு குரங்கைக் கொண்டு போய் சேர்க்க, குரங்கு தாவி மரத்தில் ஏறிக் கொண்டது. "துஷ்டனே மூடனே! ஈரலை யாரும் தனியே கழற்றி வைக்க முடியுமா? நன்றாய் ஏமாந்தியா போ... போ..." என கூறி சிரித்தது. முதலை ஏமாற்றத்துடன் திரும்பியது.

**நீ அடுத்தவனை ஏமாற்றினால் நீயும் ஒருநாள் ஏமாந்து நிற்பாய்.
ஏமாறாதே! ஏமாற்றாதே!**



## எங்கள் வீட்டுத் தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டம்
எங்கும் பசுமையாக
மங்கா அழகு காட்டும்
மாண்பு மிக்க தோட்டம்

மண்ணை நன்கு புரட்டி
இயற்கைப் பசளை இட்டு
தண்ணீர் தினமும் பாய்ச்ச
தானாய் வளரும் செடிகள்

பாத்தி நிறைய மிளகாய்
பக்கமெங்கும் வெண்டி
கத்தரிக்காயுடன் பாகல்
காய்த்துத் தொங்கும் தோட்டம்

பசுமையான கீரைகள்
பாம்பு நீளம் புடலங்காய்
பயற்றங்காயும் தக்காளி
பார்த்து தினமும் நாம் பறிப்போம்

## கொன்றை வேந்தன்

*(நேற்று வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

7. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
*தூர தேசங்களுக்கு கடல் கடந்து சென்றாயினும் உழைத்து சம்பாதிக்க வேண்டும். நாம் நலமாகவாழ பணம் முக்கியமானது. "பணமில்லாருக்கு இவ்வுலகம் இல்லை" என்பார்கள். ஆகவே பணத்தைச் சம்பாதிக்க தளராத ஊக்கத்துடன் நாம் உழைக்க வேண்டும். உள்ளூரில் முடியா விட்டாலும் வெளியூர் சென்றாகிலும் நேர்மையாக உழைத்து பொருள் தேட வேண்டும். தொழில் இல்லையே என்று சோம்பியிருக்கக் கூடாது. (திரை – அலை திரவியம் – செல்வம்)*

8. மருந்தேயாயினும் விருந்தோடு உண்
*உண்ணப்படுவது கிடைத்தற்கரிய தேவா அமிர்தமாயினும் மற்றவர்களோடு (விருந்தாளிகளாயினும்) பகிர்ந்து கூடி உண்ண வேண்டும். தனித்து உண்பதை விட உற்றார் உறவினர்களுடன் சேர்ந்து உண்ணும் போது மகிழ்ச்சி அதிகம். எத்தனை அரிய உணவானாலும் பகிர்ந்து உண்பதிலே உள்ள சுகம் மன நிறைவு, மகிழ்ச்சி வேறு எதிலும் கிடையாது.*

9. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
*முற்பகல் காலை வேளை. பிற்பகல் மாலை வேளை. காலையிலே நாம் ஒருவருக்கு ஒரு தீங்கு செய்தால் மாலைக்குள் அதன் விளைவை அறிவோம். ஒருவனுக்கு நாம் ஒரு கெடுதலைச் செய்தால் அக்கெடுதலுக்கான தீய விளைவு உடனேயே சுவரில் எறிந்த பந்துபோல எம்மிடமே திரும்ப வந்து சேரும். நன்மை செய்யினும் அதன் படியேதான்.*

10. மூத்தோர் சொன்ன வார்த்தை அமுதம்
*கல்வியறிவிலே முதிர்ந்தவர்கள் கூறிய நல்வழிகள் கிடைத்தற்கரிய அமிர்தம் போன்று பெறுமதியானவை. இளைஞர்கள் தமது மனம் போன போக்கில் நடவாது அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த பெரியோர்களின் வழிகாட்டல் படி நடத்தல் நன்று.*

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 25

*சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்*

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம் பன்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.



*மன்னார் பி.செ. வலைப்பந்தாட்டம்*

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைபந்தாட்டத் தொடர் மன்னார் உள்ளரங்கில் இன்று இடம்பெறவுள்ளது.

*மன்னார் பி.செ. கரப்பந்தாட்டம்*

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் மன்னார் உள்ளரங்கில் இன்று இடம்பெறவுள்ளது.

*மன்னார் பி.செ. கால்பந்தாட்டம்*

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

*அண்ணா வி.க. கால்பந்தாட்டம்*

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சங்கனை பிரதேச செயலக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஏ.எல். அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதவுள்ளது. (ம-23)



# விக்ரோறியா அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 25

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஏக ஆதிக்கம் செலுத்திய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 25:15, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422)



# வென்றது கே.கே.எஸ்.

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கே.கே.எஸ். அணி அபார வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து பட்டபிளை அணி மோதியது. இதில் கே.கே.எஸ். அணி 48:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# அப்ரிடிக்கு ஜெயசூர்ய வாழ்த்து

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து அப்ரிடி விடைபெற்றுள்ள நிலையில், அவருக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார் இலங்கை அணியின் தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூர்ய.

கடந்த 20ஆம் திகதி அப்ரிடி தனது ஓய்வு முடிவை அறிவித்தார். கிரிக்கெட்டின் பிரபலங்கள் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வரும் நிலையில் சனத் தனது ருவிற்றர் பக்கத்தில், உங்கள் பதிவுகளுக்கு நன்றி அப்ரிடி. நீங்கள் கிரிக்கெட்டில் பல மாற்றங்களைச் செய்துள்ளீர்கள் என்று பதிவிட்டார். (ம)

# கரவெட்டி பி.செயலக தடகள இறுதி நாளை

யாழ்ப்பாணம், பெப். 25

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரின் இறுதி நாள் நிகழ்வு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் சு.முரளிதரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி.புஸ் பலிங்கம், கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் கிருஸ்ணகுமார், வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வக்குமரன், யாழ். மாவட்டச் செயலக விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-422)

# ஒலுமடு அ.த.க. பாடசாலை கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 25

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில்லான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஒலுமடு அ.த.க. பாடசாலை அணி சம்பியனானது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஒலுமடு அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி மோதியது. முதலாவது செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஒலுமடு அ.த.க. பாடசாலை அணி தனதாக்கியது. 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற்றை கைப்பற்றியது சின்னடம்பன் பாரதி வித்தியாலய அணி. கிண்ணத்தைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை 28:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஒலுமடு அ.த.க. பாடசாலை அணி. முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி தனதாக்கியது. (ம-422)

# வடக்கின் பெண்கள் கிரிக்கெட் அணி

யாழ்ப்பாணம், பெப். 25

வடமாகாண மாவட்டங்களின் 23 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரொன்று அண்மையில் நடைபெற்றது. இந்தத் தொடரில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய வீராங்கனைகளை வைத்து வடமாகாண பெண்கள் கிரிக்கெட் அணி கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்டது.

வடமாகாண பெண்கள் கிரிக்கெட் அணி விவரம் – ஆன் பைரவி (அணித்தலைவி – மன்னார் மாவட்டம்), பி.றஜித்தா (உப தலைவி – யாழ். மாவட்டம்), ஆன்பியூட்டி டயஸ் (மன்னார் மாவட்டம்), பி.தர்சாயினி (கிளிநொச்சி மாவட்டம்), எஸ்.தர்சினி (கிளிநொச்சி மாவட்டம்), ஜெ.சுகிர்தா (கிளிநொச்சி மாவட்டம்), ரி.பவதாரணி (யாழ். மாவட்டம்), கே.கிருஸ்ரிகா (யாழ். மாவட்டம்), மேரிபிறிஸ்கா (மன்னார் மாவட்டம்), பி.கலையரசி (யாழ். மாவட்டம்), ஜெ.ஜெ.நிரோசிக்கா (யாழ். மாவட்டம்), ஜனனிகுரூஸ் (மன்னார் மாவட்டம்), வை.மனோஜி (மன்னார் மாவட்டம்), மேரி டயானா (கிளி நொச்சி மாவட்டம்), எல்.அபிராமி (யாழ். மாவட்டம்). (ம-23)

# இமையாணன் மத்தி. கால்பந்தில் மகுடம்

யாழ்ப்பாணம், பெப். 25

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்கள் பிரிவு கால்பந்தாட்டத் தொடரில் இமையாணன் மத்தி. மகுடம் சூடியது.

அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவுவரை கோல்கள் எதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்தி. மகுடம் சூடியது. (ம-108-422)



## ரென்சொவுக்கு கண்டனம்

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் முதல் நாளில் ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரரான ரென்சொவ் பாதியில் வெளியேறியமைக்கு தனது கண்டனத்தைத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான அலன் போர்டர்.

ஆஸ்திரேலிய அணி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வோர்ணர் ஆட்டமிழந்தார். அந்த இடைவெளியில் ரென்சொவ் வெளியேறினார். வயிற்றுக் கோளாறு காரணமாகவே தான் வெளியேறினார் என்று பின்னர் தெரிவித்தார். இதற்கே போர்டர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

ஒரு வீரர் ஆட்டம் நடைபெறும் அன்றைய நாள் தனது உடல்நிலையை தனது கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். உணவு இடைவேளைக்கு இன்னும் 3 பந்துப்பரிமாற்றங்களே மீதமிருந்தன. எனவே ரென்சொவ் அதுவரை தாக்குப்பிடித்திருக்கலாம். பதில் வீரராக களமிறங்கியவர் வந்தவேகத்தில் ஆட்டமிழந்திருந்தால் நிலமை மோசமாகியிருக்கும் என்று போர்டர் மேலும் குறிப்பிட்டார். (ம)





## இரண்டே பந்துகளில் கோக்லி பவிலியனில்

இரண்டே பந்துகளில் கோக்லி பவிலியனுக்கு அனுப்பப்பட 105 ஓட்டங்களில் ஆஸ்திரேலியாவிடம் சுருண்டது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. யாதவின் வேகப் பந்துவீச்சு மிரட்டியெடுக்க அந்த அணி முதல் நாள் முடிவில் 256-9 என்றிருந்தது. ஸ்ராக் 57 ஓட்டங்களுடனும் ஹசில்வூட் ஓர் ஓட்டத்துடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் பவுண்டரியைப் பதிவு செய்து ஆட்டமிழந்தார் ஸ்ராக். 260 ஓட்டங்களில் ஆஸியின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. அதிகபட்சமாக ரென்சொவ் 68 ஓட்டங்களையும், ஸ்ராக் 61 ஓட்டங்களையும், வோர்ணர் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாதவ் 4 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், யடேஜா 2 இலக்குகளையும் ஜெயந் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்திய அணி 26 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் ஆரம்ப வீரரான முரளி விஜய். 6 ஓட்டங்களுடன் புஜாரா பவிலியன் திரும்பினார். களமிறங்கினார் கோக்லி. தொடர் ஆரம்பமாக முன்னர் கோக்லி எதிர் ஆஸ்திரேலியா என்றவாறாக முன்னாள் வீரர்கள் பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் அவரால் வெறும் இரண்டு பந்துகளையே தாக்குப் பிடிக்க முடிந்தது. கோக்லியை வெளியேற்றி இந்திய அணிக்கு உதறலை ஏற்படுத்தினார் மிரட்டல் மன்னன் ஸ்ராக். மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் லோகேஸ் ராகுல். ரகானே 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வீழ்த்தியவர் கெபி. 64 ஓட்டங்களுடன்கெபியின் சுழலில் லோகேஸ் ராகுலும் ஆட்டமிழந்தார். அஸ்வின், யடேஜா, சகா என்று மத்திய வரிசை வீரர்கள் ஒருவரேனும் இரட்டை இலக்கத்தில் ஓட்டத்தைப் பெறவில்லை. 105 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்தியா.

பந்துவீச்சில் கெபி 6 இலக்குகளையும், ஸ்ராக் 2 இலக்குகளையும், ஹசில்வூட், லையன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா நாள் முடிவில் 143-4 என்றுள்ளது. சிமித் 59 ஓட்டங்களுடனும், மிச்செல் மார்ஷ் 21 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இதுவரையிலுமான நிலவரத்தின் படி ஆஸ்திரேலிய அணி 298 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ம)

## போராடி வென்றது மேரிஸ்

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி போராடி வெற்றி பெற்றது.

சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சிவப்பிரகாசம் சம்பியன்

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித் தது. மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத் தில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி 25:22, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்க்ளையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## றேஞ்சர்ஸ், றோயல் வென்றன

யாழ்ப்பாணம், பெப். 25

சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ், ஊரெழு றோயல் அணிகள் வெற்றிபெற்றன.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றெஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது. இதில் றேஞ்சர்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை கலையொளி அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## ஆதிக்கத்தை ஆரம்பிப்பது யார்?

நியூசிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த இரு ஆட்டங்களில் முதலாவதில் தென்னாபிரிக்காவும் இரண்டாவதில் நியூசிலாந்தும் வெற்றிபெற்று 1:1 என்ற நிலையில் உள்ளன. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி தொடரின் ஆதிக்கம் செலுத்தும் என்பதால் இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மை இருக்கவே செய்யும்.

இந்த ஆட்டத்துக்காக நேற்றும் நேற்று முன்தினமும் இரு அணிகளும் கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டன. நேற்று முன்தினம் நடைபெற்ற இருவேறு செய்தியாளர் சந்திப்புக்களில் நியூசிலாந்து அணித்தலைவரான வில்லியம்சன் தனது அணி இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் என்றும், தென்னாபிரிக்க அணித் தலைவரான வில்லியர்ஸ் தனது அணி இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் என்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தினர். (ம)

## அல் ஹிஜிரா, அல் இக்பால் ஆட்டம் சமநிலை!

யாழ்ப்பாணம், பெப். 25

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அல் ஹிஜிரா, அல் இக்பால் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தொடரில் யங்ஸ்ராரின் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததை அடுத்தே ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## ஆஸியை வென்ற இலங்கை அணிக்கு உற்சாக வரவேற்பு



ஆஸ்திரேலிய மண்ணில் ரி-20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றி நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பிய இலங்கை அணிக்கு கோலாகல வரவேற்பு வழங்கப்பட்டது.

கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தை வந்தடைந்த உபுல் தரங்க தலைமையிலான இலங்கை அணி வீரர்களுக்கு இலங்கை ரசிகர்களின் பலத்த கரகோசத்துடன் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்த வரவேற்பைத் தொடர்ந்து விமான நிலைய வளாகத்தில் செய்தியாளர் சந்திப்பொன்று இடம் பெற்றது. ஆஸ்திரேலியத் தொடரில் தொடர் நாயகன் விருது வென்ற அசல குணரத்ன, ஆஸ்திரேலியத் தொடருக்கு முன்னதாக விளையாடிய தென்னாபிரிக்க ஆடுகளங்கள் ஆஸ்திரேலிய ஆடுகளங்களுடன் கிட்டத்தட்ட ஒத்துப்போகின்றன. இதுவே ஆஸ்திரேலியத் தொடரில் சிறப்பாகச் செயற்பட உதவியது எனத் தெரிவித்தார். (ம)

## பன்னாட்டு வீரர்களுக்கு மலிக் அழைப்பு


பாகிஸ்தானுக்கு வந்து விளையாட வேண்டும் என்று பன்னாட்டு வீரர்களுக்கு அழைப்பு விடுத்தார் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் மலிக்.

2009 ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய போது இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதற்குப் பின்னர் எந்த அணியும் பாகிஸ்தான் சென்று விளையாடவில்லை. ஒரேயொரு தடவை சிம்பாப்வே மட்டும் சென்று விளையாடியுள்ளது.

பாகிஸ்தானில் பாதுகாப்பு உள்ளது. அங்கு ஏனைய அணிகள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவேண்டும் என்று அப்ரிடி, இன்சமாம் உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் வலியுறுத்தி இருந்தனர். எந்தப் பயனும் இல்லை. இந்த நிலையில் மலிக் அழைப்பு விடுத்துள்ளார்.

எனது வீட்டிற்கு நான் பாதுகாப்பு வைத்துக்கொள்ளவில்லை. அயல் நாட்டு வீரர்களுக்கு நான் ஒரு தகவலை தெரியப்படுத்துகிறேன், அது என்னவெனில் எனது மனைவி இந்தியாவைச் சேர்ந்தவர். பாகிஸ்தான் வரும்போதெல்லாம் அவர் பாதுகாப்பை அமைத்துக் கொள்ளுவதில்லை இங்கு சிறந்த பாதுகாப்புள்ளது. எனவே பாகிஸ் தானுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்ள ஏனைய அணி நிர்வாக கங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று மலிக் மேலும் குறிப்பிட்டார். (ம)





# பார்சிலோனா கழகத்தில் மகிழ்ந்துள்ளார் மெஸ்ஸி

## பயிற்சியாளர் பவுசா தெரிவிப்பு

பார்சிலோனா அணிக்காக விளையாடுவதில் மெஸ்ஸி மிகவும் மகிழ்ச்சியாக உள்ளார் என்று ஆர்ஜென்ரீனா அணியின் தலைமைப் பயிற்சியாளர் எட்கார்டோ பவுசா தெரிவித்தார்.

மெஸ்ஸி, பார்சிலோனா அணியில் திருப்தியாக இல்லை. மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே விளையாடி வருகிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் பவுசா இவ்வாறு தெரிவித்தார்.

தனது குடும்பத்துடன் பார்சிலோனா அணியில் மெஸ்ஸி எவ்வளவு சந்தோசமாக இருந்து வருகிறார் என்பதை என்னால் பார்க்க முடிகிறது. மெஸ்ஸி மகிழ்ச்சியாக இருக்கும்போது அது அவருடைய சிறந்த ஆட்டத்திற்கு பயனளிக்கிறது. சிறந்த ஆட்டம் நிலைத்து நிற்க மனஉறுதி முக்கியமானது.

பார்சிலோனா அணியுடனான ஒப்பந்தம் 2018ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. அத்துடன் அவர் பார்சிலோனா அணியை விட்டுச் செல்வார் என்ற கருதுகோள்கள் தற்போதிருந்தே முன்வைக்க ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அது அவரின் விருப்பம். பார்சிலோனாவில் இருந்து விலகினால் மன்செஸ்டர் சிற்றி அவரை பிடித்துக்கொள்ளும். ஆனால் மெஸ்ஸி, பார்சிலேரனாவை விட்டுச் செல்ல வாய்ப்பில்லை. ஏனெனில் தற்போதுவரை அவர் அங்கு முழுத் திருப்தியுடன் உள்ளார்.

ஆர்ஜென்ரீனா அணிக்காக அவர் ஒன்றும் செய்யவில்லை, உலகின் சிறந்த வீரர் அவர் அல்ல, மிகவும் அபாயகரமான வீரர் இல்லை, மற்ற வீரர்களுடன் ஒப்பிடுகையில் சிறந்தவர் அல்ல என்று சிலர் தெரிவிக்கிறார்கள். ஆனால் நாங்கள் கடின முயற்சியுடன் அடுத்த உலகக்கிண்ணத்தை வெல்ல முயற்சி எடுப்போம். அதன்மூலம் எந்தவொரு நேரத்திலும் அவர்தான் சிறந்த வீரர் என்பதை உருவாக்குவோம் என பவுசா மேலும் தெரிவித்தார். (ம)

# தரப்படுத்தலில் முர்ரே முதலிடம்

பன்னாட்டு ரென்னிஸ் ஆண்கள் பிரிவு தரப்படுத்தல் நேற்றுப் புதுப்பிக்கப்பட்டது. பிரிட்டன் வீரர் முர்ரே முதலிடத்தில் தொடர்கிறார். கடந்த வாரங்களில் வெளியான தரப்படுத்தலே மீண்டும் வந்துள்ளது. பெரிய மாற்றங்கள் ஒன்றும் இல்லை.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று முடிந்தது. இறுதியாட்டத்துக்கு நடாலும் பெடரரும் தகுதி பெற்றிருந்தனர். பெடரர் சம்பியனானார். இதனையடுத்து அவர்களுக்கு தரப்படுத்தலில் முன்னேற்றம் கிடைத்தது.

தொடர் ஆரம்பிப்பதற்கு முன்ன தாக நடால் 10ஆவது இடத்தில் இருந்தார். ஆஸித் தொடரில் இரண்டாவது இடத்தைக் கைப் பற்றியதை அடுத்து அவர் 6ஆவது இடத்துக்கு முன்னேறினார். கடந்த 6 மாதங்களாக காயம் காரணமாக விலகியிருந்த பெடரர், தரப்படுத்தலில் 20ஆவது இடத்தில் இருந்தார். சம்பியனானதை அடுத்து அவர் 10ஆவது இடத்துக்கு முன்னேறினார்.



11 ஆயிரத்து 540 புள்ளிகளுடன் முர்ரே முதலிடத்திலும் 9 ஆயிரத்து 825 புள்ளிகளுடன் ஜோகோவிக் இரண்டாவது இடத்திலும், 5 ஆயிரத்து 695 புள்ளிகளுடன் வாவ்ரிங்கா மூன்றாவது இடத்திலும், 4 ஆயிரத்து 930 புள்ளிகளுடன் ரயோனிக் நான்காவது இடத்திலும், 4 ஆயிரத்து 830 புள்ளி களுடன் நிசிகோரி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு முதல் 10 வரையிலான இடங்களில் முறையே நடால், சிலிச், திம், மொன்பில்ஸ், பெடரர் ஆகியோர் உள்ளனர். (ம)

திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் விழா
Video Editing
யாழ்-நல்லூரில் Full Pack-Group Class
10 Days
20 Hours
Adobe Premiere CC, Edius 7, Adobe After Effect, Video Plug-ings, Looks, Adorage filter, New Blue Skin Touch-up, Video Color Tune-up, Gold Make-up, Song Editing Technic, Blu-ray Burning
மேலும் விபரங்களிற்கு: 0773903123

## தென்மராட்சி பிரதேச விளையாட்டு விழா

தென்மராட்சி, பெப். 25

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தடகள இறுதிப் போட்டிகள், கால்பந்தாட்ட இறுதியாட்டம், குழுநிலைப் போட்டிகள் ஆகியன நடைபெறவுள்ளன. கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் நாவற்குளி சான்றோர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

பிரதேச செயலரும் தென்மராட்சி விளையாட்டு அவைத் தலைவருமான திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளுக்கு தலைமை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சு.தெய்வேந்திரம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ம-9)

## ஆப்கான் – சிம்பாப்வே இறுதி ஆட்டம் நாளை

ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர் இரு சிறு அணிகளுக்கு இடையிலான தொடராக அமைந்தாலும் டெஸ்ட் கிரிக்கெட்டின் போக்கைத் தீர்மானிக்கப் போகும் தொடராகவும் அமைந்துள்ளது. தற்போது இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய பத்து அணிகளே டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடி வருகின்றன.



இந்த எண்ணிக்கையை 12 ஆக உயர்த்துவதற்கு அதாவது ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கும் டெஸ்ட் அந்தஸ்தை வழங்குவதற்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. இதனால் தன்னை டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு தகுதியான அணியென்று காண்பிக்க இந்தத் தொடரில் சிறப்பாகச் செயற்படவேண்டிய தேவை ஆப்கானிஸ்தானுக்கு உள்ளது. (ம)

## பார்சிலோனா – அத்லெட்ரிகோ நாளை எதிர்த்துப் பலப்பரீட்சை

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான தொடரில், நாளை இடம்பெறும் ஆட்டமொன்றில் பார்சிலோனா - அத்லெட்ரிகோ மட்ரிட் அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக நேற்றுமுன்தினமும் நேற்றும் இரு அணிகளும் கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டன. பார்சிலோனா அணியின் மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் ஆகிய மும்மூர்த்திகளின் கூட்டணி இந்த ஆட்டத்தில் களமிறங்கும் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.